REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி வார மலர்

யாழ் விலை: 40 00 விமானக்கட்டணத்துடன்



## கிழக்கின் வெற்றி வடக்கில் தொடருமா?

# இ.தொ.காவினர் பாய்ந்தார்களா? பயந்தார்களா?

# கிழக்கின் வெற்றி வடக்கில் தொடருமா?

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேசத்தின் குரல் ஓங்கி ஒலிக்கும் நிலையில் -

யுத்தநிறுத்த ஒப்பந்தம் இன்னமும் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதாக அரசும் விடுதலைப் புலிகளும் அறிவித்துக் கொண்டிருக்கும் நிலையில் -

கிழக்கை மீட்டுவிட்டோம். வடக்கை மீட்பதற்கான நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகும் என அரச தரப்பில் இருந்து அடிக்கடி செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில்-

தெற்கில் அரசியல் நெருக்கடிகள் எந்த நேரமும் வெடிக்கும் நிலையில் -

விலைவாசி அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்றவற்றுக்காக அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ...மடையும் நிலையில் -

...ாட்டில் யுத்தநிலை ஜூலை மாதத்தில் ...ல, ஓகஸ்ட் மாதமே யுத்த சூழல் ...டும் சாத்தியம் உள்ளதாக ஜோதிடர் ...ன ஆருடங்கள் வெளிவரும் நிலை... -

விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து ...ளிவந்துள்ள கருத்துக்கள் அபாயமான ...ழலுக்குள் நாடு சிக்கப்போகின் றது ...ன்பதற்கு அபாய மணி அடித்துள் ளன.

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'த சண்டே இந்தியன்' என்ற வார இதழுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் காட்டமான பேட்டியை வழங்கியுள்ளார்.

நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறவர்கள் தமிழர் தரப்புத்தான்; சிங்களவர் தரப்பு அல்ல என்பதை வலியுறுத்தும் வகையில் அந்தப் பேட்டியில் தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டுள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஒன்று மோதலில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இடையில் நடைமுறையில் உள்ளபோது, அனுசரணையாளர்களான நோர்வே அரசு தமது பணியில் இருந்து விலகாத போது, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் நோர்டிக் நாடுகளின் கண்காணிப்பாளர்கள் தமது கண்காணிப் புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு இருக்கும்போது -

மாவிலாறில் படை நடவடிக்கையை தொடங்கி வாகரை, மட் டக்களப்பு, தொப்பிகல என விஸ்தரித்து கிழக்கை முழுமையாக மோதலில் சம்பந் தப்பட்ட ஒரு தரப்பிடம் இருந்து பிடுங்கி வெற்றிவிழாவைக் கொண்டாடுகின்றது மறுதரப்பு.

பயங்கரவாதத்திடம் இருந்து மக் களை விடுவிக்கும் மனிதாபிமான நட வடிக்கை எனக் கூறிக்கொண்டு கிழக்கை மீட்டு அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டப்போவதாக அரசு கூறுகின்றது. தேர்தல்களை நடத்தி மக்களிடம் நிர்வாகப் பொறுப்பை கையளிக்கப்போவதாகவும் அரசுத் தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகின்றன.

தமிழர் பிரதேசங்களை கபளீகரம் செய்து இராணுவ மேலாண்மை கொண்ட ஆட்சி முறையைக் கொண்டு வந்து நாட்டில் அமைதியான சூழலை உருவாக்க முடியும் என்று கருதுபவர்கள் நாட்டின் கடந்த கால வரலாற்றைச் சற்றுத் திரும்பிப் பார்க்கவேண்டும் என்று கோருகின்றது தமிழர் தரப்பு.

நாடு சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டில் இருந்து ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைமைகள் எல்லாம் ஏதோ எலும்புத் துண்டைப் போடுவது போல் சில உரிமைகளை வழங்கி தமிழர் தரப்பைச் சமாளித்து வந்துள்ளன. இந்த சிறு சிறு சலு கைகளுக்காக தமிழ் தலைவர்களும் ஏமாந்துதான் போனார்கள்.

சிங்கள மேலாண்மை கொண்ட நாடு என்ற மமதை சிங்களத் தலைமைக ளுக்கு ஏற்பட்டு, தமிழர்களை வேலை வாய்ப்பு, உயர் கல்வி வாய்ப்பு போன்ற வற்றில் புறக்கணிக்க ஆரம்பித்தவுடன் அதனால் பாதிக்கப்பட்டவர்கள்தான் ஆயுதம் ஏந்திப் போராடி தங்களைத் தாங்களே ஆளும் நிலையை உருவாக்கப் புறப்பட்டனர்.

மிதவாத தமிழ்த் தலைவர்கள் நடத்திய சத்தியாக்கிரகம், உண்ணாவிரதப் போராட்டங்களில் பங்குகொண்டு, சிங்களத் தலைமைகளின் அடக்குமுறையை அனுபவரீதியாக உணர்ந்த இளம் தலைமுறை ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தள்ளப் பட்டது.

ஓரிரண்டு பேருடன் தொடங்கிய விடுதலைப் போராட்டம், அதற்கு சிங்களத் தலைமைகள் பயங்கர போராட்டம் என நாமம் சூட்டி, இளம் தலைமுறையின ரைக் கொன்று குவித்து வந்தபோதும், இன்று தனித்தரப்பாக எழுச்சி பெற்று நிற்கின்றது.

கெரில்லாப் பாணியில் ஆரம்பமான போராட்டம் இன்று தரைப்படை, கடற்படை, விமானப்படை போன்ற படைத்







துறைக் கட்டுமானங்களுடன் தனியான நிர்வாகக் கட்டமைப்புகளுடன் நிமிர்ந்து நிற்கின்றது.

நாட்டில் இரு படைகள் சமவலுவுள்ள நிலையில் வளர்ச்சி கண்டு, போம் பேசும் சக்தியாக வளர்ந்து நிற்கின்ற தமிழீழம் என்ற இலக்குடன் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகப் பிர தேசத்தில் தனியாட்சி ஒன்றை நிறுவி சுய நிர்ணய உரிமையுடன் வாழ விரும்பும் தமிழர் தரப்பு.

## ஜூலையில் அமைதி ஓகஸ்டில் யுத்தம் ஆருடம் பலிக்குமா?

அது சிங்களத் தலைமைகளுடன் நடந்த பேச்சுக்களில் ஐக்கிய இலங்கையின் சுய நிர்ணய ஆட்சி முறையின் கீழ் செயற்பட இணங்கியிருந்தது.

அதன்பின் உருவான சூழல்கள், தெற்குத் தலைமைகளின் போக்குகள் தமிழீழத்தை கட்டி எழுப்புவது என்ற தமிழர் தரப்பின் விடுதலை நோக்கிய போராட்டத்தை தீவிரமாக்கும் முடிவுக்குள் தள்ளிற்று.

தமிழ் மக்களின் தீர்மானங்கள், செயற்பாடுகள் தொடர்பான செய்திகள் வருடாவருடம் நவம்பர் மாதம் வரும் மாவீரர் நிகழ்வின் இறுதிநாளன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நிகழ்த்தும் மாவீரர் தின உரையில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் -

கடந்த 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற மாதத்தில் வந்த மாவீரர் தின உரையில் -

தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய தீர்வு யோசனையை மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்தால் பரிசீலிக்க தயாராக இருக்கின்றோம் என வெளிப்படுத்தி நேசக்கரம் நீட்டியிருந்தார்.

அதன் பின்னர் 2006ஆம் ஆண்டு வந்த மாவீரர் தின நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையில் -

சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்கு உரிமையை தரும் என்ற நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. மக்களுடன் இணைந்து சுயநிர்ணயப் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய முடி வுக்கு வந்துவிட்டோம் என்று கூறியிருந்தார்.

சுயநிர்ணய போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக தமிழர் தரப்பின் அறிவிப்பு வெளிவந்த பின்னர் இரு தரப்புகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் எல்லாம் ஸ்தம்பித்துபோயின. மோதல்கள் வெடித்து நிழல் யுத்தம் ஒன்று நடக்கின்றது.

அடுத்து வரும் மாவீரர் தின உரைக்கு முன்பாக பெரும் யுத்தம் ஒன்று வெடிக் கும் என எதிர்வு கூறப்படும் நிலையில் -

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் கருத்து வெளியாகியுள்ளது.

'மஹிந்த ராஜபக்ஷ அரசு பகிரங்கமாகவே தமிழர் தாயகத்தின் மீது ஒரு யுத்தப் பிரகடனத்தைச் செய்து அவ்வாறான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்ற நிலையில் நாம் அமைதிப் பேச்சுக்களைப் பற்றிக் கதைப்பதென்பது எந்த விதத்திலும் பொருத்தமாக இருக்கும் என்று நம்பவில்லை.'

அந்த வகையில் இனிமேல் அவர்களது இராணுவ முனைப்புக்களைச் செயலிழக்கச் செய்து அவற்றை முடக்குவதற்குரிய எமது தாக்குதல் உத்திகளை தீவிரப்படுத்தி எமது தற்காப்பு உத்திகளை முழு அளவில் செயற்படுத்தவே எண்ணியிருக்கின்றோம்.

''தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்கள மயப்படுத்த முனைவதும் மஹிந்த அரசின் நோக்கமாகும்.

இதை முறியடிப்பதற்கான தீவிர செயற்பாடுகளில் எமதும் எமது மக்களினுடைய செயற்பாடுகளும் தீவிரமடை யும். சிங்களப்படைகளின் வெற்றிக் கொண்டாட்டங்கள் மிக விரைவில் சிங்களப் படைகளுக்கான பேரழிவாகவே முடியும்.

''வடக்குப் பகுதி மட்டுமல்ல தமிழர் தாயகம் எங்கிலும் சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல்கள் விரிவடையும் நிலையில் அவை கடந்த காலங்கள் போலவே முற்றாக செயலிழக்கச் செய்யப்பட்டு தோற்கடிக்கப்பட்டு விரட்டியடிக்கும் நடவடிக்கையில் நாம் வெற்றி பெறுவோம் என்ற முழு நம்பிக்கையுடன் இருக்கின்றோம். தற்போது ஸ்ரீலங்கா படைகளின் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு முகம்கொடுப்பதற்கு தமிழ் மக்களும் நாமும் முழு அளவில் தயாராகிவருகின்றோம். விரைவில் இதற்கான பதிலடி யைக் கொடுப்போம்.''

விடுதலைப் புலிகளின் தலைமையின் தற்போதைய நிலைப்பாட்டை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ஆணித்தரமாக தமிழ்ச்செல்வன் வெளியிட்டுள்ளார்.

நோர்வேயின் அனுசரணைப் பணி கள் தொடர்ந்து கொண்டு இருக்கும் நிலையில், கண்காணிப்பாளர்களின் பணிகள் தொடர்கின்ற நிலையில், யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து நடை முறையில் இருக்கும் நிலையில் -

சிங்கள அரசு தாக்குதல்களைத் தொடருமானால் கைகட்டிக் கொண்டு இனிப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம் என்று எச்சரிக்கை விடும் வகையில் தமிழ்ச்செல்வனின் கருத்து வந்துள்ளது.

கிழக்கை மீட்டுவிட்ட மமதையில் வடக்கு நோக்கியதாக்குதல்கள் ஆரம்பிக்கப்படுமானால் நாடு சமாதான முயற்சிகள் எல்லாம் முறிக்கப்பட்டு நாலாம் கட்டப் போருக்குள் தள்ளப் படும்.

பெரும் உயிரிழப்புக்களையும் பெரும் உடைமைச் சேதங்களையும் உண்டு பண்ணப்போகின்ற இந்தப் போர், தனி யாக வடக்கில் மட்டுமல்ல இலங்கை முழுவதையும் தாக்கப் போகின்றன என எதிர்வு கூறப்படுகின்றது.

கடந்த ஐந்தரை ஆண்டுகால அமை திச் சூழலுக்கு விடைகொடுத்து மீண்டும் இரத்த ஆறு ஓடபோகின்றது இந்தச் சின்னஞ்சிறிய நாட்டில்.

இந்நிலைக்கு காரணகர்தாக்கள் யார்? நோர்வேயோ சர்வதேசமோ அல்ல. எமது நாட்டில் இருக்கும் தெற்குத் தலைமை தான்.

கடந்த 30 வருடங்களாக விடுதலையை நோக்கிய போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழர் தரப்பு சர்வதேசத்தின் பிரசன்னத்தில் அமைதி முயற்சியில் பற்றுறுதியுடன் செயற்படமுன் வந்தது. இதற்காக சிங்களத் தலைமைகளுடன் நேரடிப் பேச்சுநடத்தவும் முன் வந்தது.

கடந்த 5 வருடமாக நடந்த பேச்சுக்களில் தமிழர் தரப்பு எதிர்பார்த்த ஆகக் குறைந்த தீர்வைக் கூட முன்வைக்க சிங்களத் தலைமைகள் முன் வரவில்லை.

**யாழவன்**


தங்களின் அரசியல் அஞ்சலோட்டத்தை நடத்துவதில் சிங்கள தலைமைகள் அக்கறை காட்டிவந்தனவே தவிர, ஒட்டுமொத்தமாக இணைந்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வை வைக்க முன்வரவில்லை. ஆட்சியைப் பிடிப்பதற்கு தமி ழர் பிரச்சினையை துரும்பாக தெற்குத் தலைமைகள் பாவிக்க முன்வந்தனவே தவிர தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காண முன்வைக்க - முன்வரவில்லை.

இதன்காரணமாக தமிழர் தரப்பின் விடுதலை நோக்கிய போர் மீண்டும் தீவிரமடையப் போகின்றது. அதன் விளைவை தெற்குத் தலைவர்களும் - அனுவிக்கும் - உணரும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இந்த யதார்த்த நிலையை சிங்களத் தலைவர்கள் உணர்ந்து செயற்படப் போகின்றார்களா? அல்லது மீண்டும் ஒரு யுத்தம் ஏற்பட்டு இரு நாடுகளின் படைகள் நேரில் மோத அனுபவிக்கப்போகின்றன? அதைப் பொறுத்திருந்து பார்ப்போம். *

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.


முரளி என் கணவர்.
என் உலகமே அவர் தான்...!




கிரிக்கெட் முரளிக்கு தொழில் மட்டும்தான் அவரின் வாழ்க்கைமைதானம் வீடுதான்.

ஒரு தந்தையாக, கணவராக எங்களைக் காத்து வருகிறார்.

முரளிக்கு எங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியும். ஆயினும் எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று யாரால் சொல்ல முடியும்?

அதனால் தான் லைஃப் இன்சுவரன்ஸ் ஒன்றைப் பெற்றிருக்கிறார்.

செலிங்கோ லைஃப்

செலிங்கோ இன்சுவரன்ஸ்

சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ

134, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி (011) 2 461 461 இணையத்தளம் www.ceylincolife.com



# கொழும்புக்குச் செல்வதற்கு அலைச்சல்!

# நினைத்தபடி இடம்பெறுகிறது மின்வெட்டு!!

# தொலைபேசி பெறுவதற்கு கிளியரன்ஸ்!!!

**யாழ்.** குடாநாட்டு மக்களின் முதுகில் ஏறிநின்று கொண்டு அரச அதிகாரிகள் சிலர் விடும் சவாரிகள் பொதுமக்களுக்கு இப்போது ஓரளவுக்கு புரியத் தொடங்கியுள்ளது.
கீழ்மட்டத்தில் இருந்து மேல்மட்ட அரச அதிகாரிகள் வரை மக்களின் மீது தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அழுத்தங்களையும் சுமைகளையும் ஏற்படுத்தி வருகிறார்கள். இவர்களின் இத்தகைய செயற்பாடுகளுக்கு பாதுகாப்புத் தரப்பொன்றின் பெயர் முன்வைக்கப்படுகின்றமை மற்றொரு வேடிக்கையான விடயமாகவுள்ளது. அந்தத் தரப்பின் பெயரால் தாம் தமக்கு விரும்பியவற்றைச் செய்ய முனைகிறார்கள் சில அரச அதிகாரிகள்.

ஏ-9 பாதை மூடப்பட்டதன் மூலம் குடாநாட்டு மக்களின் பொருளாதாரம், போக்குவரத்துச் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டன. மக்களின் செயற்பாடுகள் மட்டுமன்றி பொது அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட்டன.

குடாநாட்டில் வகை தொகையின்றித் தொடர்ந்து வரும் கொலைகள், ஆள்கடத்தல்கள் போன்ற சம்பவங்களே இதற்குக் காரணமாக அமைந்தது. இதனால் குடாநாட்டில் வாழும் மக்களும் தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்று புரியாமல் விழி பிதுங்கி நிற்கிறார்கள்.

தமக்கு வேண்டியதைத் தாமே தீர்மானிக்கமுடியாதவர்களாகவும், பேச்சுச் சுதந்திரம் இல்லாதவர்களாகவும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள் குடாநாட்டு மக்கள். இத்தகைய சிலர் மக்களின் முதுகில் சவாரி செய்வதற்கு முயன்று வருகின்றமை மிகவும் கண்டனத்துக்குரிய விடயம்.

ஏ-9 பாதை மூடப்பட்டமையால் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் முதல் ஏனைய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்படாத விற்பனைக்கு உதவாத பொருள்கள் என்பன தனியார் வர்த்தகர்களாலும் கூட்டுறவுச் சங்கங்களாலும் பல மடங்கு விலைக்கு விற்றுத் தீர்க்கப்பட்டன.

பின்னர் அரசினால் குடாநாட்டுக்குக் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட பொருள்கள் பங்கீட்டு அடிப்படையிலும் பணம் செலுத்தியும் வழங்கப்பட்டன. இதன்போது வறுமை நிவாரணம், இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறுபவர்களுக்கு - அவர்கள் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன - அரச அதிகாரிகளின் தீர்மானத்தின் அடிப்படையில் பற்பசைகள், பால்மா பைக்கற்றுக்கள் போன்ற பொருள்கள் பலவந்தமாகத் திணிக்கப்பட்டன.

அதற்குப் பதிலாக வேறு பொருள்கள் தருமாறு கோரியபோதும் சங்கங்கள் அவற்றை வழங்க மறுத்துவிட்டன.

எந்தப் பொருளுக்கு வெளியில் தட்டுப்பாடு உள்ளதோ அந்தப் பொருள் சங்கக் கடைகளிலும் கிடைக்காது. சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறே அவர்களின் வியாபார நடவடிக்கைகள்.

தொழில்களை இழந்து அசையும் சொத்துக்களை விற்றும் நகைகளை அடகு வைத்தும் மக்களின் வாழ்க்கை அப்போது நகர்ந்ததை மறக்கமுடியாது.

அடுத்தநேரச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று திண்டாடும் குடும்பங்களுக்கு பற்பசையோ அன்றி பால்மா தேநீரோ அத்தியாவசிய மானதாக இருக்கமாட்டாது என்பதே உண்மையாகும். இதனைவிட்டு இவற்றைத்தான் பெறவேண்டும் என்று பொதுமக்களுக்குத் திணிக்கும் உரிமை யாருக்கும் இல்லை.

### கொழும்பு செல்லும் மக்கள் படாத பாடு

இதேபோன்று தற்போது கொழும்பு செல்வதற்கான பயண அனுமதி மற்றும் பங்கீட்டு அட்டைகள் பெறுவதில் பொதுமக்கள் அலைந்து திரியும் அவலத்தையும் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

கடிதத்தைப் பெற்றுக்கொண்டு பங்கீட்டு அட்டையில் பதிந்து கொடுக்கின்றன. சில இடத்தில் பங்கீட்டு அட்டையை காட்டி படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இதனைவிடுத்து படிவம் பெற கிராம அலுவலரின் சிபார்சு, மேலதிகாரிகளின் கையொப்பங்கள் என்பனவெல்லாம் மக்களின்மீது அதிகாரிகள் செலுத்தும் அதிகார வெறி என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஒரே நடைமுறையை ஒரு அரசாங்க அதிபரின் கீழ் உள்ள எல்லாப் பிரதேச செயலகங்களும் பின்பற்றினால் என்ன? அதில் ஏதாவது தடை உண்டா? அல்லது பிரதேச செயலகங்கள் தாம் நினைத்தவாறு செயற்படுகின்றனவா? அதுதான் தெரியவில்லை.

### நினையாத நேரத்தில் வரும் மின்சாரம்

குடாநாட்டில் இன்று மின்சார சபையின் செயற்பாடுகள் மக்களை மேலும் விசனத்துக்குள்ளாக்குவதாகவே உள்ளன. உயர்தரப் பரீட்சை

இதனையடுத்து செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் கூடிய மக்கள் வீதிக்கு இறங்கினார்கள். பிரதேச செயலகத்தைப் பூட்டி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதன்பின்னர் மின்சார சபையினால் மாலை நேரத்தில் சுழற்சி முறையில் 6மணியில் இருந்து 9மணி வரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, இளவாலை, ஏழாலை உட்பட மற்றும் பல இடங்களில் 10 மணித்தியாலயங்களுக்கு மேலாக மின்வெட்டு எந்தவகையான அறிவித்தலும் இன்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நேரத்தில் மனிதாபிமான முறையில் இது மேற்கொள்ளப்படுகின்றது.

பரீட்சை நடைபெறும் நேரத்தில் மின்சாரத்தை முன் அறிவித்தல் இன்றி நிறுத்தி வைப்பது மாணவர்களின் கல்வியை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பதையிட்டு அதிகாரிகள் சிந்திக்க மறுப்பது ஏன்? இது இன்றைய நிலையில் தம்மிடம் யாரும் எதையும் கேட்க மாட்டார்கள் கேட்க முடியாது என்ற தற்துணிவா?

அல்லல்படும் மக்களை மேலும் அல்லலுக்குள் தள்ளும் நிலையை அதிகாரிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும். உள்ளதை உள்ளபடி கூறி மக்களுக்கு சேவையைச் செய்வதே தர்மமும் நீதியும் ஆகும். அதனையடுத்து அதிகார வெறியில் தலைகீழ் தெரியாமல் தாண்டவமாடினால் இன்று இல்லாவிட்டாலும் நாளை தண்டனை கிடைக்கும்.

# எல்லாமே அரச அதிகாரிகளின் கைகளில்தான்: என்ன செய்வார்கள் யாழ்.குடாநாட்டு மக்கள்?

கொழும்பு செல்லப் பயண அனுமதிக்குச் செல்லும் மக்கள் கிராம அலுவலர்களிடம் கையெழுத்துப் பெறுவதற்கும் பிரதேச செயலகங்களுக்கும் அலைந்து திரியும் நிலைமையை இப்போது நாம் நேரடியாகக் காணக்கூடியதாக உள்ளது.



கொழும்பு செல்வதற்கான பயண அனுமதி பெறுவதற்கு முதலில் கொழும்பு செல்வதற்கான காரணத்தைக் காட்டிக் கடிதம் எழுதி கிராம அலுவலரிடம் கையொப்பம் பெற்றுப் பின்னர் பங்கீட்டு அட்டையுடன் பிரதேச செயலகம் சென்று அங்கு மேலதிகாரியிடம் கையொப்பம் பெற்று அதன்பின் படிவம் வழங்கும் லிகிதரிடம் சென்று படிவத்தைப் பெற்றுச் செல்லவேண்டும்.

மீண்டும் படிவத்தைப் பூர்த்திசெய்து கிராம அலுவலரிடம் கையொப்பம் பெற்று மீண்டும் பிரதேச செயலகத்திற்குச் சென்று மேலதிகாரியிடம் கையொப்பம் பெற்று இராணுவமுகாம்களுக்குக் கொண்டு செல்லவேண்டும்.

இராணுவமுகாமிற்கு சென்று படிவம் பெறுவதில் பொதுமக்கள் சிரமம் அடைகின்றார்கள் என்பதற்காகவே பிரதேச செயலகங்கள் ஊடாக படிவங்களை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

படிவம் பெறுவதற்குச் சில பிரதேச செயலகங்கள் பொதுமக்களிடம்

நடைபெறுகிறது என்றுகூட நினைக்காமல் தாம் விரும்பிய நேரங்களில் பல மணித்தியாலங்களாக மின்தடைகளை அவர்கள் ஏற்படுத்துவது எஞ்சியுள்ள எமது கல்வி வளத்தையும் அழிப்பதற்கு அவர்கள் துணை போகிறார்களா? என்றே எண்ண வேண்டியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இந்த மின்வெட்டுத் தொடர்ந்த வண்ணமுள்ளது. அது தொடர்பான விவரங்கள் மக்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை. வலி.தெற்கு, வலி.மேற்குப் பகுதிகளில் சில பகுதிகளுக்கும் வடமராட்சியில் சில பகுதிகளுக்கும் நேர காலம் இன்றி விரும்பியவாறு மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது.

இதனையிட்டுப் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணியும் சேவையாளருமான

வில்லவன்

செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் மின்சார சபை மற்றும் பிரதேச செயலர், அரசாங்க அதிபர் எனப் பலருக்கும் மக்களின் நிலையைச் சுட்டிக்காட்டிப் பல மகஜர்களை அனுப்பி உரிய நடவடிக்கையெடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதற்கு மின்சார சபையின் உயர் அதிகாரிகள் நாங்கள் விரும்பியதைத்தான் செய்வோம் என்று பதிலளித்துள்ளனர்.

### சி.டி.எம்.ஏ. தொலைபேசி பெறுவதற்கும் முன்னுரிமை

மற்றுமொரு பிரச்சினை பொது மக்களுக்கான சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகளைப் பெறும் விடயம். இதிலும்கூட சாமி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்காத நிலையே காணப்படுகின்றது. சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும் என பத்து வருடங்களுக்கு முன்னர் விண்ணப்பங்களைக் கொடுத்து காத்திருந்தவர்கள் முதல் இன்று வரை விண்ணப்பங்களைக் கொடுத்தவர்கள் வரை காத்திருக்கிறார்கள்.

இந்நிலையில் 'மோட்டோரோலா' தொலைபேசி இணைப்புக் கோபுரம் விழ்ந்தமையால் ஆயிரத்து 200 இணைப்புகளும் செயலிழந்தமையால் ரெலிக்கொம் நிறுவனத்தினால் படைத்தரப்பின் அனுமதியுடன் சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கும் படைத்தரப்பை சாட்டும் நிலையே காணப்படுகின்றது. தற்போதும்கூட விண்ணப்பங்களைக் கொடுத்தவர்கள் ரெலிக்கொம் நிறுவனத்திற்கு சென்றால் இராணுவத்திடம் இருந்து அனுமதி கிடைக்கவில்லை என்ற பதிலே கிடைக்கிறது. அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளோம் இன்னும் அனுமதி பெற்றுத் தரவில்லை என்றும் கூறப்படுகின்றது.

கடந்த மாதம் சுன்னாகத்தில் இடம்பெற்ற பொதுமக்கள், அரச அலுவலர்கள், மதகுருமார்கள் ஆகியோருடனான சந்திப்பின்போது இராணுவ உயர் அதிகாரிகள் சி.டி.எம்.ஏ. தொலைபேசிக்கு விண்ணப்பிக்குமாறு கூறியுள்ளார்கள்.

இது எதனைக் காட்டுகின்றது என்றால் இராணுவத்தினர் தொலைபேசி

(24ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.காவினர் பாய்ந்தார்களா? பயந்தார்களா?

இராஜினாமாச் சீற்றத்தை வைத்து துள்ளிக்குதித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இப்போது 'ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு' வந்து விட்டது. 'பிச்சை வேண்டாம்; நாயைப்பிடி!' என்று இரக்கும் கூட்டம் அதற்கு.

அரசுத் தரப்பிலிருந்து வீராவேசமாக வெளியே பாய முற்பட்டவர்கள், பயந்து நடுங்கி வாலைச் சுருட்டிக்கொண்டு அரசுத் தரப்பின் பின் வரிசைக்கு மீண்டதும், மீசையில் மண் ஒட்டிக் கொள்ளவில்லை என்பது போல இப்போது சமாளிக்க முயல்வதும் எதற்காக? இதன் பின்னணியில் பொதிந்துள்ள அர்த்தங்கள் - மர்மங்கள் - எவை?

இ. தொ.கா. தலைவர்களை ஜனாதிபதியின் ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ அழைத்து சூடாகக் கொடுத்ததற்கும், அதை வாங்கிக் கட்டிக்கொண்டு உணர்ச்சி வேகத்தில் இ.தொ.காவினர் இராஜினாமாக் கடிதங்களை விட்டெறிந்ததற்கும், அதேபோன்று, இராஜினாமா வேகம் அடங்க முன்னரே அரசுக்குத் தாம் ஆதரவு என்று அறிவித்ததற்கும் இரண்டு காரணங்களே பிரதானமானவை என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஒன்று - இ. தொ. கா. தலைமை, பதவி ஆசையில் அலையும் தனது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான கட்டுப்பாட்டை - அதிகாரத்தை - இழந்து வருகின்றமையும் அதை அரசுத் தலைமை நன்கு புரிந்து கொண்டமையும்.

அடுத்தது - இ.தொ. கா. தலைமையைத் தான் விரும்பியபடி இருத்தி, எழுப்பக்கூடியதாக இ. தொ. கா. தலைவர்கள் தொடர்பான 'குடுமிப் பிடி' தன்னிடம் வசமாகச் சிக்கியிருக்கின்றது என்பதை வைத்துக்கொண்டு, அரசுத் தலைமை நடத்தும் நாடகம். 'ஆட்டுவித்தால் ஆடாதோர் யாரோ.....?' என்ற நிலையில் ஆடவேண்டிய இக்கட்டு இ. தொ. காவுக்கு. அரசுத் தலைமையின் கைகளில் சிக்கியிருக்கும் - கடந்த காலச் செயற்பாடுகள் பற்றிய - கோவைகளே அரசுக்கு துரும்புச் சீட்டு.

இந்த இரண்டுமே இந்த இழுபறியின் பின்னால் புதைந்துகிடக்கும் மூலங்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பிக்கள் கட்சித் தலைமையின் கீழ் கட்டுப்படாமல் தம்பாட்டில் ஆளுக்கொரு அமைச்சுப் பதவிகளை வாங்கிக்கொண்டு அரசுப் பக்கம் தாவியதுதான் இந்த நாடாளுமன்றத்தில் பெரும் கேலிக்கூத்து. பொதுத் தேர்தலையே சந்திக்காமல் - தேர்தலுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்ட தேசியப் பட்டியல் வேட்பாளர் பட்டியலில் கூட இடம்பெறாமல் - இருந்துவிட்டு, தேர்தலின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தேசியப் பட்டியல் எம். பி. நியமனத்தை காலையில் பெற்றவர், மாலைக்குள் அரசுப் பக்கம் தாவி பிரதி அமைச்சர் பதவியைப் பெற்ற கோமாளித்தனத்தைக் கண்டோம். 'பல்டி அடித்தார் பைலா! ' என்று மக்கள் மனதில் நிலையாகப் பதியும் தலைப்போடு அந்தச் செய்தி ஊடகங்களில் பிரசுரமானது. இப்படி மு. காவிலிருந்து பதவிக்காகப் பாய்ந்த பிரகிருதிகளின் போக்கு பெரும் நகைப்புக்கு இடமானது.

இறுதியாக, தனது கட்சியில் எஞ்சியிருக்கும் ஒரு சில எம். பிக்களும் பதவி ஆசைக்காக அரசுப் பக்கம் தாவிவிடுவர் என்று அஞ்சிய மு. கா. தலைமை, வேறு வழியின்றி தானும் சேர்ந்து, அரசுக்கு அடிபணிந்து, அமைச்சுப் பதவிகளை ஏற்று, அரசுக்கு 'ஜால்ரா' போடவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானது.

இப்போதும் கூட மு. கா. தலைமைக்கு அரசுக்குள் நீடிப்பதில் விருப்பமில்லை. வெளியே வந்து எதிரணியில் அமர்வதுதான் நியாயம் என்பது அதற்குப் புரிகிறது. ஆனால் தம்முடன் வெளியேவர - அமைச்சுப் பதவிகளைத் துறக்க - தமது எம். பிக்கள் எத்தனைபேர் தயார் என்ற சந்தேகம் தலைவர் ஹக்கீமுக்கு. இதில் பெரும்பாலானோர் தனது காலை வாரிவிடுவர் என்பது அவருக்கு உறுதியாகத் தெரியும். அதனால்தான் அரசுக்குள் இருந்துகொண்டு மனம் புழுங்கி அதிருப்தி அறிக்கைகளை - விசனப் பேச்சுகளை - வெளிப்படுத்துவதோடு அடங்கவேண்டியவராக இருக்கிறார்

**- நவின் -**

ஹக்கீம்.

இ.தொ. கா. தலைமையின் நிலைமையும் இதுதான் என்றாலும் அதில் சற்று வித்தியாசமும் இருக்கத்தான் செய்கின்றது.

கடந்த தடவை இ.தொ.காவிலிருந்து நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப் பட்டவர்கள் எட்டுப்பேர்.

அவர்களில் மூவர் ஏற்கனவே அரசுப் பக்கம் குத்துக்கரணம் அடித்துவிட்டனர்.

ஒருவர் - பைஸர் முஸ்தபா. அவர் முஸ்லிம் ஆசிரியர்கள் நியமனத்தை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு, தமது நண்பரும் தம்மை எம்.பியாக நிறுத்திய வருமான ஆறுமுகன் தொண்டமானுடன் தனது அரசியல் உறவை முறித்துக்கொண்டு அரசுப்பக்கம் தாவிவிட்டார். அதற்குப் பதிலாக பொறுப்பான பிரதி அமைச்சையும் பெற்றுக்கொண்டார்.

அடுத்தவர் - வடிவேல் சுரேஷ் எம்.பி. இவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செல்லப்பிள்ளை இப்போது. மலையகத் தமிழர்களின் அரசியல் சக்தியான இ.தொ.காவினதும் அதன் தலைமையினதும் ஸ்திரத்தையும் கட்டுக்கோப்பையும் தகர்க்க - தறிக்க - மஹிந்தரின் தலைமை பயன்படுத்தும் கோடரிக்காம்பும் கூட இவரே என்று கூறப்படுகின்றது. இவரின் 'பல்டி' கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமானைப் பொறுத்தவரை 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்த' கதை.

மூன்றாவது நபர் - வி.புத்திரசிகாமணி. இப்போது பதில் மேல் பூனையாக அவர் காட்சி தந்தாலும் மஹிந்தவின் சால்வைத் தலைப்பில் தொங்கத் தயாராகவே இருப்பவர். இவரும் கட்சித்தலைமையும் ஒரு தரப்பை மறுதரப்பு எப்போதும் சந்தேகக் கண்கொண்டும், அதிருப்தியோடும் நோக்குவதால் இவர் எவ்வேளையிலும் அதிருப்திக் குழுவைச் சேர்ந்தவரே.

எஞ்சியிருக்கும் ஐவரில் இருவர் ஏற்கனவே - கட்சித் தலைமைக்கு மாறாக - அரசுத் தலைமையோடு இரகசியப் பேரம்பேச ஆரம்பித்துவிட்டனர் என்பது எல்லோருக்கும் கசிந்த சங்கதி. கட்சியில் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் 'சீனியரான' எம்.எஸ்.செல்லச்சாமியும் மற்றும் ஜெகதீஸ்வரன் எம்.பியும் அரசுத் தலைமையால் தனித்துக் கையாளப்பட்டு அதன் கட்டுப்பாட்டுக்குள் எச்சமயமும் வரக்கூடியவர்கள் என்பது அரசுத்தலைமைக்கு மட்டுமல்ல இ.தொ.கா. தலைமைக்கும் கூட நன்கு தெரிந்ததுதான்.

ஆக, நாடாளுமன்றில் இ.தொ.கா. தலைமையின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும் எம்.பிக்கள் மூவர்தான். ஒருவர் கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமான். முத்து சிவலிங்கமும், சச்சிதானந்தனும்தான் இன்றைய நிலையில் ஆறுமுகனின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியவர்கள்.

இந்த நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டுதான் பஸில் ராஜபக்ஷ தன் விருப்பப்படி இ.தொ.காவை இருத்தி எழுப்ப முயன்றார்; முயல்கிறார். அதில் ஓரளவுக்கு வெற்றியும் ஈட்டுகிறார்.

புலிபோல சீறிக்கொண்டு அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்த இ.தொ.கா. தலைமை, 'சோடா புட்டியின் காஸ்போல' சீற்றம் வந்த வேகத்திலேயே அடங்கி, அரசுத்தரப்பின் பின்வரிசை ஆசனங்களுக்குத் திரும்பிப் பூனைக்குட்டிபோல அடங்கிப்போனமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று - நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டமை போல, இ.தொ.கா. தலைமை தொடர்பான பல கோவைகளைத் தம்வசம் வைத்திருக்கும் அரசுத்தலைமை அதை வைத்துக்கொண்டு இ.தொ.காவை ஆட்டிப்படைக்க முயல்வது.

அந்த விடயங்களை தனியாக ஒரு புலனாய்வுக் கட்டுரையாக வரையலாம். அதை இந்தச் சந்தர்ப்பத்தில் கிளற முயல்வது 'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை'யாகிவிடும். எனவே, விட்டு விடுவோமே...!


ஆனாலும் ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. இ.தொ.காவினரின் அமைச்சர்கள் பதவி இராஜினாமா சூடாக அரங்கேறிய சமயத்தில் - கடந்த 5 ஆம்திகதி மாலையில் - தமிழ் எம்.பி. ஒருவருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் உரையாடினார். அப்போது விவகாரம் இ.தொ.கா. பக்கம் திரும்பியது. ''ஆறுமுகனுக்குத் துணிவிருந்தால் நாளை மறுதினம் (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றம் கூடும்போது எதிர்க்கட்சி வரிசையில் போய் அமரும்படி கூறுங்கள். பின்னர் நடப்பதைப் பார்ப்போம்!'' - என்று சவால்விட்டாராம் ஜனாதிபதி.

அச்சமயத்தில்தான் பொது நிகழ்வுகளில் பேசிய ஜனாதிபதி மஹிந்த ''அரசின் கதவுகள் திறந்தே இருக்கின்றன. எந்த அணியும் வரலாம். எந்த அணியும் போகலாம். ஆனால், அரசு ஸ்திரமாக இருக்கும்'' - என்று இ.தொ.காவின் பெயர் குறிப்பிடாமல் அதன் தலைமைக்கு 'செமடோஸ்' கொடுத்தார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)




# டோஹா - கட்டார்



டோஹா - கட்டார் இராச்சியத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொழில் வெற்றிடங்கள்

| வெற்றிடங்கள் | சம்பளம் (QR) |
|---|---|
| | 890 - 1000 |
| சட்டரின் தச்சுத் தொழில்நுட்பவியலாளர்கள் | 800 - 1000 |
| கம்பி கட்டுவோர் | 800 - 1000 |
| மின் தொழில் நுட்பவியலாளர்கள் (Steel Fixer) | 800 - 1000 |
| பிளம்பர் | 800 - 1000 |
| வெல்டர்கள் | 800 - 1000 |
| குழாய் பூட்டுவோர் (HVAC & Fire Piping) | 1000 - 1200 |
| டக்ட் இன்சுலேட்டர்கள் | 1000 - 1200 |
| நிர்மாணத் தொழிலாளர்கள் | 600 |

சேவை நிபந்தனைகள்

- ஒப்பந்த காலம் - 2 வருடங்கள்:
- உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவம் இலவசம்.
- சேவைக்காலம் - நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் மற்றும் மேலதிக படி உட்பட.
- 2 வருடங்களின் பின்னர் திரும்பவர இலவச விமானச் சீட்டு.

விரைவில் வெளியேறுதல்

நேர்முகப் பரீட்சை

2007 ஆகஸ்ட் 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் மு.ப. 9.00 மணியிலிருந்து வெளிநாட்டுக்கு முகவர்கள் மூலம் நடத்தப்படும்.

அகுரா வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு நிறுவனம்

53, ஒராபி பாஷா மாவத்தை, (தொழில் நுட்ப கல்லூரி அருகில்) மருதானை, கொழும்பு- 10.

தொலைபேசி: 0115- 375 565/7/8/9

AI/613/Advt/01/07

சுடர் ஒளி

ஒக.12 - ஒக.18. 2007

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

# பேரினவாதமும் சர்வதேச சமூகமும்

அரச படைகள் கிழக்கைக் கைப்பற்றிய பின்னா அடுத்தது வடக்கா என்ற கேள்வி எழுப் பப்பட்டு வரும் இந்த வேளையில், வடக்கு மீதான படை நடவடிக்கைக்கு தென்னிலங்கைப் பேரி னவாதக் கட்சிகள் அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வருவது நன்கு தெரிகிறது.

கிளிநொச்சியை அரச படைகள் கைப்பற் றுவதைத் தடுக்கவே அரசைக் கவிழ்க்க ரணில் முயற்சி செய்கிறார் என்று ஜாதிக ஹெல உறு மய கட்சியின் கொள்கை வகுப்பாளரும் சூழல் பாதுகாப்பு அமைச்சருமான சம்பிக்க ரணவக்க கூறி இருக்கிறார்.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்றக் குழுத் தலை வரும் அக்கட்சியின் பிரசாரச் செயலாளரு மான விமல் வீரவன்ஸ சமீபத்தில் நாடாளு மன் றத்தில் ஆற்றிய உரையும் இதனையே பிரதி பலித்துள்ளது. ஐ.நா. உயரதிகாரி ஜோன் ஹோம்ஸின் இலங்கை விஜயம் பற்றி விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவிக்கையில், ''கிழக்கை முற்றாகக் கைப்பற்றி அங்கு புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டி ஜனநாய கத்தை நிலை நாட்டியிருக்கும் அரச படையினா வடக்கையும் கைப்பற்ற முயலுகின்றபோது அதற்கு சர்வதேச நாடுகள் முட்டுக்கட்டை போடுகின்றன'' என்று குற்றம் சாட்டி உள்ளார்.

''தற்பொழுது இலங்கை வந்துள்ள ஐ.நா. உயர் அதிகாரி ஜோன் ஹோம்ஸும் அந்த தீய நோக்குடனேயே இங்கு வந்திருக்கின்றார். அரசு இத்தகைய நயவஞ்சகச் செயற்பாடுகளுக்கு இடம் அளிக்கக் கூடாது'' என்றும் அவா கூறியுள்ளார்.

அதே சமயம் வடக்கு மீது கை வைத்தால் சரியான பதிலடி கிடைக்கும் என்று விடுதலைப் புலிகள் எச்சரித்து உள்ளனர்.

ஆகவே வடக்கு மீதான படை நடவடிக்கை சுலபமானது அல்ல என்பது இவற்றில் இருந்து தெரிகிறது. கிழக்கு போன்று அன்றி வடக்கு விவகாரம் நாட்டை முழு அளவு யுத்தத்துக்குக் கொண்டு வந்துவிடும் என்பது சர்வதேச சமூ கத்துக்குத் தெரியும். அப்படியான நிலைமை ஏற்பட்டு நிலைமை மேலும் மோசமடை வதைத் தடுப்பதற்கும் மனித உரிமை மீறல் களை முடிவுக்கு கொண்டு வருவதற்குமே சர்வதேச சமூகம் முயன்று வருகிறது.

இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேசத் தின் தலையீடு ஏற்பட்டு நோர்வேயின் அனுசர ணைப் பணி ஆரம்பமான பின்பே இலங்கையில் இனப்பிரச்சினை இருக்கிறது, தமிழ் மக்கள் அங்கு அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் என்பது சர்வ தேசத்துக்குத் தெரிய வந்தது.

விடுதலைப் புலிகளை யுத்தம் மூலம் தோற் கடிக்க முடியாது என்ற நிலைமை உருவான பின்பு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நோர்வேயின் அனுசரணைப் பணியைக் கோரியவர் சந்தி ரிக்காதான். அவரின் கட்சிதான் தற்பொழுதும் ஆட்சியில் இருந்து வருகிறது. தற்பொழுது கிழக்கு வெற்றியை வைத்து தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டு இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச உதவி தேவை இல்லை என்கின்றனர் அதிகா ரத்தில் உள்ளவர்கள்.

மஹிந்தவின் அரசு பதவி ஏற்ற நாளில் இருந்தே சர்வதேச நாடுகளின் பணிகள் இலங்கையில் சிக்கல் நிறைந்தவையாக இருந்து வருகின்றன. சர்வதேசப் பணிகள் இலங்கை அரசினால் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப் படுகின்றன. இதற்குப் பிரதான காரணம் இலங் கையில் இடம்பெறும் அநீதிகள் சர்வதேச சமூகத்தினால் தட்டிக் கேட்கப் படுவதுதான்.

நவாலி தேவாலயம் மீதான குண்டு வீச்சின் போது நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். அரசு அப்பொழுது அதனை மறுத்தது. சர்வதேச சமூகமும் வாய் திறக்க வில்லை. ஆனால், இன்று நிலைமை மாறி விட் டது. செஞ்சிலு வைச்சங்க உறுப்பினர்கள் இருவர் கொழும்பில் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு ஐ.நா. கவலை வெளியிடும் அளவுக்கு இலங்கை இன விவகாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டு விட் டது. ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சி களுக்கு இதுதான் பிரச்சினையாக இருக்கிறது.

கிழக்கு நிலைமை ஸ்திரமானது அல்ல. கடந்த காலங்களில் அது புலிகளிடமும் அரச படைகளிடமும் பல தடைவைகள் கைமாறி இருக்கிறது. அதே போன்ற வடபகுதி கள நிலை மையும் எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்கும் என்று கருத முடியாது.

இவற்றை எல்லாம் மனதில் கொண்டு தான் ஐ.நா.மற்றும் சர்வதேச நாடுகள் செயற்படு கின்றன. இவற்றின் பணிகளைக் கொச்சைப் படுத்துவது நிலைமை மேலும் மோமடை யவே வழிவகுக்கும்.

# அடுத்த தேர்தலுக்கு அணிவியூகம் இப்போதே முஸ்தீபு

தமிழகத்தில் அடுத்து நடைபெறவுள்ள பெரிய தேர்தல் 2009 லோக்சபா தேர்தல் ஆகும். கடந்த லோக்சபா மற்றும் சட்டசபைத் தேர்தல்களில் தோற்ற



அ.தி.மு.க., ஆட்சிக்கு வர குறுக்கு வழிகள் பலவற்றை நாடியும் அவை வெற்றி அளிக்காமல் சேர்ந்து போயுள்ளது. ஆளும் காங்கிரஸ் - தி.மு.க. அணிக்குள் புகுந்து குட்டையைக் குழப்ப முயன்றும் அது நடக்கவில்லை. கலைஞர் - சோனியா நட்பும் உறவும் இன்னும் பலமாகியது தான் மிச்சம்.

எனினும் பா.ம.க. தலைவர் ராமதாஸ் வடிவத்தில் ஒரு சிறு வெற்றி அம்மாவுக்கு கிடைக்கத்தான் செய்திருக்கிறது. ராமதாஸ் - தி.மு.க மோதல் அம்மாவுக்கு மிக உவப்பான விஷயம் . அடுத்த தேர்தலில் அ.தி.மு.க. அணியில் பா.ம.க. இடம் பெறப்போகிறது என்பது இப்போதே ஓரளவு தெளிவாகிவிட்டது. எனவே அவரை தேர்தல் வரை காத்திராமல் உடன் தனது அணிக்கு வரும்படி அம்மா வற்புறுத்தி வருகிறார். இங்கே சிக்கல் என்னவென்றால் மத்தியில் ராமதாஸின் மகன் வகிக்கும் அமைச்சர் பதவியை இழக்க வேண்டிவரும் என்பதுதான். இதனை ராமதாஸ் விரும்பவில்லை. அடுத்த தேர்தல் 2009 வரை இழுத்து இழுத்து காங்கிரஸ் அணியில் தொடர்வதையே அவர் விரும்புகிறார். இப்போதே ராமதாஸ் மத்திய அரசிலிருந்து விலகினாலும் புதிதாக மாயாவதியின் 20 எம்.பிக்களின் ஆதரவு கிடைக்கவுள்ளது. எனவே மன்மோகன் அரசுக்கு பூச்சாண்டி காட்டமுடியாது. அம்மாவோ இப்போது வராவிட்டால் கடைசி நேரத்தில் கூட்டணியில் சேர்க்கமாட்டோம் என்பது போல பேசி வருகின்றார். ஏற்கனவே மூன்றாவது அணி முடிவை மீறி அம்மா பி.ஜே.பி.யின் ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களித்தார். இதனால் தமிழக பி.ஜே.பி.யினர் கரைபுரண்ட உற்சாகத்தில் உள்ளனர். அ.தி.மு.க-பி.ஜே.பி-பா.ம.க என பலமான எதிரணி உருவாகி வருவது தெட்டத் தெளிவு. இது கலைஞருக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும் விஷயமே. ஆனாலும் கலைஞரால் அதிகம் செய்யக் கூடியதும் ஏதும் இல்லை. காரணம் ராமதாஸை சாந்தப்படுத்துவது இலேசான காரியமல்ல. வைகோ தி.மு.க.வின் பரமவைரி. எனினும் தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட்கள் என தி.மு.க. அணியும் வலுவாகவே உள்ளது.

அம்மா திட்டமிட்டபடி கூட்டணி அமைந்து 2009 லோக்சபா தேர்தலில் பி.ஜே.பி ஆட்சிக்கு வந்தால் தி.மு.க.வை ஆட்சி கவிழ்க்கச் சொல்வாரா என்பது சுவாரஸ்யமான கேள்வி.

1998இலும் இந்த கூட்டணி அமைத்து கலைஞரை பதவி நீக்கம் செய்யச் சொல்ல வாஜ்பாய் மறுத்து விட்டார். இதனால் வாஜ்பாயையே கவிழ்த்தார் அம்மா. இந்த கசப்பான உண்மையை யார் மறந்தாலும் வாஜ்பாய் மறக்க மாட்டார்.

என்.வீரேந்திரஜித்

# கோதுமை மா, மண் எண்ணெய் விலை உயர்வால் தோட்டத் தொழிலாளர் திண்டாட்டம்

கோதுமை மா ஒருகிலோ ஐம்பது ரூபாவாகவும் ஒரு லீட்டர் மண் எண்ணெய் 68 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதால் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் இன்னல்களை அனுபவிக் கின்றனர்.



மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் 52சதவீதமான குடியிருப்புகளுக்கு மின்சாரம் இல்லை. இதேவேளை, இலங்கை முழுவதும் 22சதவீதமான வீடுகளுக்கு மின்சாரம் இல்லை என சமீபத்திய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தோட்டக் குடியிருப்பு களுக்கு மின்சாரம் வழங்கப்படுவதிலும் பாரபட்சம் காட்டப்படு கிறது. அரசியல், தொழிற்சங்க பேதம் காரணமாக சில தோட்டங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவதில்லையென தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மொத்தத்தில் பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த 48சதவீத குடியிருப்புகளுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. 52சதவீதமான குடும்பங்கள் விளக்குகளை நம்பியிருக்கின்றன. மண் எண்ணெய் விலை அதிகரித்துள்ள தால் இரவு 7 மணி வரையே விளக்கை ஏற்றிவைக்கக் கூடியதாகவுள்ளதாக தோட்டமக்கள் தெரிவிக்கின்றனர். இதனால், இக்குடும்பங்களில் கல்விபயிலும் பிள்ளைகள் இரவில் வீட்டுப்பாடங்களை படிக்கமுடியாமலும் பரீட்சைகளுக்கு தயாராக முடியாத நிலையிலும் பரிதவிக்கின்றனர்.

அரசு மீனவர்களுக்கும் சமுர்த்தி கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களுக்கும் மண் எண்ணெயை மானிய விலைக்கு வழங்கப்போவதாக கடந்தவாரம் அறிவித்துள்ளது. இருந்தும் தோட்டத்தொழிலாளர் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. முழுக்க முழுக்க வெளிநாட்டுச் செலாவணியைத் தேடித்தரும்

மலையகக் கண்ணோட்டம்

நிரஞ்சன்



தோட்டத் தொழிலாளர்களை அரசுபுறக்கணித்து விட்டது. இதுகுறித்து மலையக அரசியல்வாதிகள் எம்பிக்கள் அமைச்சர்கள் அலட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை.

தோட்டத்தொழிலாளர்கள் பொழுது புலரும் முன்னர் எழுந்து கடமைக்குச் செல்லத் தயாராவார்கள். இவர்கள் எளிதில் தயாரிக் கக்கூடிய கோதுமை மாவிலான ரொட்டியையே தயாரித்துக் கொள்வர். இது இவர்களுக்கு பொருளாதார ரீதியாகவும் கைகொடுத்துவந்தது. ஆனால், கோதுமை மாவின் விலை கிடுகிடு வென உயர்ந்து இப்போது ஐம்பது ரூபாவாகவுள்ளது. தோட்டத் தொழி லாளரின் வேதனத்தில் பெரும்பகுதி மண் எண்ணெய்க்கும் கோதுமை மாவிற்குமே செலவிடப்படுகின்றது.

கோதுமை மாவை மானிய விலையில் தோட்டத்தொழிலாளர் களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அரசும் ஜனாதிபதியும் தெரிவித்திருந்தனர். ஆனால், இதுவெறும் அறிவிப்புடன் மட்டுமே நின்றுவிட்டது. இதுகுறித்து இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் கொலுவிருப்போர் கொலுவில் வைக்கப்பட்ட பொம்மைகளாகவே இருக்கின்றனர். இவர்கள் தோட்டத்தொழிலாளர் குறித்து கவலைப் படுவதாகத் தெரியவில்லை. தோட்டத் தொழி லாளர்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப் படுவதில்லை.


இதனால், இவர்களுக்கு மானிய விலையில் மண் ணெண்ணெய் கிடைக்கப் போவதில்லை. இதுகுறித்து மலையகத் தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் வாய்மூடி மௌனம் சாதிக்கின்றனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதை ஏற்றுக்கொண்டு அரச ஊழியர்களுக்கும்

(24ஆம் பக்கம் பார்க்க)

# அம்பலாந்துறை வெறியாட்டம்; பேரினக் கொடூரத்தின் மற்றொரு வடிவம்!





அஸ்லம் எஸ்.மௌலானா

தென்னிலங்கையில் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் காலத்திற்குக் காலம் வெடித்து கொண்டே இருக்கின்றன. சிங்களப் பேரினவாத சக்திகள் திட்டமிட்டு அரங்கேற்றுகின்ற கொடூரங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

பாணந்துறை- அம்பலாந்துவையில் சமீபத்தில் இடம்பெற்ற சூடு தணிவதற்குள் அப்பிரதேசத்திலுள்ள 'வத்தல் பொல' கிராமத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் சில தீக்கிரையாக்கப் பட்டிருக்கின்றன.

**ஒத்து ஊதும் தலைமைகள்!**

தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற இச்சம்பவங்களினால் அப்பகுதி முஸ்லிம்கள் பெரும் பீதியடைந்து காணப்படுகின்றனர். சொந்த மண்ணிலேயே தமது வாழ்வியல் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அவர்கள் அச்சம் வெளியிடுகின்றனர்.

எனினும் வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அரசு வெளியிடும் அறிக்கைகளுக்குப் பக்கவாத்தியம் பாடி- ஒத்து ஊதும் வேலைகளையே முஸ்லிம் அரசியல் தலைமைகள் செய்து வருகின்றன.

இதனால் முஸ்லிம்களுக்கெதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அக்கிரமங்களின் பின்னணி குறித்தும் சமூகத்தின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கான வழி வகைகள் தொடர்பாகவும் ஆராய வேண்டிய பாரிய பொறுப்பிலிருந்து இத்தலைமைகள் விலகிக் கொள்வதோடு, சிவில் சமூக அமைப்புகளையும் தூரவிலக்கித் திரையிட்டு விடுகின்றன. இரு முஸ்லிம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்ட அம்பலாந்துவை வெறியாட்டம் வெறும் கோஷ்டி மோதலாக சித்திரிக்கப்பட்டு - சமூகப் பாதிப்புகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

**அரசு அனுசரணை!**

மாவனல்லை, மாளிகாவத்தை கலவரங்கள் தொடக்கம் அம்பலாந்துவை அனர்த்தம் வரையான அனைத்து வன்முறைகளும் முஸ்லிம்களுக்கெதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களாக இருந்த போதிலும் அவை தொடர்பில் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாமல் சூத்திரதாரிகளைத் தப்பிக்க வைப்பதற்கான ஏற்பாடுகளே செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சிங்களப் பேரினவாத சக்திகள், முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொண்டு வருகின்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்கள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்காமல் அந்த சக்திகளுக்கு மறைமுக ஆதரவை வழங்கி வந்திருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அம்பலாந்துவையில் சுமார் ஒரு வார காலம் தொடர்ச்சியாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த போதிலும் பொலிஸார் பாரபட்சமாகவே நடந்து கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

கலவரத்தைக் கட்டுப்படுத்தி - சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டிய பொலிஸ் அதிகாரிகள் பேரின வன்முறைக் கும்பலுக்கு ஆதரவாகவே செயற்பட்டனர் என்று அப்பகுதி முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

**பொலிஸாரின் பாரபட்சம்!**

முஸ்லிம்களின் குடியிருப்புகளை அடித்து நொறுக்கியும் , வர்த்தக நிலையங்களை எரித்து நாசமாக்கியும், சொத்துகளை சூறையாடியும், அப்பாவி முஸ்லிம்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியும் கொடூர வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்ட சக்திகளைக் கட்டுப்படுத்தாமல்- பேரினகாட்டுத் தர்பாரை எதிர்த்துப் போராடிய முஸ்லிம் இளைஞர்களுக்கு விலங்கு மாட்டுவதிலேயே பொலிஸார் முனைப்புக் காட்டியுள்ளார்.

ஆனால் பகிரங்கமாகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்து அப்பாவி முஸ்லிம்கள் இருவரின் உயிர்களைப் பலியெடுத்த சிங்கள ஆயுததாரிகளைக் கைது செய்வதற்கோ, முஸ்லிம்களுக்கு எதிரான கொடூரங்களைக் கட்டுப்படுத்துவதற்கோ பொலிஸ் அதிகாரிகளால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை முஸ்லிம்களின் வீடுகளும், வர்த்தக நிலையங்களும் பொலிஸார் முன்னிலையிலேயே அடித்து- நொறுக்கி எரித்து நாசமாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு முனைந்த முஸ்லிம்கள் பொலிஸாரால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸார் பாரபட்சமாக நடந்து கொள்வதற்கு அரசியல் அழுத்தங்களே காரணமாக அமைந்திருக்கின்றன, எனத் தெரிய வருகிறது. பேரினவாதக்கும்பல் மற்றும் பாதாள உலகக் கோஷ்டிகளுக்குப்பக்க பலமாக அதிகார அரசியல் வாதிகள் இருந்து வருகின்றனர் என்பது பகிரங்க உண்மையாகும்.

**தீயில் எரிந்த மாவனல்லை!**

சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளின் பின்னணியில் பொதுவாக அரசியல் சக்திகளே பின்னணியில் இருந்து செயற்பட்டு வருகின்றன. சில சம்பவங்களைத் தவிர பெரும்பாலான நிகழ்வுகள் அப்படியே அரசியல் சகதிக்குள் மூழ்கடிக்கப்பட்டு விடுகின்றன.

1997 ஆம் ஆண்டு முஸ்லிம்களின் மாவனல்லை நகரம் ஒரே இரவில் முழுமையாக எரித்து நாசம் செய்யப்பட்டது. அப்போது சந்திரிக்கா குமாரதுங்கவின் பொ.ஐ.மு. அரசின் பிரதான பங்காளிக் கட்சியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கம் வகித்து வந்ததோடு அதன் தலைவர் மர்ஹூம் எம்.எச். எம்.அஷ்ரஃப் சக்தி வாய்ந்த அமைச்சராகவும் திகழ்ந்தார்.

அப்போது இச்சம்பவத்தின் சூத்திரதாரியாக அந்த அரசில் பிரதி அமைச்சராகப் பதவி வகித்த மஹிபால ஹேரத் என்பவர் அடையாளம் காணப்பட்டார். அவரை அமைச்சுப் பதவியில் இருந்த விலக்குமாறு தலைவர் அஷ்ரஃப் ஜனாதிபதி சந்திரிக்காவிடம் கண்டிப்புடன் வலியுறுத்தினார்.

ஆனால் மஹிபால ஹேரத் விலக்கப்படவுமில்லை. அவருக்கு தண்டனை வழங்கப்படவுமில்லை. இன்று சப்ரகமுவ மாகாண முதலமைச்சராக அவர் உயர்ந்து நிற்கிறார்.

**அமைச்சர் ஜெயராஜ் குதர்க்கம்!**

அம்பலாந்துவை சம்பவத்தின் பின்னணியிலும் அரசியல் சக்தியொன்றின் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. அரசில் அங்கம் வகிக்கின்ற ஜாதிக ஹெல உறுமய அப்பகுதியில் சிலைகளை நிறுவுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே அங்கு முஸ்லிம்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதாக நம்பப்படுகிறது.

ஆனால் அரச தரப்பில் சொல்லப்பட்ட காரணம் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று அமைந்திருக்கிறது. போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபடும் சிங்கள- முஸ்லிம் குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளே மோதலாக வெடித்து இனக்கலவரமாக மாறியது என்று அரசின் பிரதான கொறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அதேவேளை கலவரத்தின்போது பாரபட்சமாகச் செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள், பதவிகளில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

முஸ்லிம்கள் மீது ஒருதலைப்பட்சமாக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை இனக்கலவரம் என்றும் அது போதைவஸ்து வியாபார சர்ச்சையில் தொடங்கியது என்றும் அமைச்சர் ஜெயராஜ் கூறியிருப்பது அப்பட்டமான பொய்யாகும்.

**சிறுமைப்படுத்தும் பிரயத்தனம்!**

முஸ்லிம்கள் மீது தொடுக்கப்பட்ட கொடூரங்களை மூடிமறைத்து- அவ்விவகாரத்தை வேறு வடிவில் சித்திரித்து சிறுமைப்படுத்துவதே இக்கருத்தின் நோக்கமாகும். ஆனால் முஸ்லிம் தலைமைகள் கூட உண்மை நிலையை அம்பலப்படுத்தாமல் அடங்கிப் போயுள்ளனர்.

அனைத்து முஸ்லிம் கட்சிகளும் அரசில் அங்கம் வகித்துக் கொண்டு- சகலரும் அமைச்சர்களாகப் பதவி வகித்து வருகின்ற நிலையில் சமூகத்திற்கு இழைக்கப்பட்டு வருகின்ற அநீதிகளையும், அட்டூழியங்களையும் தட்டிக் கேட்க வக்கற்ற ஜடமாக முஸ்லிம் சமூகம் மாறியுள்ளது.

அரசுக்கு ஆதரவுக் குரல் எழுப்புவதில் நான் முந்தி நீ முந்தி என்று முண்டியடித்துக் கொண்டு ஜனாதிபதிக்கு வால் பிடிக்கும் அறிக்கைகளையே முஸ்லிம் கட்சிகளும், தலைமைகளும் செய்து வருகின்றன.

போதாக்குறைக்கு கண்ணியம்மிக்க உலமாக்களின் பெயரால் உருவெடுத்துள்ள கட்சியும் முஸ்லிம்களின் நலன்களை விட அரசினதும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும் நலன்களிலேயே கூடிய அக்கறை காட்டி வருகிறது.

ஆகையினால் முஸ்லிம் அரசியல் தலைமைகளை ஒருபுறம் தள்ளி வைத்து விட்டு சிவில் சமூக அமைப்புகளைக் கட்டியெழுப்புவது குறித்து தீவிரமாக சிந்திப்பது அவசியமும், அவசரமாகும் என்பதைப் புரிந்துகொள்வோமாக.


## இந்திய யாத்திரை
## தென் இந்திய புனித யாத்திரை

ஆறுபடை வீடுகள், திருப்பதி உட்பட 30க்கும் மேற்பட்ட பிரதான கோவில்களுக்கு செல்லுதல் மற்றும் புனித இடங்களை பார்வையிடுதல்.

குளிரூட்டப்பட்ட வாகன வசதி, உயர்தர விடுதிகளில் தங்கும் வசதி, முதல்தர சைவ உணவு வகைகள்.

மேலும் அனுபவம் வாய்ந்த வழிகாட்டிகளுடன் இன்னும் பல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். கல்கி பகவான் தரிசனத்துக்கான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0777 271222



## STUDY IN MALYASIA, SINGAPORE, AUSTRALIA, LONDON & CANADA

Minimum Qualification G.C.E(O/L)

For Septemper 2007 Intake

100% VISA Guaranteed

For Malaysia & Singapore:
- IELTS, TOEFL & Bank balance are not necessary
- 100% Transeferable Degree Programme (UK, USA, CANADA & AUSTRALIA)
- Free (Malaysia One Month) Accommodation, Food & Transport)
- 5 நாட்களுக்குள் பயணம்.
- சிங்கப்பூரில் நீங்கள் செலவழித்த பணத்தை நான்கு மாதங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

Guaranteed
தங்குமிட வசதி
பகுதி நேர வேலைவாய்ப்பு

Guidance by a Professional with 7 years Experience

Available Courses
- Business Administration
- Computing & IT
- Law
- Hotel Management
- Engineering
- Medicine
- Shipping Courses

All Courses are available in any field.

FOR MORE INFORMATION PLEASE CONTACT
Sahana - 0773 946474
Anu - 0773 946466

We assure the best return

## OPEN INSTITUTE OF COLOMBO

OIC City Campus,
No: 40-3\1A, Galle Road, 3rd Floor
(adjoining HSBC Bank )
Wellawatte
Colombo-06
Tel: 011 5752747, Fax: 011 5755235.
Web: www.oiccitycampus.com
E-mail: info@oiccitycampus.com

# சுயநிர்ணய உரிமையும் தமிழீழத் தனியரசும்

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகள், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் யாவுமே இன்று பயனற்றுப்போயுள்ளன. முன்னைய சிங்கள அரசுகள் போன்றே மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய அரசும் தமிழ்மக்களுக்கு எதிரான அரசியல், இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அத்துடன், போக்குவரத்துத் தடை, பொருளாதாரத்தடை, உணவு மருந்துத் தடை, மீன்பிடித்தடை, கொலை, ஆட்கடத்தல் என்று தமிழின அழிப்பைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது.

இத்தகைய நிலையில், தமிழீழத் தனியரசு ஒன்றுதான் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியது என்கின்ற யதார்த்தம் நிரூபணமாகி வருகின்றது. மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்தபோது, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் 2005 ஆம் ஆண்டு தன்னுடைய மாவீரர் தினப் பேருரையின்போது 'தமிழ்மக்களின் அரசியல் வேட்கைகளைத் திருப்திசெய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தைக் குறுகிய கால இடைவெளிக்குள் மகிந்தவின் அரசு முன்வைக்கவேண்டும்' என்று அவசர வேண்டுகோளை முன்வைத்திருந்தார். 'எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்துக் கடும்போக்கைக் கடைப்பிடித்துக் காலத்தை இழுத்தடிக்கப் புதிய அரசாங்கம் முற்படுமேயானால், நாம் எமது மக்களுடன் ஒன்றிணைந்து எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை எமது தாயகத்தில் தன்னாட்சியை நிறுவும் தேசச் சுதந்திரப்போராட்டத்தை அடுத்த ஆண்டில் தீவிரப்படுத்துவோம்' என்றும் தலைவர் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவின் சிங்கள பௌத்த பேரினவாத கடும்போக்கு நடவடிக்கைகள், சகல எதிர்பார்ப்புகளையும் சிதறடித்தன. ஆகவே, தமிழீழத் தேசியத்தலைவர் கடந்த ஆண்டு (2006) தன்னுடைய மாவீரர் தினப்பேருரையின்போது கீழ்வருமாறு தெரிவித்திருந்தார்.

'சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரேயொரு பாதையைத்தான் இன்று தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கின்றது. எனவே, இந்த விடுதலைப் பாதையில் சென்று சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதென இன்றைய நாளில் நாம் தீர்க்கமாக முடிவுசெய்திருக்கின்றோம். எமது அரசியற் சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழி நடக்கும் உலகநாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகின்றோம்.

ஆகவே, சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டின் அடிப்படையில் சுதந்திரத் தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கான போராட்டம் தீவிரப்படுத்தப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் இந்தக் கோட்பாட்டின் ஊடாகக் கருத்துகளை முன்வைத்துச் சில விடயங்களைத் தர்க்கிக்க விழைகின்றோம்.

சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு குறித்துத் தமிழீழ தேசியத்தலைவர் நெடுங்காலமாகவே வலியுறுத்தி வந்துள்ளார். ஐக்கியநாடுகள் சபையின் ஆய்வு (United Nations Study) சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு குறித்தும் பிரிந்துசெல்லும் உரிமைக்குத் தகுதியானவர்கள் குறித்தும் சில வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளது. அதன்படி 'வரலாற்று ரீதியாக தம்முடைய பாரம்பரிய மண்ணில் தமது தனித்துவமான பண்பாடோடு, தம்மைத் தாமே திறமையாக ஆண்டுவந்த மக்கள் மீண்டும் தம்மைத் தாமே ஆள்வதற்கு உரிமையைக் கொண்டவர்கள்' என்ற கருத்துப்பட ஐக்கியநாடுகள் சபையின் ஆய்வு, பல காரணிகளை முன்வைத்துள்ளது. சுயநிர்ணய உரிமை குறித்துக் குறிப்பிடுகின்ற உலக நீதிமன்றம் (International Court of Justice)'இது அரசுக்கு மட்டும் உள்ள உரிமை அல்ல, இது மக்களுக்கும் உள்ள உரிமையாகும்' என்று தெரிவிக்கின்றது.

'உலக நீதிமன்றமும்', Inter-American Commission on Human rights of the



Organisation of the American States உம் சுயநிர்ணய உரிமை குறித்துப் பொதுவாக பல கருத்து நிலைகளை அறிவித்துள்ளன. மக்களுடைய சுயநிர்ணயத்திற்கான உரிமையைச் சகலரும் சகலவேளைகளிலும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இவை தெரிவித்துள்ளன. அத்தோடு மேலும் ஒரு முக்கியமான விடயத்தையும் இவை தெரிவித்துள்ளன. சுயநிர்ணய உரிமைக்குச் சட்டரீதியான அந்தஸ்து உள்ளது என்றும் இவற்றை ஏற்று மதிக்கவேண்டியது சர்வதேசத்திற்குரிய ஒரு கட்டாயக் கடமையுமாகும் என்றும் இவை தெரிவித்துள்ளன.

தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசென்று தனியரசை அமைக்கின்ற சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை மேற்கூறிய சட்டங்களும் கோட்பாடுகளும் தெரிவிக்கின்றன. இதனை ஒட்டி வரலாற்று ரீதியான ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விழைகின்றோம்.

போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இலங்கையைக் கைப்பற்றியபோது அப்போது அங்கிருந்த அரச நிர்வாகத்தின்படியே அவர்கள் இலங்கையை ஆண்டார்கள். அவற்றினூடாகத் தமிழ்ப்பகுதி அரச நிர்வாகமும் சிங்களப் பகுதி நிர்வாகமும் தனித்தனியே செயற்பட்டன. ஆனால், பின்னாளில் இலங்கையைக் கைப்பற்றிய பிரித்தானிய அரசு தனது வசதிக்காக இரண்டு தேசங்களையும் ஒன்றிணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தது. ஆனால், அவ்வாறு ஒருங்கிணைப்பது குறித்துப்பெரும் குழப்ப நிலையிலேயே அன்று பிரித்தானியா இருந்திக்கின்றது. அவர்களின் இந்தக் குழப்பநிலையை அவர்களது ஆவணம் ஒன்று குறிப்பிடுகின்றது.

பிரித்தானிய அரசின் இலங்கைக்கான காலனித்துவ ஆட்சியின் முதல் செயலாளர் (First Colonial Secretary) சேர் ஹியு கிளட்ஹோர்ன் என்பவர் ஆவார். அவர் 1799 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமான ஆவணக் குறிப்பொன்றை எழுதியுள்ளார். அந்த ஆவணக்குறிப்பில் அவர் 'இந்தத் தீவில் இரண்டு வித்தியாசமான தேசங்கள் பண்டைக் காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளன. இந்த இரண்டு தேசங்களும் தங்களுடைய மொழி, மதம், பண்பாடு ஆகியவற்றால் முற்றாக வேறுபட்டுள்ளன. தமக்குள்ளே முரண்பட்டும் உள்ளன. இந்த இரண்டு தேசங்களையும் எவ்வாறு (இணைத்து நிர்வகிப்பது) என்று எனக்குத் தெரியவில்லை Never Worked என்று குறிப்பிடுகின்றார்.

ஆனாலும் பிரித்தானிய அரசு இலங்கைத் தீவில் இருந்த இரண்டு தேசங்களையும் இணைத்தது. தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை அன்றே பிரித்தானிய அரசு உணர்ந்து கொண்டிருந்தது. நாம் முன்னர் சுட்டிக்காட்டியதுபோல தமிழர்கள் முற்றாக வேறுபட்ட மொழி, பண்பாடு, நிலம் ஆகியவற்றைக் கொண்டவர்கள் என்பதை பிரித்தானிய அரசு ஆவணப்படுத்தியுமுள்ளது. ஆனால், பிரித்தானியா இலங்கைத்தீவை விட்டுச் சென்றபோது அதனைச் சரியானமுறையில் விட்டுச்செல்லவில்லை. பிரித்தானிய அரசு இரண்டு தேசங்களையும் ஒன்றிணைத்தது முதல் தவறாகும். பின்னர் அவற்றைப் பழையபடி பிரிக்காமல் சென்றது இரண்டாவது தவறாகும். இன்றைய பிரச்சினைக்கு இதுதான் மூலகாரணமாகவும் விளங்குகின்றது.

பிரித்தானியா தனது குடியேற்ற நாடுகளை விட்டு விலகிச்சென்றபோது பொதுவாகச் சரியான முறையிலேயே சுதந்திரத்தை வழங்கிச்சென்றது. ஆனால், இலங்கைத் தீவைப்பொறுத்தவரையில் பிரித்தானியா மாபெரும் தவறை இழைத்துவிட்டது. இதற்கான தார்மீகப்

**அவுஸ்திரேலியாவில் இருந்து**
**சபேசன்**

பொறுப்பை பிரித்தானிய ஏற்றுக்கொண்டு தனது தவறை நிவர்த்திக்கும் முயற்சியில் முழுமையாக உடனே இறங்கவேண்டும்.

இன்று பிரித்தானியா இலங்கைத்தீவில் சமாதானம் வரவேண்டும் என்று சும்மா பேசிக்கொண்டு நிற்கின்றது. ஆனால், பிரித்தானியா தன்னுடைய நாடு என்று வரும்போது சில சரியான செயற்பாடுகளைச் செய்திருக்கிறது. ஸ்கொட்லாண்ட், வேல்ஸ் போன்றவை தமக்குரிய உரிமைகளைக் கேட்கும்போது பிரித்தானிய அரசு உரிய விட்டுக்கொடுப்புகளைச் செய்து, அதிகாரப்பரவலாக்கலைத் தொடர்ந்து செய்துகொண்டே வந்துள்ளது. இவர்களுக்கென்றே தனி நாடாளுமன்றங்களை அமைத்து, கிட்டத்தட்ட ஒரு சுயாட்சி அமைப்பை பிரித்தானியா உருவாக்கிக் கொடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசைப்போல், 'அதனைக்கேட்க முடியாதுஇதைப் பேசமுடியாது என்று பிரித்தானிய ஸ்கொட்லாண்டுக்கும் வேல்ஸுக்கும் சொல்லவில்லை. இதே பிரித்தானியா இலங்கை விடயம் குறித்து பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று சொல்கின்றபோது தன்னைப்போல் ஸ்ரீலங்கா அரசு பிரச்சினையைத் தீர்க்கமுன்வரவில்லை என்பதையும் அறிந்தே வைத்துள்ளது. தமிழர்கள் பிரிந்து போவதுதான் சரியான ஒரே ஒரு வழி என்பதுவும் பிரித்தானியாவுக்கு உள்ளூர நன்கு தெரியும்.

பிரித்தானிய தேசம் ஐக்கிய இராச்சியம் என்றுதான் அழைக்கப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசைப்போல் ஒற்றையாட்சி அரசு என்று அழைக்கப்படவில்லை.

இவை எல்லாவற்றையும் அறிந்தும் புரிந்தும் வைத்திருக்கின்ற பிரித்தானிய அரசு ஸ்ரீலங்கா அரசைத் தடை செய்வதற்குப் பதிலாக தமிழ்மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளைத் தடை செய்து வைத்திருக்கின்றது. சிங்களப் பௌத்த சிறிலங்கா அரசானது 1948 ஆம் ஆண்டிலிருந்துதான் தமிழர்களுக்கு அநீதியை இழைத்து வந்திருக்கின்றது. ஆனால் பிரித்தானிய அரசோ 1799ஆம் ஆண்டிலிருந்தே தமிழ்த் தேசத்திற்கும் தமிழ் மக்களுக்கும் தொடர்ந்தும் அநீதியை இழைத்தே வருகின்றது.

ஆகவே சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், சுதந்திர தமிழீழத் தனியரசை நிறுவுவதற்காகத் தமிழீழ மக்கள் நடத்துகின்ற போராட்டத்திற்கு, வெளிப்படையாகத் தனது ஆதரவை பிரித்தானிய அரசு வழங்க வேண்டும். இனியும் காலம் தாழ்த்துவது பிரித்தானியாவின் உயர் ஜனநாயக விழுமியங்களுக்குத்தான் இழுக்கைக் கொண்டு வந்து சேர்க்கும்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர், உலகின் பல தேசங்கள் பிரிந்து போய்விட்டன. தனித் தேசக்கோட்பாடுகள் இல்லாத நாடுகள் கூடப் புதிதாக உருவாக்கப்பட்ட தனிநாடுகளாக மாறிவிட்டன. அதாவது நாடுகளே இல்லாத நாடுகள் உருவாக்கப்பட்டன. குவைத் உருவாக்கப்பட்டதையும் ஈராக் உருவாக்கப்பட்டதையும் உதாரணத்திற்குச் சுட்டிக்காட்டலாம்.

அதேவேளை, வரலாற்று ரீதியாக ஒருங்கிணைந்திருந்த தேசிய இனங்களும் தனி நாடுகளாகப் பிரிந்து போய்விட்டன. யூகோஸ்லாவாக்கியா என்றிருந்த ஒரு நாடு, பலவேறு தேசிய இனங்களின் கூட்டமைப்பாக ஓர் அங்கீகரிக்கப்பட்ட நாடாக இருந்தது. அந்த நாட்டின் மக்கள் பிரிந்து போவதை சர்வதேசம் அன்று ஏற்றுக்கொண்டது. சோவியத் ஒன்றியத்தின் உடைவை மேற்குலகம் வரவேற்றது.

ஆனால் இங்கே இலங்கைத் தீவில் வரலாற்று ரீதியாக ஏற்கனவே தனியாக அரசாற்றி இருந்த நாடு, வேறொரு நாட்டோடு, இன்னொரு நாட்டால் இணைக்கப்பட்டு, உலக வரைபடத்தில் இருந்து நீக்கப்பட்டது.

இங்கே நாம் மேற்கூறிய உதாரணங்களின்படி புதிதாக நாடுகள் உருவாக்கப்பட்டதையும் வரலாற்று ரீதியாக ஒருங்கிணைந்திருந்த தேசிய இனங்கள் பிரிந்து புதிதாக நாடுகளை உருவாக்கியதையும், சோவியத் ஒன்றியம் போன்ற வல்லரசின் உடைவின் ஊடாக புதிய நாடுகள் தோன்றியதையும் கண்டோம்.

ஆனால் .......

ஆனால் ஏற்கனவே தனியாக இருந்து பலவந்தமாக ஒன்று சேர்க்கப்பட்ட தமிழர் தேசம் ஏன் மீண்டும்- தகுந்த காரணங்களுக்காக- தனியாகப் பிரிந்து

(24ஆம் பக்கம் பார்க்க)



# இளம்வயதுத் திருமணமும் பக்குவம் அடையாப் பருவமும்

**கே: எனது மகன் வயது 16. பாடசாலையில் வகுப்பு மாணவரிடையே நடந்த பிரச்சினையின்போது - எனது மகனின் கைவிரலை - இன்னொரு மாணவன் கடித்து காயப்படுத்திவிட்டான். உடனே மருந்து கட்டி வைத்தியம் செய்தார்கள். ஏற்புவலி ஊசி போட்டுக்கொள்ளும்படி அறிவுறுத்தினார்கள். கறள் பிடித்த ஆணி குத்தியதால் தான் ஏற்புவலி வரும் என்று அறிந்துள்ளேன். ஆனால், பற்கள் விஷத்தினாலும் ஏற்புவலி வருமா? விளக்கம் தருக.**

ப: ஏற்புவலி என்பது Clostridium Tetani என்கின்ற பற்றீரியா தொற்றினால் ஏற்படுகின்றது. இந்த பற்றீரியா ஒட்சிசன் இல்லாத சூழலில் வேகமாக வளரக்கூடியது. இந்த வளர்ச்சியின்போது உருவாகும் விஷம் Toxin உடலில் பரவி நரம்புகளை பாதித்து ஏற்புவலி ஏற்படக் காரணமாகின்றது. எனவேதான் ஆணி காலில் குத்தினால் - ஆணியின் நுனியில் இந்த பற்றீரியா முட்டைகள் இருந்தால் அது ஒட்சிசன் குறைவாக உள்ள பாதத்தின் தசைகள் நடுவே இந்த பற்றீரியாவை கொண்டு செலுத்திவிடும். இதனால், ஏற்புவலி நோய் உருவாகும் சாத்தியம் அதிகம். எனவேதான், சுத்தமான ஆணியோ, கறள் ஆணியோ குத்தினால் ஏற்புவலி தடுப்பு ஊசி மருந்தை எடுக்க அறிவுரை தருகின்றார்கள். Clostridium Tetani கிருமிகளின் Spores எனப்படும் முட்டைகள் புழுதி, மண், அழுக்குகளில் வாசம் செய்கின்றன.

எனவேதான், கறள் ஆணி குத்தினாலும் சரி, வீதி விபத்தில் ஏற்பட்ட காயங்கள், நீண்டநாள் ஆறாத காயங்கள், தசை சிதைந்து ஏற்படும் காயங்கள் எல்லாவற்றிற்கும் ஏற்புவலி எதிர்ப்பு ஊசிமருந்து போடப்படுகிறது. அத்துடன் பிறந்த குழந்தையின் தொப்புள்கொடி பகுதி விழ முன்னர் - தொப்புள் கொடியின் துண்டு நலிந்து சீழ்கட்டித்தான் விழும். இந்த இடைப்பட்ட நேரத்தில் விழவிருக்கும் அந்தத் தொப்புளில் ஒட்சிசன் குறைவாக உள்ள அந்தச் சூழலில் ஏற்புவலி பற்றீரிய முட்டைகள் சேருவதற்கு இடமுள்ளது. இதனால், குழந்தைகளுக்கு ஏற்புவலி ஏற்பட சாத்தியமுண்டு. இதனைத் தடுப்பதற்காகத்தான் - கர்ப்பமுற்றவேளையில் தாய்மாருக்கு ஏற்புவலி தடுப்பு ஊசி மருந்து போடப்படுகின்றது.

இனி உங்கள் மகன் விஷயத்திற்கு வருவோம். பல்கடி, விஷமென்று பொதுவான நம்பிக்கை எதுவித ஆதாரமும் இல்லாமல் நம்மிடையே உலாவி வருகின்றது. பல்கடி நேரடியாக விஷம் இல்லாவிடினும் ஆணி கால்களில் குத்துவதைப்போல் கடிபடும்போது கூரான பல் மிகவும் ஆழமாக சென்று டெட்டனஸ் Sporeஐ தசையில் விட்டு வந்துவிடலாம். இது ஏற்புவலியை உண்டாக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதால்தான் ஏற்புவலி ஊசியை ஏற்ற உங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. உங்கள் மகனுக்கு தடுப்பு மருந்துகள் சிறுவயதில் கிரமமாக கொடுக்கப்பட்டிருந்தால் அவர் பாடசாலை செல்லும் பருவத்தில் ஒரு ஏற்புவலி தடுப்பு ஊசி போடப்பட்டிருக்கும். எனவே, இப்பொழுது ஒரு தடவை மாத்திரம் இதனைப் போட்டுக்கொண்டால் அவரது தடுப்பு சக்தி Boost எனப்படும் உரம்பெறும்.எனவே, இதைப் போடுவதில் தவறில்லை.

**கே:பெண். வயது 26, எனக்கு அடிக்கடி அதிகமாக வியர்வை ஏற்படுகின்றது. இதனால், உடலில் துர்நாற்றம் வீசுவதாக உணர்கின்றேன். என்னோடு நெருங்கிப் பழகுகின்றவர்கள் எனது உடல் துர்நாற்றத்தால் முகம் சுளித்துவிடுவார்களோ என்று எண்ணிப் பயப்படுகின்றேன். இப்படி வியர்வை ஏற்படும் அக்குள் பகுதியில் அணிகின்ற உடைகளிலே மஞ்சள், பச்சை நிறக் கறைகள் ஏற்படுகின்றன. எனது வியர்வைப் பிரச்சினை உடலின் துர்நாற்றம் தீர பரிகாரம் கூறவும்.**

ப: வியர்வை என்பது ஓர் இயற்கையான உடல் இயக்கம். நமது உடலின் வெப்பத்தைக் கட்டுப்படுத்தி சரியான அளவில் வைப்பதற்கு வியர்வை அவசியம். மனித உடலிலிருந்து ஒருநாளைக்கு ஒரு லீட்டர் நீர் வியர்வையாக வெளிவருகின்றது. இதில் ஆறு மில்லிலீட்டர் அளவு வியர்வைதான் அக்குளில் (Axilla) ஏற்படுகின்றது. உண்மையில் வியர்வைக்கு எதுவித மணமும் இல்லை. நிறமும் இல்லை. நம் உடலிலிருந்து வெளிப்படுகின்ற இந்த வியர்வையுடன் பற்றீரியாக்களின் செயல்பாடு நடைபெற்றுத்தான் வியர்வை நாற்றமடைகின்றது. முக்கியமாக அக்குள்பகுதி காற்றோட்டமின்றி எப்பொழுதும் மூடிக்கிடப்பதால் வியர்வை ஈரப்பதத்துடனேயே அங்கு இருக்கின்றது. இதனால், பற்றீரியாக்கள் அங்கு இலகுவில் வாழ்ந்து கொள்ளும் சூழல் ஏற்படுகின்றது. வியர்வை லேசான பச்சை, நீலம், மஞ்சள் நிறமாக கறை படியவும் இந்த பற்றீரியாக்களே காரணம். வியர்வை உடலில் உள்ள Apocrint Entine போன்ற சுரப்பிகளின் சுரப்பால் ஏற்படுகின்றது. இந்தச் சுரப்பிகளின் செயல்திறனைப் பொறுத்தே சிலருக்கு அளவுக்கு அதிகமாகவும் இன்னும் சிலருக்கு குறைவாகவும் வியர்க்கின்றது.

வியர்வையை நிறுத்த மருந்துகள் உள்ளன. அந்த மருந்துகள் ஒட்டுமொத்தமாக உடலில் வியர்வை வராமல் செய்துவிட்டால் நாம் நோயாளிகளாகி விடுவோம்.

அப்படியானால், அதிக வியர்வையால் கஷ்டப்படும் உங்களைப் போன்றவர்கள் என்ன செய்வது?

நிறைய நீர் அருந்துங்கள். குறைந்தளவு நீர் அருந்துபவர்களுக்கு வியர்வை நாற்றம் அதிகமாக இருக்கும். ஏனென்றால் வெளியாகும் கழிவுப்பொருட்கள் செறிந்து இருந்து நாற்றத்தைத் தருகின்றது.

தினமும் இரண்டு வேளையாவது குளிக்கவும். வாசனை சவர்க்காரத்திற்குப் பதிலாக Anti Bacterial மருந்து சவர்க்காரங்களை உபயோகியுங்கள். தேவையற்ற உரோமங்களை அக்குள் மற்றும் அந்தரங்கப் பகுதிகளிலிருந்து அகற்றிவிடுங்கள்.

Anti Perspirant Deodarant என்கின்ற வகை வாசனைப் பூச்சுகளை அக்குளில் பூசுங்கள். இவை அந்த இடங்களில் மாத்திரம் வியர்வையின் அளவைக் குறைக்கும்.

**கே: எனது மகள் வயது 18. எனது கணவன் இரண்டாண்டுகளுக்கு முன்னர் தவறிவிட்டார். தற்பொழுது எனது மகளுக்கு ஒரு நல்ல வரன் வந்திருக்கின்றது. இந்த சிறுவயதில் திருமணம் செய்வது சரியல்ல என்று எனது நண்பிகள் கூறுகின்றார்கள். உங்கள் மருத்துவ ஆலோசனையை இந்த விஷயத்தில் விரும்புகின்றேன்.**

ப: பெண்கள் தாய்மை அடைவதற்கு அவர்கள் மனதாலும் உடலாலும் முதிர்ச்சி அல்லது பக்குவம் பெறுவது அவசியம். இப்படியான முதிர்ச்சி பெண்களுக்கு 23 வயதிற்கு பின்னரே நடைபெறுகின்றது.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை,கொழும்பு-14.

எனவே, பொதுவாக 23இலிருந்து 27 வயதிற்குள் கருத்தரிப்பது விரும்பத்தக்கது. 18 வயதிற்குள் கருத்தரித்தால் குறைமாத பிரசவங்கள் ஏற்படும்வாய்ப்புகள் அதிகம் என்று மருத்துவ ஆய்வுகள் பகருகின்றன. ஏனென்றால் பெண்ணின் உடல் கருத்தரிப்பதற்கு பக்குவம் அடையாத பருவம் இது. அதேபோல் 35 வயதிற்கு மேல் கருத்தரித்தால் மனநலம் குன்றிய மங்கோலிய வகை குழந்தைகள் பெறுவதற்கு சாத்தியங்கள் அதிகம். சில பெண்களுக்கு 28 வயதிற்கு மேல் இடுப்பின் எலும்புகள் இலகுவாக நெகிழ்ந்து கொடுக்காததால் பிரசவம் கஷ்டமாக இருக்கும் - என்றாலும் நீங்கள் நினைத்துள்ள சுபகாரியத்திற்கு தடைசொல்ல விரும்பவில்லை. திருமணம் செய்து ஓரிருவருடங்கள் கழித்து குழந்தை பெறுவதை தம்பதிகள் முடிவுசெய்யட்டுமே!

**கே:எனது குழந்தை பிறக்கும்போது கீழ் தாடை முரசில் இரண்டு பற்களுடன் பிறந்தது. இது ஏதாவது பிரச்சினைக்குரிய விஷயமா?**

ப: பொதுவாக குழந்தைகளுக்கு 6 மாதத்திலிருந்து ஒரு வருடத்துள் பல்முளைக்கத் தொடங்குகின்றது. பெரும்பாலும் கீழ்வரிசை முன் பற்கள் Central Incissors என்ற பற்கள் தான் முதலில் வெளியே வருகின்றன. குழந்தைக்கு இரண்டரை வயதாகும்போது பால் பற்கள் 20 உம் முளைத்துவிடும். சிலவேளையில் உங்கள் குழந்தைக்கு நடந்தது போல பிறக்கும்போதே கீழ்த்தாடைப் பற்கள் இரண்டோடு குழந்தை பிறப்பதுண்டு. இதனை Natal Teeth என்பார்கள். ஒரு சில குழந்தைகளுக்கு பிறந்து ஒரு மாதத்தில் இப்படிப் பற்கள் முளைக்கலாம். எப்படியும் நான்கு வருடங்களில் இவை விழுந்து - நிரந்தரப் பற்கள் அவ்விடத்தில் முளைக்கும். எனவே, குழந்தை பற்களுடன் பிறந்துவிட்டதே என்று கலங்கவேண்டாம்.

இந்தப் பற்கள் மிகவும் கூர்மையாக இருந்தால் தாய்ப்பால் கொடுக்கும்போது உங்களுக்கு வலி ஏற்படலாம். இதற்கு நீங்கள் பால் கொடுக்கும் போது Nipple Shield என்கின்ற சாதனத்தை உபயோகிக்கலாம். மேலும் இந்தப் பற்களால் குழந்தையின் நாக்கு வாய்ப்பகுதிகளில் காயம் ஏற்படலாம் அல்லது பற்கள் ஆட்டம் கண்டு விழும்நடிலை ஏற்படலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் பற்களை - வைத்தியர்களைக் கொண்டு அகற்றவேண்டி நேரிடும்.

**கே:மார்பக புற்றுநோய் ஏற்படுவதை அவரவரே கண்டுபிடித்துவிடலாம் என்கின்றார்களே? இதற்கு என்ன செய்யவேண்டும்?**


ப: மார்பக புற்றுநோய் பெண்களைப் பாதிக்கின்ற முக்கியமான நோய். ஆரம்பத்தில் இதனைக் கண்டுபிடித்து விட்டால் - சிகிச்சை வெற்றிகரமாக நடந்து நிச்சயம் குணம் பெறலாம். இதனால், பெண்கள் மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு பெறவேண்டியது மிகவும் அவசியமாகின்றது. இதற்காகத்தான் 25 வயதிற்கு மேற்பட்ட பெண்களை சுயமாக மார்பக பரிசோதனையை கிரமமாக செய்யும்படி வேண்டுகின்றோம். இது ஒன்றும் பெரிய காரியமல்ல. கண்ணாடி முன்னால் நின்று இடதுகையால் வலது மார்பகத்தில் கடிகார சுற்றுமுறையிலும் Clockwise Direction பின்பு அதற்கு எதிரான திசையிலும் Anti Clockwise சிறு சிறு வட்டங்கள் வரைவது போல் தடவிப் பார்க்கவேண்டும். பிறகு இதேபோல் வலதுகையால் இடது மார்பகத்தை பரிசோதிக்கவேண்டும். எங்கேயாவது இப்பரிசோதனையின் போது சிறுகட்டிகள் இருப்பதுபோல் உணர்ந்தால் Mammogram என்ற எக்ஸ்றே பரிசோதனையை மேற்கொண்டு புற்றுநோய் இருக்கிறதா இல்லையா என்பதை உறுதிசெய்து கொள்ளவேண்டும்.

அத்துடன் முலைக்காம்பு (Nipple) உட்புறமாக அமிழ்ந்திருக்கின்றனவா (Inverted Nipples) அவற்றிலிருந்து இரத்தம் அல்லது வேறு ஏதாவது கசிவுகள் ஏற்படுகின்றதா என்பதை அறியவேண்டும். அப்படி வித்தியாசங்கள் தெரிந்தால் Mammogram பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும்.மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இடங்களில் வலி இருக்காது. இதனால்தான் பலர் புற்றுநோயின் ஆரம்பநிலையை கவனிக்கத் தவறிவிடுகின்றார்கள். இதற்காகத்தான் வைத்தியர்கள் ஒவ்வொரு பெண்ணையும் மார்பக சுயபரிசோதனை செய்ய அறிவுறுத்துகின்றார்கள்.



# மூதூர் கிழக்கில் தமிழ்மக்கள் குடியமரும் காலம் எப்போது வரும்?

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் நிர்வாகப் பிரிவில் ஏறக்குறைய அரைவாசிக்கும் மேற்பட்ட பரப்பளவை மூதூர் கிழக்குப் பிரதேசம் கொண்டுள்ளது. இந்தப் பிரதேசமே இன்று உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்றது. இப் பகுதியில் சுமார்4ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் இருபதாயிரம் மக்கள் வாழ்ந்து வந்தனர். இப்பகுதியில் 24க்கும் மேற்பட்டகிராமங்களும் 11 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளன. அவை சேனையூர், கட்டைபறிச்சான் வடக்கு, கட்டைபறிச்சான் தெற்கு, சம்பூர்வடக்கு, சம்பூர்மேற்கு, கூனித்தீவு, நவரட்ணபுரம், நல்லூர், பாட்டாளிபுரம், பள்ளிக்குடியிருப்பு, கடற்கரைச் சேனை ஆகும்.



சுமார் 69 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட இப்பிரதேசத்தில் சேனையூர் மத்திய கல்லூரி, பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரி, சம்பூர் மகா வித்தியாலயம் என்பன உயர் வகுப்புகளைக் கொண்ட மாவட்டத்தின் புகழ் பூத்த பாடசாலைகள். இங்கு 19 பாடசாலைகள் இருக்கின்றன. அத்துடன் கிழக்கு இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற சேனையூர் நாகம்பாள் ஆலயம், சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலயம், உள்ளிட்ட 32 ஆலயங்கள் அமைந்துள்ளன. இயற்கை செழிப்புமிக்க மூதூர் கிழக்கு பகுதியில் 33குளங்கள். 4ஆயிரத்து 500 ஏக்கர் விஸ்தீரணமான விளை நிலங்கள் பரந்துகிடப்பதுடன், அங்கு தமிழ் மக்கள் 30ஆயிரம் கால் நடைகளையும் வளர்த்து வந்தனர்.2ஆயிரத்து500க்கும் அதிகமான மீன் பிடிப் படகுகளை வைத்து சம்பூர், இலக்கத்தை, சூடைக்குடா, உப்பூறல், கடற்கரைச்சேனை கடல்பகுதியில் மீன் பிடியிலும் ஈடுப்பட்டு வந்தனர் மூதூர்கிழக்கு மக்கள்.

தனித்தமிழ்ப் பிரதேசம் என்பதனால் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் அரசின் அபிவிருத்தித் திட்டம் எதுவும் மூதூர் கிழக்கு பிரதேசத்தை எட்டியும் பார்த்ததில்லை. ஆங்கிலேயர் காலத்தில் போடப்பட்ட இக்கிராமங்களை ஊடறுத்து வெளிச்ச வீடுவரை செல்லும் பிரதான வீதி இன்று வரை அப்படியே உள்ளது என்றால் மிகுதி எப்படி இருக்கும்.

அங்குள்ள மக்கள் எப்போதும் அரசாங்கத்தின் தயவை எதிர்பார்த்து வாழ்ந்தவர்கள் அல்லர். தங்களுடைய வரலாற்று பூர்வீக வாழ்விடங்களில் கௌரவத்துடன் வாழ்ந்து வந்த கடின உழைப்பாளிகளான மூதூர் கிழக்கு மக்கள் மீது கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதிமுதல் குண்டு மழை பொழிந்து அடிமேல் அடியடித்து துரத்தியடித்த பேரினவாத அரசு அங்கு விசேட பொருளாதார வலயத்தை நிறுவவுள்ளதாக கூறியுள்ளது. பரம்பரை பரம்பரையாக பாட்டன், பூட்டன் காலத்திலிருந்து வாழ்ந்து வந்த மக்களை விரட்டி விட்டு அங்கு பொருளாதார வலயத்தை அரசு வரையறுத்துள்ளமை யாருக்காக எனும் கேள்வி எழுகின்றது.

இந்தப் பிரதேச மக்கள் மீது நிரந்தர அகதி என்ற முத்திரை குத்தப்பட்டு அகதிமுகாம்களில் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்று இந்தப் பிரதேசத்தினுடைய கல்வி முற்றாகச் சீரழிக்கப்பட்டிருக்கின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஆலயங்கள் அழிந்து போயுள்ளன. மூதாதையர் காலத்து நினைவிடங்கள் அவர்களால் பேணப்பட்ட சொத்துக்கள் சிதைந்து போயுள்ளன. வாழ்நாள் முழுவதுமாக உழைத்துச் சேர்த்த சொத்துக்கள் , வரலாற்றுக் காலம் முதல் கட்டிக்காத்த பழம் பெரும் வைத்தியக் குறிப்புகள், கையேடுகள், காப்பியங்கள், அனைத்தும் அழிக்கப்பட்டு உள்ளன. அபகரிக்கப்பட்டு விட்டன. மொத்தத்தில் மூதூர் கிழக்கு தமிழ் மக்களுடைய கல்வியையும், பூர்வீக வரலாற்று சான்றுகளையும், பொருளாதார வளங்களையும் ஒட்டு மொத்தமாகச் சீரழிக்கின்ற, அழிக்கின்ற முயற்சியைத்தான் இந்த அரசாங்கம் இன்று மூதூர் கிழக்கில் மேற்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் அதனை தடுப்பதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் மூதூர்கிழக்கு மக்கள் கையொப்பமிட்டு கிழக்கு மாகாண கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப் பிட்டியாவுக்கு கடிதம் அனுப்பி உள்ளனர். அதில் அரசியலமைப்பு உறுப்புரிமை14(1) இன்படி மூதூர்கிழக்கு-சம்பூர் பகுதியில் பிரவேசித்து வாழ்வதற்கும் - எமது குடியிருப்பினையும்,தொழில் வியாபாரம்,தொழில் முயற்சிகளையும்

**மூதூர் கிழக்கான்**

மேற்கொண்டு அரசியலமைப்பு உறுப்புரிமை 14(1) (ஜீ) இன்படி எமக்காக உத்தரவாதமளிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட உரிமையைப் பெறவும் - கடந்தகாலங்களில் நாங்கள் ஈடுபட்ட சட்டரீதியான உத்தியோகம், வர்த்தகம்,நிறுவனம்போன்றவற்றை மூதூர்கிழக்கு, சம்பூர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற நிலைக்கு வருமுன் இருந்த நிலைபோன்று செயற்படுத்த விரும்புவதாக எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# அந்த உறவு எப்படிப்பட்டது?



ஜவஹர்லால் நேருவுக்கும், தனது தாய் எட்வினாவுக்கும், இடையே இருந்த உறவு எப்படிப்பட்டது என்று மவுண்ட் பேட்டனின் கடைசி மகள் ,தான் எழுதிய புத்தகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் சுதந்திர வரலாற்றில் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்கு எப்போதுமே தனி இடம் உண்டு. சுமார் 200 ஆண்டு காலமாக வெள்ளையர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவுக்கு, இவர் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது தான் சுதந்திரம் கிடைத்தது. அதற்கு கைமாறாக சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக இவரே நியமிக்கப்பட்டார்...

**அரசல் புரசலாக.....**

ரொபர்ட் கிளைவில் தொடங்கி எத்தனையோ பேர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தனர்.

ஆனால் அவர்களில் இந்திய தலைவர்களுடன் அதிகமாக நட்பு பாராட்டியது மவுண்ட்பேட்டன் பிரபு மட்டுமே.

குறிப்பாக காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் , சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராகவும் இருந்த பண்டிட் ஜவஹர்லால் நேருவுடன், மவுண்ட் பேட்டன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். அந்த காலகட்டத்தில் மவுண்ட் பேட்டனின் மனைவி எட்வினாவுக்கும் , நேருவுக்கும் நெருக்கமான உறவு இருந்தது. அதுபற்றி அப்போது அரசல் புரசலாக பலவாறாக பேசப்பட்டது.

**புத்தகம்**

மவுண்ட்பேட்டன்- எட்வினா தம்பதியரின் கடைசி மகளான லேடி பமீலா ஹிக்ஸ், 'இந்தியா ரிமம்பர்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதி உள்ளார்.

அந்த புத்தகத்தில் இந்தியாவில் தான் தங்கியிருந்த 15 மாதங்கள்(1947 மார்ச் முதல்1948 ஜூன் வரை)பற்றி விவரித்து இருக்கும் அவர், "எனது தாயார் எட்வினாவுக்கும், நேருவுக்கும் நெருக்கமான நட்பு இருந்தது. இதில் செக்ஸ் தொடர்பு இருந்தாக நான் நம்பவில்லை", என்று குறிப்பிட்டுள்ளார்.

**பரபரப்பு பேட்டி**

லேடி பமீலா ஹிக்ஸ், சி.என்.என்-ஐ.பி.என். தொலைக்காட்சிகளுக்கு சிறப்புபேட்டி அளித்தார். அதில் அவர் கூறி இருப்பதாவது:-

"எனக்கு 17வயதாக இருக்கும் போது, ஜவஹர்லால் நேருவை 'மாமு' என்றுதான் அழைப்பேன்,எனினும் இந்தியாவை விட்டு சென்ற பின், அவரை பண்டிட்ஜி' என்று கூப்பிடுவேன். பதிலுக்கு அவர் என்னை 'பம்மி' என்று செல்லமாக அழைப்பார்.

நேரு மரியாதைக்குரிய மனிதர். அவருக்கும், எனது தந்தைக்கும் இடையே நெருக்கமான நட்பு இருந்தது. இங்கிலாந்தில் அல்லது இந்தியாவில் உள்ள என் தந்தையின் வீடுகளில் இருவரையும் ஒன்றாகவே காணலாம்.

**தெய்வீக 'நட்பு'**

என் தாயாரும், நேருவும் ஒருவரையொருவர் மிகவும் நேசித்தனர். அது இரு உள்ளங்களுக்கும் இடையிலான ஆழமான, உணர்ச்சிபூர்வமான அன்பாக இருந்து. இது ஒரு தெய்வீக 'நட்பு' மட்டுமே. இருவருக்கும் இடையே செக்ஸ் உறவு இருந்தாக ஊகங்கள் இருந்தன. ஆனால் அவை தவறானவை. அப்படி ஓர் உறவு இருந்ததாக நான் நம்பவில்லை. நேருவுடன் இருக்கும்போது எனது தாயார் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். பொதுவாக நீண்ட கால குடும்ப வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு ஏமாற்றமும், தான் புறக்கணிக்கப் பட்டு விட்டது. போன்ற உணர்வும் தோன்றும். இந்த நிலை யில் புதிதாக ஒரு அன்பு கிடைத்தால், அவள் மலர்ச்சி அடைந்து, மகிழ்ச்சி அடைவாள். இதை எனது தந்தை(மவுண்ட் பேட்டன்) அறிந்தே இருந்தார். நேருவுடனான உறவு, எனது தாய்க்கு உதவும் என்று அவர் நினைத்தார். இதில் அவருக்கு எந்த நெருடலோ, உறுத்தலோ இல்லை. அவர்கள் அறையில் இருக்கும் போது, நாங்கள் அங்கிருந்து சென்று விடுவோம்.

**காஷ்மீர் பிரச்சினை**

நேருவுக்கும், எனது தாய்க்கும் இடையே இருந்த உறவு, என் தந்தைக்கு காஷ்மீர் போன்ற சிக்கலான பிரச்சினைகளை கையாளுவதில் உதவியது என்பது உண்மைதான்.

'அவரது அறிவுறுத்தலின் பேரில்தான் காஷ்மீர் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்ப நேரு முடிவு செய்தார்.

**பெட்டி பெட்டியாக கடிதங்கள்**

எனது தாய் போர்ணியோ தீவில் இருந்த போது திடீரென காலமானார். அப்போது அவரது படுக்கையின் பக்கத்தில் இருந்த மேஜையில் சில சூட்கேஸ்கள் இருந்தன. அவற்றில் முழுக்க முழுக்க கடிதங்களே இருந்தன. அவைகள் அனைத்தும் நேருவிடம் இருந்து என் தாய்க்கு வந்தவை.

அவற்றில் 99 சதவீத கடிதங்களில் தனக்கு சங்கடம் தரும் எதுவும் இல்லை என்று என் தந்தை உறுதியாக நம்பினார். இதனால் அவற்றை முதலில் படிக்க அவர் தயங்கவில்லை. இருப்பினும் எஞ்சிய 1சதவீத கடி தங்கள் பற்றி அவருக்கு சிறு சஞ்சலம் இருந்தது. உடனே என்னை கூப்பிட்டு அந்த கடிதங்களை படிக்குமாறு கூறினார்.

அந்த கடிதங்கள் அனைத்தும் அற்புதமானவை. அவை பிரியத்துடன் தொடங்கி முடிவில் வேதனையாகவோ அல்லது காதல் உணர்வுடனே முடிந்திருந்தன. முக்கால்வாசி கடிதங்களில் தன்னுடைய கவலைகள் அல்லது அதிருப்திகள் போன்ற சோகங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை அவர் (நேரு) பகிர்ந்து கொண்டிருந்தார். ஆனால் எந்த இடத்திலும் என் தந்தையை வேதனைப்படுத்தும் அளவில் எதுவும் இல்லை"

இவ்வாறு பமீலா ஹிக்ஸ் கூறி உள்ளார்.



# கலக்கல்

கவிஞான சம்பந்தர்

## நவீன(த)த்துவம்

இசை: மனதுக்கு இசை நல்ல மருந்து.
மாலையிலே இதைக் கேட்டால் விருந்து.


பொய்: ஆபத்தில் உதவி செய்யும் நண்பன்.
அரசனையும் வீழ்த்திவிடும் வம்பன்.

மலர்: வாழ்க்கையில் போதிக்கும் பாடம்.
வளமான தேன் வாழும் கூடம்.

சூரியன்: உலகிற்கு உயிரூட்டி பயிர்களையும் காப்பான்.
உக்கிரமாய் சிலநேரம் உயிர்களையும் மாய்ப்பான்.

படி: வாழ்க்கைப் படியில் ஏற 'வரும்படி' தேவை.
'வரும்படி' இல்லையென்றால் வாசல்படியே இல்லை.

## "யார் இவர் தெரியுமா" 04



இந்த வாரம் பிரசுரமாயிருக்கும் உருவம் யாருடையது?

அண்மையில் பிரபல்யமாவ ஒரு பெண். இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். சரியானவிடை எழுதிய அதிஷ்டசாலிகள் மூவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.
அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
"யார் இவர் தெரியுமா?"
85/ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14.

★ "யார்இவர்தெரியுமா?" இல.1 இற்கான சரியான விடை இத்தாலியின் முன்னாள் சர்வாதிகாரி முசோலினி.

சரியான விடைகளை அனுப்பியோர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:
1. ஏ.ஜி.சாதிக்கா, கல்-எலிய 2. எஸ்.சுதர்சன், கொக்குவில் 3. கிறிஸ்டி, நீர்கொழும்பு.


ஏழு விரல் கொண்ட
அதிசய அமெரிக்க பூனையார்!





'ஹரிபொட்டர்' வாங்கலையோ

விற்பனையில் கின்னஸ் சாதனை படைத்த 'ஹரிபொட்டர்' புத்தகத்தை சென்னையில் உள்ள புத்தக நிலையம் ஒன்றில் சிறுவர்கள் ஆர்வத்துடன் தெரிவு செய்கின்றனர்.




மதுரை 'விரகனூர்' ரிங் வீதியில் கூடியிருந்த பார்வையாளர்களை பரவசமூட்டும் வகையில், இந்தியாவின் விமானப்படை விமானங்கள் செங்குத்தாக கீழிறங்கி சாகசம் புரிந்தன.



பசுமைப் புரட்சி

மும்பையில் பசுமைப் பாதுகாப்பு ஆர்வலர்கள் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த, சிறுவர்களுக்கு முகமூடி அணிந்து பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.



தன்னைப்பற்றிப் பெரிதாக எண்ணிக்கொண்டிருந்த ஒருவர் நெரிசல் மிக்க பஸ் ஒன்றில் ஏறினார். மிருககாட்சிச்சாலையில் உள்ளதையெல்லாம் பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு வந்துவிட்டாய் போலிருக்கிறதே! என்று அகம்பாவத்துடன் கொண்டக்டரைக் கேட்டார்.

ஒரு பிரயாணி பதில் சொன்னார்: 'நீங்கள் ஏறும் வரை ஒரு கழுதை இல்லாமல் இருந்தது.'




பஸ்ஸிலே கழுதை!

குறும்பு





அமெரிக்காவில் மினியாபோலிஸ் பகுதியில் மிசிசிப்பி நதியின் மீது கட்டப்பட்ட பாலம் உடைந்து கிடக்கும் காட்சி.



தென்கொரியா பூங்காவில் வெயிலின் தாக்கத்திலிருந்து விடுபட வத்தகைப்பழத்தை ருசிக்கிறது இந்தக் குரங்கு.



# அறிவியல்

ரீ.கே.ஆர்



## புற்றுநோய்

செல்களின் அபரிமிதமான எண்ணிக்கை அதிகரிப்பு புற்றுநோய் ஆகும். புற்றுநோய்க்கு காரணமான செல்களை அழிக்கும் தன்மை பல்வேறு பொருள்களுக்கு உள்ளன. இவற்றில் புரப்பியோனிக்கமிலமும் ஒன்றாகும். மலேசியாவில் உள்ள செயின்ஸ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியில் பூசணிக்காயில் புரப்பியோமனின் அமிலத்தை உற்பத்திசெய்யும் சர்க்கரைப்பொருள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பூசணிக்காயை சாப்பிடுவதால் புற்றுநோயைத் தடுக்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நார்ச்சத்து இருப்பதால் ஏற்கனவே பூசணிக்காயை உணவில் சேர்த்துக்கொள்ளுமாறு உளவியல் நிபுணர்கள் கூறிவந்தனர். மலேசிய ஆய்வு முடிவு இந்தப் பரிந்துரையை உறுதிசெய்வது போல் உள்ளது.



## பனம்பழம்

பனைமரங்களிலிருந்து பனம் பழம் கிடைக்கிறது. இப்பழங்கள் இளங்காய்களாக இருக்கும்போது 'நுங்கு' என்றும் 'குரும்பை', 'குரும்பல்', 'கூக்கான்', 'கிட்டி' என்றும் அழைக்கப்படுகின்றன. இவை 'பருவப்பனை' என்றழைக்கப்படும் பெண் பனைகளில் மட்டுமே தோன்றுகின்றன. இவை முற்றிப் பழமாக மாறுகின்றன. பனம்பழத்திற்கு நிகரில்லாத சுவையும் மணமும் உண்டு. பழுத்துக் கீழே விழுந்த பனம் பழங்களை சிறிய கருவண்டுகள் சிதைத்து ஊனைத் தின்றுவிடுவதால் இவை தனிக்கொட்டைகளாகப் பிரிகின்றன. இவ்வண்டுகள் கொட்டைகளைச் சூழ்ந்துள்ள உரோமம் போன்ற மெல்லிய நார்களைச் சிதைப்பதில்லை. இவ்வண்டுகளை ஈர்ப்பதற்கு இக்கனியின் மணம் ஒரு காரணமாகும்.



## குந்தன் நகைகள்

தற்போது நம்நாட்டில் 'குந்தன்' நகைகள் மிகவும் பிரபலமாகி வருகின்றன. நகைகளை நம்முடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல்நாமே வடிவமைத்துக்கொள்ளலாம் என்பதே இதன் சிறப்பு அம்சமாகும். குந்தன் என்ற வண்ணக் கற்களைப் பயன்படுத்தி செய்வதால் நகைகளின் பெயரும் குந்தன் நகைகள் என அழைக்கப்படுகின்றன.



## பழஜூஸ்

மேல்நாடுகளில் விருந்தின் நிறைவு பழ ஜூஸ்கள் மற்றும் மென்பானங்களாக உள்ளது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் விருந்தின் நிறைவு வெற்றிலை, பாக்கு, பீடாவாக உள்ளது. இது நமது உடலின் செரிமானத் தன்மையை அதிகரிக்க உதவுகின்றது. விருந்தின் தொடக்கத்தில் 'சூப்' வழங்கப்படுவதற்கும் இதுவே காரணமாகும்.



## ஏ.கே.47

ஏ.கே.-47 இலகு தன்னியக்கத் துப்பாக்கியின் சுடுகுழலானது 16 அங்குலம் நீளமானதாகவும் தன்னியக்கமாகவும், ( தனி இயக்கமாகவும்) கைப்பாவனையூடாகவும் சூடுகளை வழங்கக்கூடியதாக இருக்கும். எடை 4300கிராம். இதன் ஆகக்கூடிய சுடுதூரம் 1500 மீற்றர்கள். இதன் தாக்குதல் தூரம் (Killing Range) 400-500 மீற்றர் ஆகும். பெரும்பாலும் இது துருப்பு எதிர்ப்பு ஆயுதமாகப் பாவிக்கப்படுகிறது. இதை வடிமைத்தவர் யார் தெரியுமா? 'மிகைல் ரிமோவிச் கலாஸ் நிகோவ்'. இவர் அதை 1947 ஆம் ஆண்டில் வடிவமைத்தார். இன்று உலகில் 55 நாடுகளில் ஏ.கே.-47 பாவனையில் இருக்கின்றது.



## விண்மீன்கள்

இரவில் வானில் தோன்றும் விண்மீன்களில் சில மினுமினுப்பதை நாம் பார்த்திருப்போம். மின்விளக்கு அணைந்து அணைந்து எரிவதுபோல் அது தெரியும். விண்மீன்களில் இருந்து செறிவுள்ள ஒளிகள் வெளியாகும். வெவ்வேறு செறிவுகளுள்ள ஒளிகள் விண்வெளி அடுக்குகள் வழியாக வளிமண்டலம் அடைந்து பூமிக்கு வருகின்றன. இதனால், ஒளிக்கதிர்கள் தோன்றிய இடங்களிலிருந்து நேராக வராமல் மாறுபட்டு வருகின்றன. மேலும் விண்வெளி அடுக்குகள் நிலைபெற்றவை அல்ல. நகர்ந்துகொண்டே இருப்பவை. இதனால், இவற்றைக் கடந்துவரும்போது விண்மீன்கள் மினுமினுக்குகின்றன.

# பீடி, சிகரெட்டுக்கு எதிராக...



அகில இந்திய திரிஷா ரசிகர் மன்றத்தின் தலைவியாக ஜெசி என்ற பெண் இருந்து வருகிறார். இந்த ரசிகர் மன்றத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் கிளைமன்றங்கள் செயற்படுகின்றன.


திரிஷாவின் பிறந்த நாளில் இரத்த தானம் வழங்குவது, ஏழை களுக்கு இலவச உணவு வழங்குவது, ஏழை மாணவர் - மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குவது போன்ற சமூகப்பணிகளில், திரிஷா ரசிகர் மன்றம் ஈடுபட்டு வருகிறது.

அவருடைய ஒவ்வொரு படமும் திரைக்கு வரும்போது இதுபோன்ற சமூகப் பணிகளில் திரிஷா ரசிகர் மன்றம் ஈடுபடுகிறது.




# நாம் இருவர்; நமக்கு பதினொருவர்!

இது கணக்கு அல்ல, தமிழ்நாடு நெல்லைப் பகுதியைச் சேர்ந்த மாரியம்மாள் பெற்றெடுத்த குழந்தைகளின் எண்ணிக்கை. இப்போதும் அவர் கர்ப்பமாக இருக்கிறார். 2 குழந்தைகள் இறந்துவிட்ட நிலையில், இப்போது இவருக்கு 6 மகள்களும், 4 மகன்களும் உள்ளனர். ஹோட்டல்களுக்கு தண்ணீர் ஊற்றியும் அக்கம்பக்க வீடுகளில் பாத்திரம் தேய்த்தும்



வாழ்க்கையை நடத்துகிறார் இப்பெண். 10குழந்தைகளும் பள்ளிக்குச் செல்கின்றனர். மாரியம்மாளின் கணவர் சாமிநாதன், சென்னையில் பழவியாபாரம் செய்துவருகிறார். "பிரசவத்தில் எந்தக் கஷ்டமும் தெரியல. அதனால குடும்பக் கட்டுப்பாடு செய்துக்கமாட்டேன். கடவுள் தாற குழந்தையை தடுக்க நாம யாரு?" அப்பாவியாகக் கேட்கிறார் மாரியம்மாள்.



# அசத்தல் ஹெல்மெட்

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் வயர்லெஸ் கருவிகளுக்கான மிகப் பெரிய கண்காட்சி நடக்கிறது. அதில் டானிசவா என்ற பாதுகாப்புப் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் காட்சிக்கு வைத்துள்ள ஹெல்மெட்டை நிறுவன ஊழியர் அணிந்துள்ளார். 'யு-மேட்' என்ற இந்த ஹெல்மெட்டில் மொபைல் கமெரா, குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் கருவி, 3 ஜி போனுடன் கூடிய ஹெட்செட் ஆகியவை பொருத்தப்பட்டு உள்ளன. சக்திவாய்ந்த விளக்கு, அதை சார்ஜ் செய்ய சூரிய ஒளியில் இயங்கும் பாட்டரி ஆகியவையும் உள்ளன. பாதுகாப்பு ஊழியர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப்படை வீரர்களுக்கென இந்த ஹெல்மெட் தயாரிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானின் கழிவறைகளில் ரூபாய் நோட்டுகள்

ஜப்பானில் பல்வேறு நகரங்களில் உள்ள ஆண்கள் கழிப்பறைகளில் 10 ஆயிரம் ஜப்பானிய யென் நாணயம் (500 ரூபாய்) ஒரு உறையில் வைக்கப்பட்டு இருந்தது. அதோடு கையால் எழுதப்பட்ட ஒரு குறிப்பும் வைக்கப்பட்டு இருந்தது. அதில் 'உங்கள் நலனுக்காக இந்தப் பணத்தைத் தயவுசெய்து பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று எழுதப்பட்டு இருந்தது.

இப்படி 15 மாநிலங்களில் உள்ள கழிவறைகளில் மொத்தம் 11 லட்சம் ரூபாய் வைக்கப்பட்டு இருந்தது. இதை யார் வைத்தது என்பது தெரியவில்லை இது அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. என்ன நோக்கத்துக்காக இப்படி பணம் வைக்கப்பட்டு தெரியாமல் அதிகாரிகள் திகைத்துப்போய் உள்ளனர். பணத்தை வைத்தவரை அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

# யானை தும்பிக்கையில் காயம் தையல்போட்டு சிகிச்சை

யானையின் தும்பிக்கையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல்போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு கொல்லம் மாவட்டம் அடூரில் உள்ள கொடுமண்முகள் என்ற இடத்தைச் சேர்ந்தவர் ராதாகிருஸ்ணபிள்ளை. இவர் வளர்த்துவந்த கண்ணன் என்ற ஆண் யானைக்கு மதம் பிடித்ததால் அதனைக் கயிற்றில் கட்டிப்போட்டிருந்தனர்.

யானைக்கு மதம் பிடித்திருந்தாலும் அது பாகன் சொல்லும் அனைத்து வேலைகளையும் செய்துகொண்டிருந்தது.

யானையைக் கயிற்றுப் பிடியிலிருந்து அவிழ்க்க முடியாமல்போகவே, அதனைக் கட்டியிருந்த கயிற்றில் வெடிவைத்தபோது, தவறுதலாக வெடிகுண்டு யானையின் தும்பிக்கையில் பட்டு காயம் ஏற்பட்டது. இரண்டு அங்குல ஆழத்தில் 12செ.மீ. நீளத்தில் இருந்த புண் தும்பிக்கையின் நுனி துவாரம் வரை நீண்டிருந்தது.



யானை தும்பிக்கையால் தண்ணீர் குடிக்கும்போது அடிபட்ட ஓட்டை வழியாக தண்ணீர் வழிந்து யானை மிகவும் கஷ்டப்பட்டது.

யானையின் அவலநிலையை கண்டு வருத்தமுற்ற பாகன் யானையை மருத்துவ சிகிச்சைக்காக கொண்டு சென்றார். கொல்லத்தில் உள்ள மருத்துவமனையில் டாக்டர்கள் யானைக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்தனர். யானைக்கு மயக்கமருந்து கொடுத்து இந்த அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது.

தும்பிக்கையின் அடியில் நூல்கொண்டு 12 தையல் போடப்பட்டது. பின்னர் அதன் மேல் இரண்டாம் தையலும் போடப்பட்டது. யானை மயங்கிய நிலையில் இருந்தபோதும், வலிதாங்க முடியாமல் தும்பிக்கையை தரையில் உரசி சத்தம்போட்டுக் கொண்டிருந்தது. யானையின் இந்தப் பரிதாபநிலையைக் கண்டு யானையின் பாகன் ராஜீவ், மனவேதனையுடன் யானையின் அருகிலேயே அமர்ந்தபடி இருந்தார். இப்போது யானை சற்றுக் குணமடைந்துள்ளது.

"நானும் என் மனைவியும் ஒரே ஆபீஸ்ல வேலை செய்யறதால ஒரு சௌகரியம்"

"என்னது?"

"நான் ஆபிஸ்ல தூங்கி எழுந்ததும் அவள் எனக்கு சூடான காப்பி ஆடர் பண்ணித் தருவா!"






"அவர் சரியான கஞ்சன்"

"அப்படியா? எப்படி?"

"பயர் சேர்விஸ்க்குக் கூட மிஸ்கோல் தான் கொடுப்பாரு"

# வளர்ச்சி

பக்குவப்பட்ட
இருவர்
காதலித்தனர்
அறிவுபூர்வமான
கவிதை
பிறந்தது
அறியாப்
பருவத்தினர்
இருவர்
காதலித்தனர்
வயிற்றில்
கரு வளர்ந்தது



# காப்பி-டீ பிரியர்களுக்கு

"காப்பி, டீயை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது. குடித்தே தீரவேண்டும் எனக் கருதுபவர்கள் தினமும் ஒரு தடவை அருந்தலாம். அதற்குமேல் குடிப்பவர்கள், தாங்கள் பருகும் ஒவ்வொரு கோப்பை காப்பி, டீ அளவை விட இரண்டு மடங்கு தண்ணீர் அருந்தவேண்டும். அப்படி அருந்தினால் அதிக பாதிப்பு ஏற்படாமல் தடுக்கமுடியும். ராகி, கேழ்வரகு உணவுகள், பனைவெல்லம் போன்றவை உடலுக்கு மிகவும் நல்லவை. இவைகளை உட்கொள்ளுங்கள். உடல் ஆரோக்கியம் பெறும். எலும்புகள் வலுப்பெறும்" என்றார் மருத்துவர் ஒருவர்.

# அதிகரிக்கும் பாலியல் வன்முறைகள்

கடந்த ஆண்டை காட்டிலும், இந்த ஆண்டு இந்தியா முழுவதும் பெண்களுக்கு எதிராக நடைபெற்றுள்ள பாலியல் கொடுமைகளின் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகரித்துள்ளதாக இந்தியாவின் பிரபல பத்திரிகைகளின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இவற்றுள் அடிப்படை காரணம் என்ன?

டெல்லி பல்கலைக்கழகத்தின் உளவியல் துறை பேராசிரியர் டாக்டர். முரளிதர் இது குறித்து "பெண்கள் மத்தியில் இன்றைக்கு அதிகரித்து வரும் வெளிக்காட்டும் மனோபாவம்தான் இத்தகைய செயல்களுக்குதூண்டுகோலாக அமைகின்றன. அதேபோல செக்ஸ் பற்றி இன்றைய இளைஞர்களுக்குள்ள அரைகுறை அறிவும், அவர்களை இப்படியெல்லாம் செய்யத் தூண்டுகின்றன. செக்ஸை, அதற்குரிய சூழ்நிலையில் அனுபவிப்பதான் முறையானது, முழு இன்பத்தைத் தரக்கூடியது. இந்தப் பேருண்மை புரிந்துவிட்டால், இப்படியெல்லாம் நடந்துகொள்ள மாட்டார்கள்" என்கிறார்.

இந்தவகையக் கொடுமைகளிலிருந்து பெண்கள் தங்களை தற்காத்துக்கொள்வது எப்படி?

உடைகள் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். அதற்காக இழுத்துப் போர்த்திக்கொண்டு கட்டுப்பெட்டித்தனமாக இருக்கவேண்டும் என்பதல்ல செக்ஸை பற்றி தவறான அபிப்பிராயங்களும், மூர்க்கத்தனமான கண்ணோட்டங்களும் நிலவுகின்ற இந்த காலத்தில், பெண்கள் கண்ணியமாக உடையணிவது தான் அவர்களுக்கு பாதுகாப்பு. இளைஞர்களை வக்கிரங்களுக்கு தூண்டாத, நவீன ஆடைகளாகப் பார்த்து பெண்கள் அணியலாம்.

பெரும்பாலான பாலியல் வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில், ஒரே பெண்ணுக்கு பல ஆண்கள் சண்டை போட்டுக்கொள்வதுதான் காரணமாக இருந்திருக்கிறது. எனவே பெண்கள் தாம் 'வெளிப்படையாக' பழகுவதாக நினைத்து தங்களை அறியாமலே இச்சம்பவங்களுக்கு தூண்டுகோலாக அமைந்துவிடுகிறார்கள். எனவே பழக்க வழக்கங்களில் எச்சரிக்கை தன்மையையும் பக்குவத்தையும் பெண்கள் கடைப்பிடிக்கவேண்டி உள்ளது.


இளம் பெண்கள் ஆள் நடமாட்டம் இல்லாதப் பகுதிகளில் தனியாகச் செல்வதை தவிர்ப்பது நல்லது.

தற்காப்புக் கலைகள் மற்றும் அவசரத்துக்குத் தேவையான சிறு ஆயுதங்கள் போன்றவற்றை உடன் வைத்துக்கொள்வது கூட ஒரு விதத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பானதே

அலுவலகத்துக்கு செல்லும் பெண்கள், தங்கள் மேலதிகாரி மற்றும் இதர ஊழியர்களிடம் சற்று எச்சரிக்கை உணர்வுடன் நடந்து கொள்வதே பாதுகாப்பானது.

சந்தேகப்படும்படியான நபர்களை பார்த்தாலோ, அல்லது தங்களிடம் அத்துமீறி யாராவது நடக்க முயற்சித்தாலோ, உடனடியாக காவல் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்கத் தயங்க வேண்டாம்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலளவில்தான் வித்தியாசம். இருவரும் உணர்வுகளால் ஒரே மாதிரியானவர்கள் தான் என்பதை இந்த சமூகம் புரிந்து கொள்ளும்வரை, இத்தகைய வக்கிரச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.







# தசாவதாரத்துக்கு சிக்கல் நீ

தசாவதாரம் படத்தின் கதை தொடர்பாக பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்
என படத்தின் தயாரிப்பாளர் ஆஸ்கர் பிலிம்ஸ் ரவிச்சந்திரன் மற்றும் நடிகர் கமலஹாசன் ஆகியோ
சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கமலஹாசன் நடிக்கும் தசாவதாரப் படத்தின் கதை தன்னுடையது என்றும் அதை திருட்டுத்தன
தசாவதாரப் படத்தை எடுத்து வருகின்றனர் என்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு
தொடர்ந்துள்ளார். இந்த வழக்கை முதலில் விசாரித்த தனி நீதிபதி , செந்தில்குமாரின் மனுவைத்
தள்ளுபடி செய்து விட்டார். இதையடுத்து செந்தில்குமார் மீண்டும் மனு தாக்கல் செய்தார்.
இந்த மனுவை தலைமை நீதிபதி ஏ.பி. ஷா மற்றும் நீதிபதி ஜோதிமணி ஆகியோர் அடங்கிய
குழு விசாரித்து வருகிறது. கடந்த மாதம் படத்தின் முழு கதையையும், யார் பெயரில் அந்தக்
கதைக்கு அனுமதி தரப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் தாக்கல் செய்யுமாறு உயர்நீதி[illegible]ம்
உத்தரவிட்டிருந்தது. ஆனால் நீதிமன்றம் கூறியிருந்த காலத்திற்குள் இவற்றை தயாரிப்பாளர் தரப்பு
தாக்கல் செய்யவில்லை. இந்த நிலையில் நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது.
அப்போது நடிகர் கமலஹாசன் சார்பில் வழக்கறிஞர் சஞ்சய் ராமசாமி ஆஜரானார். படத்தின்
முழுக் கதையையும் மனுதாரரே கோருவது நியாயமற்றது என்று அவர் வாதாடினார்.
இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், படத்தின் முழு திரைக்கதையையும்
தாக்கல் செய்ய வேண்டும் என தயாரிப்பாளர் மற்றும் கமலஹாசனுக்கு உத்தரவிட்டனர்.
இந்தக் கதையின் நகலை மனுதாரருக்கு தருவது குறித்து ஓகஸ்ட் 7ஆம் திகதி முடிவு
அறிவிக்கப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# ரஹ்மானுக்கு ரூபா 2 கோடி!

முன்னணி ஹீரோ, ஹீரோயினியிடம் கூட கால்ஷீட் வாங்கி
விடலாம் போலிருக்கிறது. ஏ.ஆர்.ரஹ்மானைப் பிடிப்பது
தான் ரொம்ப கஷ்டமாக இருக்கிறதாம். அந்த அளவுக்கு
மனிதர் மகா பிஸியாக இருக்கிறார். ரஹ்மானின்
கால்ஷீட் கிடைப்பதற்காக மாதக் கணக்கில் காத்திருக்
கும் கோலிவுட், பாலிவுட் சினிமாக்காரர்களின் எண்
ணிக்கை வளர்ந்து கொண்டே போகிறது. இது போல
காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்தான்
எஸ்.ஜே.சூர்யா. சிரஞ்சீவியின் தம்பி பவான் கல்யாணை
வைத்து 'புலி' என்ற படத்தை தெலுங்கில் இயக்கவுள்
ளார் சூர்யா. இது அவரது 3ஆவது தெலுங்கு படம்.
மெகா பட்ஜெட்டில் படத்தை தயாரிக்கிறார்களாம்.
இந்த படத்துக்கு ரஹ்மான் தான் இசையமைக்க
வேண்டும் என்று திட்டவட்டமாக இருக்கிறார் சூர்யா.
ஆனால் ரஹ்மான் தனது வேலைகளில் படு பிஸியாக
இருப்பதால் இவருக்கு ரூ.2 கோடி வரை சம்பளம் பேச
தயாராக இருக்கிறாராம் சூர்யா. அந்தப் படத்தில்
ஹீரோவின் சம்பளமும் இதுதான் என்பது குறிப்பிடத்
தக்கது . சமீபத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினியின் சிவாஜி
படத்துக்கு ரஹ்மான் வாங்கிய சம்பளம் ரூ. 1.75 கோடி
என்கிறார்கள். அதையும் விட அதிகமாக ரஹ்மானுக்கு
தர தயாரிப்புத் தரப்பிடம் பேசி அனுமதி வாங்கி விட்
டாராம் சூர்யா இது குறித்து சூரியா நம் செய்தியாளரிடம்
கூறுகையில், "ரஹ்மான் விலை மதிக்க முடியாத இசைக்
கலைஞர். அவருக்கு எவ்வளவு சம்பளம் பேசியிருக்
கிறோம் என்பது இப்போது சொல்வது சரியில்லை.
அவருக்கு இதைவிட அதிகமாகக் கூடத்தரலாம்"
என்கிறார் சூர்யா.

## ஒரு நேரத்தில் ஒரு படம்தான்

ஒரு சமயத்தில் ஒரு படம்தான் நடிப்பேன். அதனால்
தான் நான் இன்னும் எந்த மொழித் திரையுலகிலும்
முன்னுக்கு வராமல் இருக்கிறேன் என்று கூறுகிறார்
ரிச்சா பலோட். தமிழில் தனக்கு அதிர்ஷ்டம் கிடைக்கா
மையால் அங்குமிங்கும் அலைந்து திரிந்து ஏதாவது
ஒரு மொழிப்படத்தில் அவ்வவ்போது காணப்படுகிறார்
ரிச்சா பலோட்.

# மாளவிகா - விவேக் கிஸ்

புன்னகை மன்னன் படத்தில் கமலஹாசனும், ரேகாவும் நடித்த முத்தக்காட்சியை அப்படியே
செய்து சிங்கக்குட்டி படத்தில் மாளவிகாவுக்கு 'நச்'சென ஒரு 'இச்' கொடுத்துள்ளாராம் விவேக்.
விட்டால் ரஜினியையே தூக்கிச் சாப்பிட்டிருப்பார் விவேக். அந்த அளவுக்கு சிவாஜியில்
அவருக்கு. காட்சிகளும், பன்ச் டயலக்குகளும் அதிகம் வைக்கப்பட்டிருந்தன. இருந்தாலும்
ரஜினி ஒரிஜினல் என்பதால் விவேக்கின் அட்டகாசம் ரஜினியைத் தாண்டி ஓடி
விடவில்லை. சிவாஜிக் குப் பிறகு இப்போது விவேக்குக்கு
நிறையபட வாய்ப்புகளாம். எல்லோரையும் போல் அப்படியே
செய்து கலாய்க் கும் விவேக், சிவாஜியையும் விடவில்லை
சமீபத்தில் வெளியான சுந்தர்.சி.யின் வீராப்பு படத்தில்
சிவாஜி ரஜினியைப் போலவே வேடமணிந்து கலக்கியி
ருந்தார். அடுத்து கமல்ஹாசனை வம்புக்கு இழுக்கப்
போகிறார். புன்னகை மன்னனில் காதலர்களான கமல
ஹாசனும், ரேகாவும் தற்கொலை செய்து கொள்ள
முடிவெடுத்து மலை உச்சிக்குப் போவார்கள். கடைசியாக
ஒரு டூயட் பாட்டை பாடி முடித்து விட்டு, மலை உச்சியில்
உள்ள நீர்வீழ்ச்சிக்கு வருவார்கள். அங்கு கண் கலங்க நின்ற
படி ரேகாவுக்கு, உதடு கலங்க முத்தம் கொடுப்பார் கமல்.
பின்னர் இருவரும் அங்கிருந்து விழுவார்கள்.
தமிழ் சினிமா இலக்கணப்படி ஹீரோ
மட்டும் சாகாமல் மரக்கிளையில்
சிக்கித் தொங்கியபடி தப்பி விடுவார்!!
இந்தக் காட்சியையும் விவேக்
அப்படியே செய்துள்ளார்.
விவேக் யாரையும் விடமாட்டார்
போல இருக்கு.....



# ஷங்கர் விரா

பாரதிராஜா மாதிரி ப
வேண்டும் என்ற இலட்
ஷங்கர். ஆனால், காலத்
இயக்குநராக மாறிவிட்ட
எஸ்.ஏ.சந்திரசேகரின் சிஷ்
இயக்குநராக அவதாரம் எ
மாவை தன்பக்கம் திரும்பி
படங்களை வித்தியாசமாக
கண்டவர். ஏன் இப்படி வி
சங்கரிடம் கேட்டால், "
இமயங்களைப் போல இய
சினிமாவுக்கு வந்தேன் ஆ
இயக்குநர் என்ற பெயர் எ
வருந்தியதே இல்லை. இ
டும். ஒவ்வொரு படமும்
துள்ளது ரசித்துத்தான் ஒவ்
வொரு படத் திலும் வியா
யம் ஒன்று கண்டிப்பாக இ



# திரைக்கு வருமுன் வேலின் சாதனை!

சூரியா - அசின் நடிப்பில், ஹரி இயக்கத்தில் உருவாகியுள்ள 'வேல்' படத்தின் சென்னை நகர விநியோக உரிமையை பிரபல திரைப்பட விநியோகஸ்தரும், திரையரங்க உரிமையாளர்கள் சங்கத் தலைவருமான அபிராமி ராமநாதன் ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு வாங்கியுள்ளார். சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கும் 'சிவாஜி' படத்தின் சென்னை நகர விநியோக உரிமையை, ஜீவி பிலிம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வாங்கியிருந்தார் அபிராமி ராமநாதன். இந்த நிலையில் 'வேல்' படத்தையும் இருவரும் இணைந்து ஒன்றரைக் கோடி ரூபா கொடுத்து வாங்கியுள்ளனர். இது சூரியாவின் கஜினி படத்துக்கு கொடுக்கப்பட்ட விலையை விட 65 லட்சம் ரூபா கூடுதலாகும். இந்த ஒப்பந்தம் குறித்து அபிராமி ராமநாதன் கூறுகையில், ''வேல் படத்திற்கு நல்ல பெயர் கிடைக்கும் என நம்புகின்றேன். எதிர்காலத்திலும், ஜீவி பிலிம்ஸுடன் இணைந்து இதைப் போன்ற படங்களின் விநியோக உரிமைகளை வாங்குவேன்'' - என்றார். செப்டெம்பர் மாதளவில் 'வேல்' திரைக்குவரும்.





நீழைப்பு

யோருக்கு

னழுக எடுத்து

வத்

# வதந்திகளுக்கு எனக்கு பயம் இல்லை - காதல் பரத்

'நோபாளி', 'பழனி', 'கில்லாடி' போன்ற படங்களில் நடித்து வரும் பரத் கூறியதாவது:-''இப்போது நடித்துவரும் மூன்று படங்களுமே மூன்று விதமாக இருக்கும். இப்படங்களைத் தவிர 'எம்மகன்' படத்துக்கு பிறகு திருமுருகன் இயக்கும் படம், ஹரி, சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் படங்களில் நடிக்கவுள்ளேன். ஜெனிலியா சந்தியா உடன் இரண்டு படங்களில் நடித்தேன். இதனால் அவருடன் சேர்த்து என்னைப் பேசினார்கள். இது உலக வழக்கம்தான். யார் பிரபலமாக இருக்கிறார்களோ அவர்களைப் பற்றித்தான் வதந்தி பரவும். இதையெல்லாம் நான் கண்டுகொள்ளப்போவதில்லை. இதே போல எனக்கு, 'சின்ன தளபதி என பழனி படத்தின் முன்னோட்டத்தில் போடுமாறு நான் வற்புறுத்தினேன் என்கிறார்கள். நான் யாரையும் வற்புறுத்தவில்லை. தெலுங்கில் 'காதல்', 'வெயில்' போன்ற படங்கள் நன்றாக ஓடியது. இதனல் நேரடித் தெலுங்கு படங்களில் நடிக்க கேட்கிறார்கள். தமிழில் நிறைய படங்களில் ஒப்பந்தமாகி இருப்பதால் அடுத்த ஆண்டு வரை வேறு எந்த மொழிப் படங்களில் நடிப்பதற்கும் நேரம் கிடைக்காது'' - இவ்வாறு பரத் கூறினார்.

# திரிஷாவை ஒதுக்கும் விஜய்?

இளைய தளபதி விஜய், திரிஷாவை ஓரம் கட்ட ஆரம்பித்துள்ளதாக பேச்சு கிளம்பியுள்ளது. தரணியின் இயக்கத்தில் விஜய் நடிக்கவுள்ள புதிய படத்திலிருந்து திரிஷாவைத் தூக்கிவிடுமாறும் அவர் கேட்டுக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கில்லி படத்தில் விஜய்யும், திரிஷாவும் இணைந்து நடித்ததால் அந்தப் படம் பெரும் ஹிட் ஆனது. அதிலும் விஜய்யும், திரிஷாவும் இணைந்து ஆடிப் பாடிய 'அப்படிப் போடு' பாட்டு பட்டி தொட்டியெங்கும் பட்டையைக் கிளப்பியது.

இதையடுத்து விஜய்யின் பேவரிட் பட்டியலில் திரிஷா இடம் பெற்றார். இருவரும் நல்ல முறையில் பழகி வந்தனர். இருவருக்கும் இடையிலான நட்பு ஹோலிவூட்டில் உள்ள அனைவருக்கும் நன்கு தெரியும்.

இந்த நிலையில்தான் போக்கிரி படம் மூலம் சிக்கல் வந்தது. இப்படத்தின் வெள்ளிவிழாவில் கலந்துகொள்ள திரிஷாவுக்கு அழைப்பு அனுப்பவில்லை விஜய். இதனால் திரிஷா அப்செட் ஆகிவிட்டார். தனது அம்மாவிடம் சொல்லிச் சொல்லி அழுதுள்ளார். இதை அறிந்த விஜய், திரிஷாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசி ஆறுதல் கூறியுள்ளார்.

மேலும் திரிஷாவையும், அவரது அம்மாவையும் கூப்பிட்டு தனியாக விருந்து கொடுத்து கூல் படுத்தினார்.

இந்த நிலையில் தரணி இயக்கத்தில், அமைச்சர் மு.க.ஸ்டாலின் மகன் உதயநிதி தயாரிப்பில் அடுத்து நடிக்கவுள்ள படத்தில் இருந்து திரிஷாவைத் தூக்கிவிடுமாறு விஜய், தரணியிடம் கூறியிருப்பதாக ஒரு புதிய செய்தி கிளம்பியுள்ளது.

திரிஷாவை நீக்கிவிட்டு அசினை அந்த இடத்தில் போடுமாறு தரணியிடம் விஜய் கூறியுள்ளாராம். உடனடியாக அசினைத் தொடர்புகொண்டு இந்த வேலைகளைச் செய்யுமாறும் அவர் தரணியைக் கேட்டுக் கொண்டுள்ளாராம். ஆனால், தரணிக்கு இதில் உடன்பாடு இல்லையாம். திரிஷாதான் எனது படத்தின் நாயகி. அவரை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை என்று அவர் கூறிவருகிறாராம்.

## ...பாரத்தனத்துடன் படம் எடுப்பது ஏன்?

...படங்களை எடுக்க
...லட்சியத் துடன் இருந்தவராம்
...லத்தின் கோலமாக வியாபாரப் பட
...ட்டதாகக் கூறியுள்ளனர். இயக்குநர்
...சிஷ்யர்தான் ஷங்கர். ஜெண்டில்மன் படம் மூலம்
... எடுத்தவர், முதல் படத்திலேயே தமிழ் சினி
...ம்பிப் பார்க்கவைத்தவர் ஷங்கர். தொடர்ந்து பல
...மாகவும், பிரமாண்டமாகவும் எடுத்து வெற்றி
... வியாபாரப் படங்களை எடுக்கின்றீர்கள் என்று
...ராஜா, பாலுமகேந்திரா, மகேந்திரன் போன்ற
...இயக்க வேண்டும் என்ற ஆசையில்தான் நான்
... ஆனால் எல்லாம் மாறி விட்டது. ''வியாபாரப் பட
... எனக்குக் கிடைத்ததை யிட்டு நான் ஒருபோதும்
... இந்தப் படங்களை எடுப்பதற்குத் திறமை வேண்
...ம் எனக்குத் திரிலான அனுபவத்தையே கொடுத்
...ஒவ்வொரு படத்தையும் எடுக்கின்றேன். ஒவ்
...யாபாரம் இருந்தாலும் அதையும் மீறி சமூக விட
... இருக்கும்.

# ...ஸின் கவலை

பெண்கள் பயப்படும் ஒரே விஷயம் முதுமை. ஹொலிவூட்டில் மிகவும் கவர்ச்சியான நடிகையான ஜெனிபர் லோபஸ்,தனது குழந்தைப்பருவம் மற்றும் இளமைப்பருவத்தில் சந்தோஷத்தின் உச்சியில் இருந்தார். இப்போது அவருக்கு வயது 35. இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு தனது உடல்நிலை எப்படி இருக்குமோ என நினைத்துப் ...யப்படுகிறார் லோபஸ். இத்தனைக்கும் இவர் ...ற்ற நடிகைகளைப்போல பிளாஸ்ரிக் சேஜரி கூட செய்துகொள்ளவில்லை. முகத்தில் ...க்கங்கள் விழத்தொடங்கினால், பிளாஸ்ரிக் சேஜரி செய்துகொள்ளும் முடிவில் ...ருக்கிறாராம். வெந்நீரில் அதிகநேரம் ...க்கும் பழக்கம் லோபஸுக்கு உள்ளது.

...அவரது இளமை அழகின் ரகசியம் ...ார்கள் ஹொலிவூட் ஒப்பனைக் ...ள். ஆனால், உயர் இரத்த அழுத்தம் ...ண்டவர்கள் இந்த ...நீர் குளியலில் ...கூடாது என்பது ...க்கியம்.

அமெரிக்காவின் ஆர்கன்ஸாஸ் மாகாணத்திலுள்ள ஜிம்பாப் (42) மிசெலீலி (41) தம்பதியினர் சாதனை மேல் சாதனை படைத்து வருகின்றனர். அது என்ன என்று யோசிக்கின்றீர்களா?

இவர்களுக்கு பதினேழாவது குழந்தை பிறந்துள்ளது. அதைத்தான் மடியில் வைத்துள்ளார் மிசெல்லி. படத்தில் வலமிருந்து மூன்றாவதாக இருப்பவர்தான் இந்த சாதனைகளின் காரணகர்த்தா ஜிம்பாப். மீதியாக நிற்கும் பதினாறு குழந்தைகளும் இவர்கள் பெற்ற செல்வங்கள் தான். இவர்கள் அனைவருக்கும் 'ஜே' என்ற எழுத்தில் தான் பெயர் ஆரம்பமாகிறது. மூத்த குழந்தைக்கு 19 வயதாகிறது. அதிலிருந்து எல்லா வயதிலும் இவர்களுக்கு குழந்தைகள் இருக்கின்றன. 17 குழந்தைகளிலும் 7 பேர் பெண்கள். இந்த ஜோடிக்குக் கல்யாணம் ஆகி 24 ஆண்டுகள் ஆகின்றன. முதலாண்டுகளுக்கு குழந்தை கிடையாதாம். அதன் பிறகு ஆரம்பித்த சாகசம்... இப்பொழுது பதினேழு குழந்தைகளைப் பெற்றுவிட்டார் மிசெல்லி. தன் வாழ்வில் 126 மாதங்களை (பத்தரை வருடம்) கர்ப்பிணியாகவே கழித்திருக்கிறார். ஜிம்பாப்புக்கு எஸ்டேட் தொழில் இருப்பதால் இத்தனை குழந்தைகளையும் சமாளிக்கமுடிகிறதாம். ஏழாயிரம் சதுர அடிகளுள்ள அவர்கள் வீட்டில் 9 பாத்ரூம்கள் உள்ளன. ஒவ்வொரு குழந்தையையும் கடவுளின் பரிசாக கருதும் இவர்கள் மேலும் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் திட்டம் இருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்கள்.

# பதினேழும் பெற்று பெருவாழ்வு



# பிரச்சினை தீர்க்கப்போனாள்! பிரக்னண்ட் ஆகிவந்தாள்?

பல்சுவை

- கலைநாவுக்கரசர் -



நம்மிடையே மற்றவரின் பிரச்சினைக்குள் மூக்கை நுழைக்கப்போய் நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டு வந்தவர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர். அண்மையில் சென்னையில் தன் தோழியின் பிரச்சினைகளைத் தீர்க்கச்சென்று ஒரு பெண் நன்றாக 'வாங்கி'க்கொண்டு வந்திருக்கின்றார். சென்னை புழல்பகுதியில் வசிப்பவர் அனுஷா. (பெயர்கள் மாற்றப்பட்டுள்ளது). அவரின் தோழிநிரஞ்சலாவுக்கும் கணவருக்கும்இடையே அடிக்கடி சண்டை ஏற்படுவதால் தன்னை அடித்து-உதைத்து வதைப்பதாக கூறினார். இதனால் அவர்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக அவர்களது வீட்டிற்குச் செல்வதை அனுஷா வழக்கமாக்கிக்கொண்டார். கணவன் - மனைவி இருவரையும் தனித்தனி அறைக்குள் சந்தித்து அவர்களின் குறைகளை அடிக்கடி கேட்கத் தொடங்கினார். இதனால், தோழியின் கணவன் மீது ஈர்ப்பு உண்டாகி தோழிக்குத் தெரியாமல் அவரது கணவரைச் சந்தித்துப் பேசத்தொடங்கினார். அவர்களுக்குள் காதல் மலர்ந்தது. தோழி வீட்டில் இருக்கும்போது சமாதானம் செய்தல் எனும் போர்வையில் தோழியின் கணவனுடன் தனியறையில் சந்தித்தார் அனுஷா. ஆனால், இதுகுறித்து நிரஞ்சலா எதுவித சந்தேகமும் கொள்ளவில்லை. பின்னர் அடிக்கடி சண்டை மூழ்குவதும் தோழி வந்தவுடன் சமாதானம் அடைவதுமே கணவரின் வாடிக்கையாய் போனது. அதனால், இன்று 7 மாத கர்ப்பிணியாக இருக்கின்றார் அனுஷா. தோழியின் கணவருடன் பழக்கம் ஏற்பட்டபோது அவர் திருமணம் செய்வதாகக் கூறினாராம். ஆனால், இப்போது திருமணத்தை மறுக்கின்றாராம். தன்தோழி கர்ப்பமாக இருப்பதற்குக் காரணம் தன் கணவர் என்று நிரஞ்சலா அறிந்தும் தன் கணவரை விட்டுக்கொடுக்க மறுக்கிறார். கணவரும் தான் அதற்குப் பொறுப்பல்ல என்கிறார். இப்பிரச்சினை நீதிமன்றம் வரை போயுள்ளது.




# எழுத்தாளரானார் டாக்டர் பிரகாஷ்



எழுத்தாளர் டாக்டர் பிரகாஷைத், தெரியுமா? என்று கேட்டால் பேந்தப் பேந்த முழிக்கும் நீங்கள் 'அந்த டாக்டர்' என்ற சொல்லுக்கு முன்பு 'செக்ஸ்' என்ற சொல்லைப் போட்டுக்கொண்டால் இவர் யாரென்பது பளிச்சென்று நினைவில் வரும்.

கேரளாவைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் பிரகாஷ் நரம்பியல்துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பல அரசியல் தலைவர்களின் செல்வாக்கும் மிக்கவர். தொழிலதிபர்கள், சினிமா நடிகைகள், மொடலிங்துறையில் ஈடுபடும் பெண்கள், பணக்கார வீட்டு இளசுகள் கூட தமக்குத் தடிமன் வந்தால் இவரைத் தான் நாடுவார்கள். இவர் பேச்சாலேயே பலரை மயக்கக்கூடியவர். அதனால், அழகான இளம்பெண்களால் நடமாடும் மெரீனா பீச்சாக இவரது வைத்தியசாலை காணப்பட்டது. பெண்களின் மீது சபலம் கொண்ட டாக்டர் பிரகாஷ் சிலருக்கு மயக்கமருந்து கொடுத்தும் சிலரின் விருப்பத்தின் பேரிலும் பெரும் பெரும் தொழிலதிபர்களின் மனைவிமார், பாடசாலை மாணவிகள், மொடலிங் பெண்களோடு என்று உறவுவைத்ததோடு, அவரின் மன்மத லீலைகளை புகைப்படமாக்கி வீடியோப்பதிவாக்கி இணையத்தில் உலாவவிட்டு பலரை மிரட்டி பலகோடிகளைச் சம்பாதித்தார். இதில் சம்பந்தப்பட்டவர்கள் மூச்சும் விடவில்லை. இதுவே இவர் பல்வருடம் இச்செயலில் ஈடுபடுவதற்கு பலமாயிருந்தது. இதற்குத் துணையாக இவரது மனைவி, தாதிமார், நண்பர்கள் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. இது கண்டுபிடிக்கப்பட்டு கைதாகி தற்போது சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் பிரகாஷ், சிறையில் கிடைக்கும பல நூல்களை வாசித்ததன் மூலம் இன்று பெரும் எழுத்தாளராகிவிட்டார். சிறையில் ஒருநாளைக்கு 40பக்கத்துக்கு மேல் எழுதித் தள்ளுவதாக கூறுகின்றார்.இவரால் எழுதப்பட்ட நாவலை வெளியிடுவதற்கு பிரித்தானியாவில் உள்ள பிரபல வெளியீட்டு நிறுவனங்கள் போட்டாபோட்டி போடுகின்றன. தற்போது 40 லட்சம் வரையில் இவரின் நாவலின் பெறுமதி இருக்கிறது. அதுபோதாதென்று தனது சட்டத்தரணிகள் மூலம் பேசிவருகின்றார் டாக்டர் பிரகாஷ்.





# ஆரோக்கியமான பிரசவத்துக்கு சில வழிமுறைகள்

நீங்கள் கர்ப்பமாக இருக்கின்றீர்களா? அல்லது விரைவில் குழந்தை பெற்றுக் கொள்ள திட்டமிட்டிருக்கிறீர்களா? அப்படியானால் இந்த கட்டுரையை ஒரு வரி விடாமல் படியுங்கள்.

**பெண்**

பெண்களின் வாழ்க்கையில் கர்ப்ப காலம் மகத்துவம் வாய்ந்தது. கருத்தரித்த நாளிலிருந்தே இந்த நினைப்பு ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் இருப்பது நல்லது, அவர்களை ஒவ்வொரு நிமிடமும் எச்சரிக்கையுடன் செயல்பட வைக்கக்கூடியது.

கர்ப்பகாலம் இனிமையானதுதான் என்றாலும், வலி மிகுந்தது. அந்த வலியை தாங்கும் பக்குவத்துக்கு ஒவ்வொரு கர்ப்பிணியும் தங்கள் உடலை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்!

கர்ப்பம் தரிப்பதற்கு நீங்கள் முழு உடல் தகுதியுடன் இருக்கிறீர்களா என்பதை முன் கூட்டியே டாக்டரிடம் பரிசோதித்து உறுதி செய்து கொள்ளுங்கள். இதுதான் நீங்கள் முதலில் செய்ய வேண்டிய விஷயம்.

சத்துள்ள உணவையே சாப்பிடுங்கள்!

கர்ப்பம் தரிப்பதற்கு முன்பிருந்தே உடம்புக்கு தேவையான அனைத்து சத்துகளும் கிடைக்கும் விதத்தில் சாப்பிடத் தொடங்குங்கள். அதிக அளவில் கோதுமை சப்பாத்தி, உருளைக் கிழங்கு, பழங்கள் மற்றும் காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். உடம்புக்குத் தேவையான கனிமங்கள், வைட்டமின்கள் போன்ற வற்றை இவை தருகின்றன. குறைந்த அளவில் வெண்ணெய், நெய், போன்ற கொழுப்பு நிறைந்த உணவுகளையும் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றின் அதிகப்படியான உபயோகம் உங்கள் எடையைக் கூட்டிவிடும். தவிர உடம்பில் சர்க்கரை அளவையும் கூட்டி, பற்களையும் பலவீனப்படுத்திவிடும்.

### குழந்தையை வரவேற்கத் தயாராகுங்கள்

குழந்தையின் மூளை, இதயம் மற்றும் முதுகெலும்பு போன்றவை வெகு சீக்கிரமே வளர்ச்சியடைத்தொடங்கிவிடும். குறிப்பாக முதுகெலும்பானது விந்தணுக்களில் இருந்தே உருவாகத்தொடங்கி விடுகிறது. மருத்துவ மொழியில் இது 'நியூரல் ட்யூப்' என அழைக்கப்படுகிறது. இந்த 'நியூரல் ட்யூப்' சரியாக அமையாவிட்டால் 'ஸ்பிட் ஸ்பைன்' என்ற நோய் ஏற்படும். இந்தநோய்த் தாக்குதலுக்கு உள்ளாகும் குழந்தைகளால் தங்களைத் தாங்களே கவனித்து கொள்ள முடியாது. சுயமாக எழுந்து நடக்கவும் முடியாது. எனவே முதுகெலும்பை பலப்படுத்த உதவும் வைட்டமின் -பி சத்துள்ள உணவுகளை அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### கர்ப்பிணிகள் கவனத்திற்கு....

போலிக் அமிலம் அதிகமுள்ள உணவுகளைச் சாப்பிடுங்கள்.

கரும் பச்சை நிறத்தில் இலைகள் உள்ள காய்க்கறிகளை அதிகம் உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

பழவகைகள் அதிகம் சாப்பிடுங்கள்

காய்கறிகளை அதிகம் வேக வைக்காதீர்கள். இல்லையென்றால் அவற்றிலுள்ள போலிக் அமிலம் அழிந்துவிடும்.

தேவைக்கு அதிகமாக போலிக் அமிலம் சேர்த்துக்கொள்வது தவறு. எனவே, டாக்டரின் ஆலோசகனைக்குப் பிறகு போலிக் அமில மாத்திரைகளைச் சாப்பிடவும்.

கர்ப்பம் தரிப்பதற்கு முன்பிருந்தே கூட போலிக் அமில மாத்திரைகளை எடுத்துக்கொள்ளலாம். இது குழந்தையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது.

கர்ப்பம் உறுதியான நாளிலிருந்து ஆட்டுக்கறி, கோழிக்கறி, மீன்கறி போன்ற உணவுகளை சாப்பிடுவதில் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். மீந்துபோன அல்லது பழைய இறைச்சியை சாப்பிடக்கூடாது.

க்ரில்லில் வெந்த இறைச்சியை சாப்பிடுவதும் நல்லதல்ல. வெளியில் மட்டும்தான் இவை வெந்திருக்கும் உள்ளுக்குள் பச்சை மாமிசமாகவே இருக்கும்.

சில உணவு வகைகளைச் சாப்பிடவே கூடாது. அவற்றால் பிறக்கும் குழந்தைக்கு நிறைய பிரச்சினைகள் தோன்றும். இந்த எச்சரிக்கையை கர்ப்பம், தரிப்பதற்கு முன்பிருந்தே கடைப்பிடித்து வரவேண்டும்.

ஈரல் அல்லது ஈரல் சாசேஜ் போன்ற வற்றைச் சாப்பிடவேண்டாம். இவற்றில் மிக அதிக அளவில் வைட்டமின் உள்ளதால் கர்ப்பிணிகளுகம் ஆபத்தை ஏற்படுத்தும். பச்சை முட்டை, அரை வேக்காடு முட்டை, வீட்டில் தயாரித்த சீஸ், கேக், ஐஸ்கிரீம் போன்றவற்றை விலக்கி விடுங்கள்.

---

# ரோஜாப்பூ உதடுகள் மினுமினுக்கும் நகங்கள்



உதடுகளை பலவிதங்களில் மேக்-அப் செய்து பார்ப்பவர்களை சுண்டி இழுக்கலாம். இந்த மேக் - அப், மங்கலான தோற்றமுள்ள உதடுகளையும் உயிரோட்டமுள்ளதாகக் காட்டும். உங்கள் உதடுகளுக்கு இயற்கையான, பளிச்சென்ற தோற்றம் தருவதற்கு முதலில் உதட்டுச்சாய வகைகள் குறித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

* நீங்கள் தினமும் லிப் கலர் பயன்படுத்துவதில்லை என்றாலும் பிரச்சினை இல்லை. புற ஊதாக் கதிர்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் 'லிப் பாம்' தடவுங்கள். தற்போது ஸ்ட்ரா பெர்ரி மற்றும் சொக்லெட் நறுமணத்துடன் கூடிய 'லிப் பாம்'கள் கிடைக்கின்றன. இவை உதடுகளை வறண்டதாக்கி விடும் என்றாலும் லிப் கலர் பூசுவதற்கு முன்பு இதைப் பயன்படுத்தினால் உதடுகள் வழுவழுப்பான தோற்றம்பெறும்.

* லிப்ஸ்டிக்கில் மெழுகு, எண்ணெய்கள், அல்ககோல், நிறமி ஆகியவை அடங்கியுள்ளன. இதனாலேயே அது உதடுகளை மிருதுவாக்கி வைத்திருக்கிறது. தற்போது க்ரீமி, மேட், க்ளாஸி', லிக்விட் எனப் பலவிதங்களில் லிப்ஸ்டிக் கிடைக்கிறது.

* க்ரீமி லிப்ஸ்டிக்கில் வைட்டமின் ஈ மற்றும் சிலிக்கான் அடங்கியுள்ளது. இது அடர்த்தியான நிறங்களை விரும்பும் பெண்களுக்கு உகந்த வகை ஆகும். இந்த லிப்ஸ்டிக், உதடுகளை மினுமினுக்கச் செய்வதுடன் ஈரப்பசையையும் தக்கவைக்கிறது.

* ஷிமர் லிப்ஸ்டிக்கில் நிறமி குறைவாகவே இருக்கும். நியூட்ரல் கலர்களை விரும்பும் பெண்களுக்கு பொருத்தமான தெரிவு இது. ஆனால், இது குறைந்த நேரம் மட்டுமே தாக்குப் பிடிக்கும்.

* மெட்டாலிக் மினுமினுப்பை விரும்புபவர்கள் ஷிமர் லிப் கலரை உபயோகிக்கவேண்டும். இதை ஒரு தடவை தடவினால் போதுமானது.

* ஷிமர் மற்றும் டின்டெட் என்ற இருவகைகளில் லிப் கிளாஸ் கிடைக்கிறது. இவை உதடுகளை கண்ணாடிபோல மினுங்கச் செய்கின்றன. ஆனால், இவற்றை அடிக்கடி பயன்படுத்தக் கூடாது.

* லிப் கலர் பல நிறங்களில் கிடைக்கிறது என்றாலும் எல்லாருக்கும் எல்லா நிறங்களுமே பொருந்தும் என்ற சொல்லமுடியாது. உங்கள் சரும நிறத்திற்கேற்ப லிப் கலரை தேர்ந்தெடுப்பது நல்லது.

* வெண்மையான சருமம் உள்ளவர்களுக்கு கிரிம்ஸன் பிங்க் போன்ற நிறங்கள் எடுப்பாக இருக்கும். ஆலிவ், மஞ்சள் மற்றும் கறுப்பு நிற சருமம் உள்ளவர்கள் வார்ம் அண்ட் ஆரஞ்சு நிறங்களை உபயோகிக்கலாம்.

* லிப் கலர் பயன்படுத்துவதற்கு முன்பு பவுண்டேசன் ஒரு லேயர் பூசுங்கள். லிப்ஸ்டிக் தடவிய பிறகு டிஷ்யூ பேப்பரால் உதடுகளை ஒற்றி எடுக்கவும் இது அளவுக்கு அதிகமான மினுமினுப்பு மற்றும் லிப்ஸ்டிக்கை உறிஞ்சிக்கொள்ளும்.

* லிப் கலரை அழிக்க வேண்டுமென்றால் கோல்ட் கிறீம், பேபி ஆயில் போறவற்றைப் பயன்படுத்துங்கள். அதை அழித்த பிறகு உதடுகளில் சிறிதளவு வாஸ்லைன் தடவுவது நல்லது.

(27ஆம் பக்கம் பார்க்க)

---

# சமைப்போம் சுவைப்போம்

## மைசூர்பாகு



**தேவையான பொருட்கள்**

கடலை மா - ஒரு கப்
நெய் - 2 கப்
சீனி - ஒன்றரை கப்
ஏலக்காய் பொடி - கால் தே.க.
முந்திரி துண்டுகள் - பெரிய தே.க.

**செய்முறை:**

ஒரு கப் நெய்யை உருக்கி கடலை மாவை சேர்த்துக் கலக்கவும். அடுப்பில் தாச்சியை வைத்து அதில் சீனி மற்றும் நீர் சேர்த்து ஒரு கம்பி பதத்தில் பாகு தயார் செய்யவும். இன்னொரு அடுப்பில் வேறொரு பாத்திரத்தில் எஞ்சிய நெய்யைச் சூடாக்கி தயாராக வைக்கவும். பாகு தயாரானதும் அதில் மெல்ல கடலைமா சேர்க்கவும். கூடவே கிளறிக்கொண்டிருக்கவும். மற்றைய கையில் சூடான நெய்யை தேக்கரண்டியினால் விட்டு கலக்கிக் கொண்டேயிருக்கவும். கடலை மா பொன்னிறமாக வந்ததும் அதில் ஏலக்காய் பொடி தூவி நெய் தடவிய தட்டில் ஊற்றவும். மேல்புறம் முந்திரித் துண்டுகளை தூவிவிடவும். ஆறியதும் விரும்பிய அளவில் துண்டுபோடவும்.

# சிறுவர் பக்கம்





## அழகாக நிறம் தீட்டுங்கள் 12




தம்பி, தங்கைகளே!
மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மிகச்சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.


# சிறுவர் கைவண்ணம்




கோகிலன்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



திவ்யா, 3 சி,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



தக்ஷியா, யு.கே.ஜி,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



லெரோன், யு.கே.ஜி,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.




பட்டம் நல்ல பட்டம்
பாலன் எனது பட்டம்
பருந்து போல பட்டம்
பறந்து போகும் பட்டம்

வண்ண வண்ண பட்டம்
வடிவான பட்டம்
வானில் பறக்கும் பட்டம்
வாலுள்ள பட்டம்

உயர உயர பறந்து
உச்சி மேலே செல்லும்
வாஞ்சையுடன் அப்பா
வாங்கி தந்த பட்டம்.

எஸ்.எம். அப்துல்லா மொஹிதீன்
தரம் 8 ரீ,
பு/விபுலானந்த தமிழ் மகாவித்தியாலயம்,
கொழும்பு.



## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 11



★பெயர் - ஸ்ரீபாலகுமார் டயாழினி ★தரம் - 5பீ
★பாடசாலை - இறம்பைக்கும் மகளிர் மகா வித்தியாலம், வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்...

1. ரி.ஜெகன்,
ஆண்டு 6,
மொட்டிங்ஹேம் த.வித்தியாலயம்,
மஸ்கெலியா.
2. டி.ஆர்.ஆன். டிலுக்ஷி,
ஆண்டு 7 சி,
நல்லாயன் ஆசினர் மகா வித்தியாலயம்
கொழும்பு - 13.
3. திலுக்ஷியா சரவணபவன்,
255/9டீ, லேன் 02 (12)ரி,
மன்னார் வீதி, புத்தளம்.
4. எம்.டி.ஐ. டியா,
தரம் 6,
கழகமுலை மத்திய கல்லூரி,
கெலிஓயா.

# பழம் பேப்பர்



## சிறுகதை

அ. இராசதுறை
தையிட்டி

அந்தப் பட்டினமும் அந்தக்கிராமமும் கொடுக்குமிடத்தில்... சரி சென்ரராய் அமைந்துபோயிருக்கும், மாலதி ஹோட்டல், பரிபூரணமாய் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது......

திடீரென்று.... அந்தப் பரபரப்பான, காலைப்பொழுதின் சலங்கை ஒலிபோன்ற கலகலப்பையும்... ஊடறுத்துக்கொண்டே வந்து விட்ட மோர்ட்டர் பைக்கொன்று மாலதி ஹொட்டல் வாசலைத் தொட்டு முட்டி மிடுக்காய் நின்று கொள்ளுகிறது....!

சுறுக்காய்,ஹெல்மெட்டையும், கறுப்புக்கண்ணாடியையும், சினிமா ஹீரோ பாணியில் விறுக்கென்று கழற்றிக்கொண்டு விட்ட அந்த மானிடம் ஒரு மும்பை எக்ஸ்பிரஸாய் மாலதி ஹோட்டல் வாசலை மூடி நின்றுகொண்டது.

இந்தஇவரைப்பார்த்தால் அந்தக் கமலைப் பார்க்க தேவையில்லை, அந்தக் கமலைப் பார்த்தால் இந்த இவரைப் பார்க்கத்தேவையில்லை என்றவிதமாய் அமைந்துவிட்ட இந்த இவரின் முகச் சாங்கத்தின் தொனிப்பு.

அந்த ஹோட்டலுக்குள்ளேயுள்ள கமல் இரசிகர்களையும் அச்சொட்டாய்த் தொட்டுத்தான் காட்டியேவிட்டாற்போலாய்..... சில முகங்களில்... பரவசம் பேசிக்காட்டுகின்றது.!

ஆனால், இந்த மாலதி ஹோட்டல் முதலாளி ஐங்கரனின் முகமோ எந்த வசத்தையுமே பேசிக்காட்டிகொள்ளத்தெரியாமல், முடியாமல் செத்த சவமாகிப்போயிருந்தது.

இப்ப ஒருமாதம் ஒன்றரை மாதக் கணக்காய் இதேமோட்டர் பைக்கில் தவறாது பத்திரிக்கை வாங்கவென்று மாத்திரம் இந்த மாலதி ஹோட்டல் வாசலுக்கு துள்ளுக்குதிரையாய், வந்து வந்துபோகும் இந்த இவனேதான்...! கமலராஜன் என்ற அழகான பெயரையுடைய இந்த இவனேதான்...!!

'இந்த மாலதி கேசின் தொடக்கமாயிருந்து அந்தத் தொடக்கத்தில் வந்துவிட்ட மடக்கத்தினால் கல்யாணத்தையே ஒரேயடியாய் வெறுத்துவிட்டு இந்த நிமிடம்வரையும் பிரமச்சாரிய விரதத்தையும் தன்னோடு கூடக் கொண்டுதிரிந்து கொண்டாடும் இந்த இவனேதான்...!!

இந்த நேரமாய் ஒரு வித்தியாசமான பார்வையுடைய ஒரு விதமான புதிரான ஆளாய் இந்த மாலதி ஹோட்டலையே, இப்பவே இந்த வினாடியே முழுமையாகவே வாங்கியே விடப்போகின்றவனாய், விழுங்கியே விடப்போகின்றவனாய் நிற்கின்ற கோலம்பறை ஐங்கரக்கடவுளையே, அங்குசம் தாக்கிவிட்டது போலிருந்துகொண்டது.

''மூனா.... பழம் பேப்பறிருந்தா. ஒண்டு தாங்கோ''! கமலராஜனின் இந்தக் கேளாக் கேள்வியில் சற்றும் எதிர்பார்க்காத, அதிர்வு அலைகளினால் அடியுண்டு, அள்ளுண்டு போய்விட்டவனாய் ஐங்கரன் இந்தப் பழம்பேப்பரினால் குத்திக்காட்டப்பட்டவிட்ட, இந்தப்'போடுகையை பரிபூரணமாய் விளங்கிமுடித்துக் கொண்டவன் போல காட்டிவிடாமல்......''ஏனப்பா உனக்கு பழம்பேப்பர்...? வடைசுத்தவா....? கால்துடைக்கவா? என்று அப்பாவிபோல் கேட்டுமுடித்துவிட்டு ஹோட்டல் முகப்பில் சுடச்சுடச் செய்திகளோடு தூங்கிவிழியும் புதிய பேப்பர்களில் தனது புதிய பார்வையைச் சிந்திவிடுகின்றான்...?

'ஓ மை டியர் பிரதர்...! பழம் பேப்பர் வடை சுத்தவுமல்ல கால்துடைக்கவுமல்ல அம்மாளுக்கு பூக்கொண்டு போறதுக்குத்தான்'..

கமலராஜன் இப்படியாய்... அந்தப் பழம் பேப்பரைத் தன் தலையில் தூக்கிவைத்தாடுவது போல் ஸ்ரெடியாய்க் கதை சொல்லி முடித்துவிட்டு, ஐங்கரனின் சிடுமூஞ்சியை ஒரு... ஹீரோ பார்வை பார்த்து விட்டதும்.... தூங்கி வழிந்து கொண்டிருந்த, புதிய பத்திரிக்கைகளெல்லாம் இருந்துவிட்டு வீசத்தொடங்கிய காற்றில்.. ஆடிப்போயே விடுகின்றன. இந்த மாலதிதான் பழம்பேப்பரா? இந்தப் பழம் பேப்பர்தான் மாலதியா?

இதெல்லாம் நான் பிள்ளையில்லாத காரணம் கொண்டு, மாலதியைப் பிறகழித்துவிட்டு பிரமதேவியை, மனைவியாக்கிகொண்டுவிட்ட மன ஆதங்கத்தினால் மாலதியின் பழைய காதலன் கமலராஜன் இப்படியெல்லாம்.. என்றெல்லாம் மாலதி ஹோட்டல் முதலாளி ஐங்கரன் தனது சிந்தனையை வெளியில் காற்றில் அடியுண்டு பறக்கும் பேப்பராய் பறந்து கொண்டபோது

''மூனா... பழம் பேப்பறிருக்கு எடுங்கோ''...

என்ற குரல் ஹோட்டல் மூனா சாக்கடைத் தண்ணீரில் விழுந்துபோன பேப்பராய் நாய்நோய்யென்றுதான் நிமிர்ந்து பார்த்தார்.

பக்கத்து தெருவில் வாசிக்கும் டொக்டர் வீட்டு வேலைக்காரப் பெடியன் இளித்துக்கொண்டு நின்ற காட்சி. மூனாவை சீனாவாக்கிவிட்டதுபோல் ஒரு ஆமிக்காரனாய் சினம் கொண்டுதான் நின்றார்.

நல்லகாலத்திற்கு அவர் வாயிலிருந்து துடித்துக்கொண்டே வரப்பார்த்துவிட்ட அம்மண வார்த்தைகள் தப்பிப்பிழைக்க.

''எட மொக்கா! உந்தப் பழம் பேப்பரை இஞ்சை என்ன இழவுக்கு? கொண்டுபோ கொண்டுபோய் கறிக்கடேக்கை வீசு போ''.

மூனா... பழம்பேப்பரிலிருந்த எல்லாம் ஆத்திரத்தையும் முறையாக வைத்து தாழிக்கச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டவர்போல் புதிய பேப்பர் கட்டினால் கமலராஜனின் மண்டையில் ஓங்கி ஒரு உலக்கைப்போடு போட்டேவிட்டவர்போல், வேட்டையாடு விளையாடாய் நின்று கொண்டிருந்த கமலராஜனை ஒரு காகப்பார்வை பார்த்து நின்று மன அவதிகள் பல பட்டுத்தொலைக்கின்றார்.

அடுத்தகணம் - அடுத்த கதைக்கு இடமில்லாமல் ஓர் அதிரடியாய், நிறுக்காமல் என்ன விலை என்று கூடக்கேட்காமல் ஒரு பெரிய தாளைத் தூக்கி அந்த பெடியனின் கையில் வைத்து விட்டு கமலராஜன், ஐங்கரன் மூனாவின் உச்சந் தலையில், அதே பழம்பேப்பர் கட்டினால் அதிரடி போட்டு விட்டாற்போல் அவர் முழித்துப் பார்த்திருக்க அந்தப் பழம்பேப்பர் கட்டோடு பாசாகியே விடுகின்றான்.

ஒருவாரம் கழித்து மாலதி ஹோட்டல் மூனா ஒரு பாந்தமான நீயூசைதான் கேள்விப்படவேண்டிவந்தபோதும் அதனை அவரால் யதார்த்தமாக்கிக்கொண்டு விடவும்முடியவில்லை.

ஓயாத சிந்தனை அலைகளோடு இந்தப் புதிய பேப்பரைத் தான் விழுந்து விழுந்து படித்துக்கொண்டிருந்த மூனா, மனத்தடம் பிரட்சியில் வாசித்து முடியாத புதிய பேப்பரைத்தான் பாதியாய்க் கிழித்து வடை சுற்றிக்கொடுத்து விட்டுத்தன் தலைவிதியில் அடித்துக்கொண்ட நேரமாகத் தான் கைத்தொலைபேசிக் கோலில் சில கவிதைவரிகள் அசைந்து வருகின்றன.

உன்னைப்படைத்தவனும், இந்தப் பிரமன்தான்...
என்னைப் படைத்தவனும் இந்தப் பிரமன்தான்...
இந்தப் புதுப்பேப்பர் பிரமதேவியைப்படைத்தவனும் இதே பிரம்மன்தான்...

அடியேனும் குட்லக்காய் இப்போ வாசிக்கத் தொடங்கி விட்டதும் இந்த பழம் பேப்பரைத்தான். இனி சூப்பராய் சுவாசிக்கப்போவது.... சத்தியமாய் இந்தப் பழைய தென்றலைத்தான்...

---

# இனிப்பும் கசப்பும் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு வாழ்க்கை

பெரு நகரங்களில் நிலத்தின் விலை, வானளவு உயர்ந்து விட்ட நிலையில், தனி வீடுகள் வெகு வேகமாக அருகி வருகின்றன. இந்த இடத்தை அடுக்குமாடி குடியிருப்புகள் ஆக்கிரமித்து வருவதைப் பார்க்கின்றோம். தனி வீட்டுடன் ஒப்பிடும் போது, 'பிளாட்டுகள்' எனப்படும் அடுக்கு மாடி வீடுகள் விலை குறைவானவை, பாதுகாப்பானவை. ஆனாலும் இவற்றில் வசிப்பர்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தால், ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு பிரச்சினை இருப்பது தெரியவரும்.

சில நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவம் இது.

ஞாயிற்றுக்கிழமை என்பதால் காலை 8 மணியாகிவிட்டது. படுக்கையை விட்டு எழுந்திருக்க. சூடான பெட் காப்பியும் நாளிதழும் கொண்டு வந்தாள், என் மனைவி. ஜன்னல் வழியே ஊடுருவி, படுக்கை அறையை வெதுவெதுப்பாகவும் பிரகாசமாகவும் மாற்றி வைத்திருந்தான், சூரியன். ஆர்வத்துடன் பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் இருளில் மூழ்கியது எங்கள் படுக்கையறை. 'திடீரென்று இருட்டி விட்டதே, மழை வரப் போகுதோ....?' என்று அதிர்ச்சியுடன் நிமிர்ந்தேன். மேல் மாடியில் குடியிருக்கும் ஒரு வீட்டுக்காரர், பால்கனி வழியாக காயப்போட்டிருந்த புடைவை எங்கள் ஜன்னலை மறைத்திருந்தது. இண்டர்காமில் அவர்களை அழைத்து விவரம் சொன்னேன். 'இதோ எடுத்து விடுகின்றேன்' என்று சொன்னார்கள். ஆனால் சொன்னதோடு சரி. ஆக, காலை நேரத்திலும் டியூப்லைட் வெளிச்சத்தில் பேப்பர் படிக்க வேண்டியதாயிற்று. இப்படி எத்தனையோ தடவை சொல்லியும் அவர்கள் திருந்துவதாக இல்லை .




கோடை வெயிலையும் வெளிச்சத்தையும் எங்களால் அனுபவிக்க முடிவதில்லை. அதே குளிர் காலத்தில் வீசும் ஜில் என்ற காற்றும் இப்படிப் புடைவையை காயப் போடுவதால் தடுக்கப்பட்டு விடுகிறது. மாலை [illegible]தும் பால்கனியில் உட்கார்ந்து டீ குடி[illegible]து எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் அந்த சந்தோஷம் எனக்கு எப்போதாவது தான் கிடைக்கும்.

'பிளாட்டு'களில் வசிப்பவர்களுக்கு இது போன்று இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. சுயநலத்தை மட்டுமே நினைப்பவர்கள், இப்படி தங்களை அறியாமல் பலருக்குத் தொல்லை கொடுக்கின்றனர். இது போன்றவர்கள் நடு இராத்திரியில் மேஜை, நாற்காலிகளை அங்குமிங்கும் இழுத்து, கீழே வீட்டில் வசிப்பவர்களின் தூக்கத்தைக் கெடுப்பார்கள். ஒரு சில நேரங்களில் காதைக் கிழிக்கும்படி மியூசிக் சிஸ்டத்தை அலற விடுவார்கள்.

மற்றொரு சம்பவத்தைப் பார்ப்போம்

(27 ஆம் பக்கம் பார்க்க)



# எங்கே எனது கவிதை?

"இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீங்க?"

" ஆபீஸ் வேலை அதிகம் மாலா.... அடுத்தவாரம் அலுவலாக வெளியூர் போக வேண்டும். அது....அதுதான் லேட் ஆகிவிட்டது".

"இல்ல நீங்க பொய் சொல்லிறீங்க; யாரோடையோ உங்களுக்கு ரகசியத் தொடர்பிருக்கு... சொல்லுங்க யாரவ?"

"அநாவசியமா நீஎன் மேல் சந்தேகப் படறே... நான் அப்படிப்பட்ட ஆள் அல்ல".

" இல்லை நீங்க என்னை நல்லா ஏமாத்துறீங்க... நீங்க முன்பு மாதிரி இல்லை... சிரிச்சுப்பேசறது இல்லை... ராத்திரி நெருங்கி படுத்தால் கூட தள்ளி விடுறீங்க.. இதுக்கெல்லாம் என்ன காரணம்?"

" நீ நினைக்கிறது தப்பு மாலா. உனக்கு உடம்பு சரியில்லை என்றுதான் ஒதுங்கியிருக்கேன். உன்மேல நான் வச்சிருக்கிற பாசம் துளியும் குறையாது !"

"என் உடம்புக்கு எதுவுமில்லை. நான் நல்லாய் தானிருக்கேன். வாங்க!"

மாலா தானே புடவை- ரவிக்கையெல்லாம் களைந்துவிட்டு என்னை வெறித்தனமாய் இறுக்கி அணைத்தாள்.

பெண்மையில் ஆண்மையின் வேகம். இதழ் பொருத்தி மூச்சு முட்ட முத்தமிட்டாள். நான் திணறினேன்.

" பிள்ளை எங்கே?" பேச்சு, மூச்சாய் வெளிப்பட்டது.

" அவனை முன்னமே தூங்க வச்சிட்டேன். நீங்க வாங்க .... எனக்கு நீங்க வேணும் முழுசா வேணும்.. உங்களை விடமாட்டேன்!"

அவளின் மூச்சுக்காற்று எனது முகத்தருகில் அனலாய்த் தகித்தது. வக்கிரமான உறவில் வாழ்வியல் கூசியது. எனது மனதுக்குள் புழுங்கினேன். மனைவியே வேசியான விந்தை . அவளின் நிர்மால்யத்தில் அழகில்லை. அரக்கி போல தெரிந்தாள். கோரைப் பற்களுடன் எனது உதடுகளை கடித்தபோது எனக்குள் உறங்கிக் கொண்டிருந்த மிருகம் விழித்துக்கொண்டது. கண்மூடி 'கதகளி' ஆடத் தொடங்கியது.

***

மூர்த்தியின் வீட்டு மொட்டை மாடி. துணையாய் நிலவு மகள் மட்டும்.

"தருண், ஏன் மௌனமாய் இருக்கே.. நீ வந்ததில் இருந்து சரியா சாப்பிடலை. பேசலை என்று கல்யாணி கூட வருத்தப்பட்டா.. உனக்கு என்னாச்சு.... மாலாவை ஏன் நீ அழைச்சிட்டு வரலை?" மூர்த்தி, எனது தோள்களைப் பிடித்து முகம் திருப்பியபோது, நான் குலுங்கி குலுங்கி அழுதேன்.

" அழறியா... சேச்சே.. ஆண்கள் அழக்கூடாது. பெண்கள் அழுதாலே எனக்குப் பிடிக்காது. சொல்லு, அழுகையை நிறுத்திவிட்டு உன் பிரச்சினையைச் சொல்லு.. என் தங்கச்சி மாலா எப்படியிருக்கா?"

" பிரச்சினையே மாலா தாண்டா!"

"தருண் என்னடா சொல்றே நீ... மாலா ரொம்ப நல்லவ, புழு- பூச்சிக்குக் கூடத் தீங்கு நினைக்காத மென்மையான மனசு அவளுக்கு.. சட்டென்று உணர்ச்சிவசப்படுவா... உனக்கு ஒன்று ஞாபகப்படுத்துறேன், நீங்க இரண்டு பேரும் காதலிச்சுத்தானே கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க!"

"அதை நான் மறக்கலை மூர்த்தி. காதலிச்சபோது இருந்த மாலா வேறு. கல்யாணத்துக்குப் பிறகு நான் பார்த்த மாலா வேறு."

"சரி அதைவிடு...ஏன் நீ மட்டும் பிள்ளையைத் தூக்கிட்டு வந்திருக்கே... மாலாவை ஏன் அழைச்சிட்டு வரலை?"

" இருந்தால் தானே அவளை நான் அழைச்சிட்டு வரமுடியும்!"என்றேன் நான் முதுகுகாட்டி .

"வாட் டு யு மீன்?"? மூர்த்தி எனது முகம் திருப்பி விழிகளை ஊடுருவிப் பார்த்தபடி கேட்டான்.

"மூன்று நாளாக அவளைக் காணவில்லையடா"!

" காணவில்லையா! என்னடா சொல்றே நீ?" கத்தினான் மூர்த்தி.

"மூர்த்தி டென்ஷன் ஆகாதே... நான் சொல்லுறதை பொறுமையாக கேள். அவளை தேடாத இடமில்லை. வேற வழி தெரியாமல் நான் உன்னைத் தேடி வந்திருக்கேன்!."

"என்னடா மடத்தனமாகப் பேசற.. அவ கூடப் பிறந்த நான் ஒரு பொலிஸ் அதிகாரி. என்னிடம் சொல்லாம நீமட்டும் தேடுனியா உன்னை நான் எப்படி நம்புறது?"

" மூர்த்தி என்னை நீ நம்பத்தான் வேண்டும். என் பிள்ளை மேல சத்தியமா நான் சொல்றது எல்லாம் உண்மை. சமீபகாலமாக மாலாவின் நடவடிக்கை சரியில்லை.. காரணமே இல்லாம என்மேல் சந்தேகப்பட ஆரம்பிச்சிட்டா... ஆபீஸிலிருந்து கொஞ்சம் பிந்தி வந்தாலும் ஆரோடு படுத்துவிட்டு வாரீங்க என்று கேட்பா. நாலைந்து மாசமா அவளுடன் நான் நரக வேதனை அனுபவிச்சன்."

" இதெல்லாம் நீ ஏன்டா என்கிட்ட சொல்லலை!?"

"எப்படிடா சொல்வன்... சொல்லவே வெட்கமாயிருக்கு.. பட்டப் பகல் என்று கூடப் பாக்காமல் திடீர் என்று எல்லாத்தையும் அவுத்துட்டு உறவுக்கு கூப்பிடுவா... மனசு தேவனைப் பட்டு மறுத்தாலும் விடமாட்டா!"

"இவ்வளவு நடந்திருக்கு, என்னிடம் மறைச்சிட்டியேடா.. அவளை ஏதாவது டாக்டரிடம் காட்டினியா?"

" எவ்வளவோ வற்புறுத்தியும் அவ டாக்டரிடம் வர மறுத்திட்டா.. காலப்போக்கில் சரியாகிடும் என்று நானும் நம்பினேன். குறிப்பா ஒன்று சொல்லவேணும். பிரசவத்துக்கு அப்புறம்தான் அவளிடம் இந்த மாற்றங்கள்!"

"சரி எப்போதிலிருந்து மாலாவை காணோம் நடந்ததை விளக்கமாகச் சொல்லு!"

"மூன்று நாட்களிருக்கும்.. அன்று ஆடி வெள்ளி... பெரிய கோயிலுக்குப் போனோம். கோயிலில் நல்ல கூட்டம். யாராவது பெண்ணை எதேச்சையாக நான் பார்த்தால் கூட மாலா என்னைத் திட்டி கொண்டே இருப்பா... உள்ளே தீபாராதனை காட்டும்போது புழுக்கம் தாங்காமல் பிள்ளை அழுதான். நான் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்துட்டேன். மாலா வருவா என்று நான் காத்திருந்தேன். நேரம் போனதே ஒழிய அவ வரவே இல்லை. வீட்டுக்கு திரும்பிட்டாளோ என்கிற நினைப்பில வந்து பார்த்தேன். அங்கேயும் காணவில்லை. எனக்குப் பதற்றமாக போச்சு. அந்த நிமிஷத்தில் இருந்து தேடிக்கொண்டிருக்கேன்."

"பொலிஸ்ல எதுவும் முறைப்பாடு குடுத்தியா?"

"இல்லை பிரச்சினையை உன்னிடம் சொல்லலாம் என்று கிளம்பி வந்திட்டேன். நான் தூங்கி மூன்று நாளாச்சு!"

"ஓகே. இனிமே நடக்க வேண்டியதை நான் பார்த்துக்கிறேன். உனக்கு யார் மேல யாவது சந்தேகம் இருக்கா?"

"மாலா தனியாக கோயிலுக்கு போகும்போதெல்லாம் மேம்பாலத்துக்கு

## உண்மைக்கதை

கீழே இருக்கிற கடையில் சில பையன்கள் உட்கார்ந்து இருந்து கிண்டல் பண்றதாச் சொல்லுவா... நான் போனால் அவங்க என் கண்ணில் படமாட்டாங்க. எனக்கு என் மாலா கிடைச்சா போதும்."

ஒருவாரம் கடந்தது. மாலா பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மூர்த்தி மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி கண்டன. பொலிஸாரின் உதவியுடன் கோவில் - கல்லூரி வாசல், பேருந்து நிலையம் போன்ற முக்கியமான இடங்களில் பெண்களை கிண்டல் செய்கிற இளைஞர்கள்- லோக்கல் ரவுடிகள் எல்லோரையும் பிடித்து வந்து 'லாடம் 'கட்டியும் உருப்படியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை .

குளிப்பது, சாப்பிடுவது அறைக்குள் அடைந்து கிடப்பது என்றிருந்த எனது நடவடிக்கைகள் மூர்த்திக்கு லேசாக சந்தேகத்தைக் கிளப்பின. எனக்கு தெரியாமல் கிளம்பிச் சென்று நாங்கள் குடியிருந்த வீட்டைச் சுற்றி இருந்தவர்களிடம் என்னைப் பற்றியும் மாலாவைப் பற்றியும் நன்கு விசாரித்தான் மூர்த்தி. இருவருமே அன்பாய் இருந்ததாகத்தான் எல்லோரும் சொன்னார்கள். வீட்டு வேலைக்காரி மட்டும் பிரசவத்திற்கு பிறகு மாலா எதற்கெடுத்தாலும் என்னிடம் வம்பு செய்ததைக் குறிப்பிட்டாள். எங்கள் வீட்டை திறந்து பரிசோதனை செய்த போது மூர்த்தியின் மனதில் ஒரு பொறி விழுந்தது. வீட்டில் இருந்த பொருட்கள் அப்படியே இருக்கின்றனவா? ஏதாவது இடம் மாற்றப்பட்டிருக்கின்றதா? ஏற்கனவே தான் பார்த்த பொருட்களை மனதில் வைத்துக்கொண்டு தடயம் தேடினான் மூர்த்தி. அதில் பலன் இருந்தது!

படுக்கை அறையில் கிடந்த கட்டில் புதிதாக கூடத்துக்கு இடம் மாறியிருந்தது. அதன் கால்களுக்கு கீழே புதிதாய் பெரிய தரைவிரிப்பு! ஏன் இந்த மாற்றம் ?கட்டிலை இழுத்துப்போட்டு தரைவிரிப்பை அகற்றிய மூர்த்தி அதிர்ந்தான். அங்கே 'மொசைக் கற்கள் பெயர்தெடுக்கப்பட்டு, புதிதாய் அரைகுறையான சிமெண்ட் பூச்சு! கதவை தாழிட்டு விட்டு கடப்பாரை- மண்வெட்டி சகிதம் தானே அந்த இடத்தில் தோண்டத் தொடங்கினான் மூர்த்தி.

***

நடு இரவில் ஊர் திரும்பிய மூர்த்தி . "தருண் எங்கே?" என்று கல்யாணியைக் கேட்டான்.

"மத்தியானம் சாப்பிடும் போது உங்களைக் கேட்டார். நீங்க வீட்டுக்கே போயிருக்கிறதா சொன்னேன். அப்போ அறைக்குள் போனவர் தான் வெளியே வரவேயில்லை. எனக்கு பயமாக இருக்குதுங்க!" பதற்றத்தோடு விவரித்தாள். கல்யாணி

"தப்பு பண்ணிட்டே கல்யாணி!" என்றபடியே அறைக்குள் ஓடின மூர்த்தி , தருண் ...தருண்!" என்று எவ்வளவோ கத்தியும் கதவு திறக்கவில்லை. சந்தேகம் வலுத்தது. மூர்த்தி ரிவால்வரால் சுட்ட பிறகே, தாழ்பாள் உடைந்து வழி விட்டது. உள்ளே ஒரு கடிதம் கிடந்தது.

'மூர்த்தி என்னை மன்னித்து விடு. பிரசவத்திற்குப் பிறகு மாலாவின் மூளை பிசகி விட்டதாய் மருத்துவர் சொன்னார். அமாவாசை பௌர்ணமிகளில் அவளைக் கட்டுப்படுத்த இயலாது. முழுக்க ஆடைகளை களைத்து அட்டகாசம் செய்வாள். தூக்க மாத்திரைகள் அவளிடம் தோற்றன. ஒரு முறை, பெற்ற பிள்ளையையே கொல்லத் துணிந்தாள். அதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த அவஸ்தை இன்னும் எத்தனை நாட்களோ? உயிராய் காதலித்த மாலாவின் உயிரை நானே எடுத்தேன். தெய்வம் என்னை மன்னிக்குமா? என் மகனைக் காப்பாற்றுங்கள்... என்னை மன்னியுங்கள்".

அறையின் ஜன்னல் கதவு திறந்திருந்தது நான் தப்பிவிட்டேன். சட்டத்தின் பிடியில் இருந்து நான் தப்பினாலும் மனச்சாட்சி தினம் தினம் என்னை கொன்றுகொண்டிருக்கிறது.



"ஏன் லேட்?"
"பைக் பஞ்சர்!"
"பஸ்ஸில வரவேண்டியதுதானே!"
"பஸ் வாங்கிற அளவுக்கு வசதி இல்லை!"



"எவ்வளவோ சொல்லியும் அந்த நடிகை ஒரு சீன்ல மட்டும் நடிக்கமுடியாதென்று சொல்லிட்டாங்களா? அப்படி என்னதான் அந்த சீன்ல இருக்கு?"

"மடத்துக்கு போய் சாமியாரைச் சந்திக்கிற மாதிரி சீன் வச்சோம் அதான்".

# கவிதைப் பூனல்

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

## நாளை வெல்வோம்



நித்தமும் யுத்தம்.
தெரு வெங்கும் ரத்தம்.
கத்திகள் குத்தும்
கண்களில் நித்தம்.

காற்றலை எங்கும்
பல்குழல் முழக்கம்.
பார்க்கும் இடமெல்லாம்
கண்ணீர்கடலேதுலக்கம்.

மனித உடல்களும்
நாய்களைப் போலவே.
மண்ணின் மீதிலே
பேய்களும் உலாவுதே.

பாவிகள் என்றபின்
பார்த்தும் விடுவாரோ.
சனக்குறைப்பு என்றபேரில்
சேர்த்தும் சுடுவாரோ.

தமிழன் நாய்களும்
பயங்கரவாதியாய்- இங்கு
தலை விதி இது என்று
வாய் மூடுவதா!?

உதிரத்தை இழந்தோம்
உரிமையை இழக்கோம்
புயலாக எழுந்து நாம்
புறப்பட்டு வருவோம்.

நரிகளை ஒழித்து
நாளையை வெல்வோம்.

● தமிழ் ஈழத்திலிருந்து
'புரட்சிப் புலி'

## ஹம்சத்வனியை தேடும்போது

அந்த புல்லாங்குழலின்
துவாரங்களுக்கிடையில்
உன்னை வாசித்தேன்

பனை உச்சியில் கள்
தேடும் தேனீக்களுக்கிடையில்
உன்னை யோசித்தேன்

காலை குளிக்கச்செல்லும்
நதிகளின் வளைவுகளுக்கிடையில்
உன்னை சுவாசித்தேன்

தினமும் தீண்டிச்செல்லும்
உன் நாம்புகளுக்கிடையில்
நான் யாசித்தேன்

இரவின் பனித்துளி தேடும்
விண் மீன்களுக்கிடையில்
என்னை நேசித்தேன்.

''எழுத்துக்கள் எரிந்தாலும்
எழுதப்பட்ட நினைவுகள்
எரிக்கப்படாது''



● தீபநாதன் விக்ரம்

## வாழும் வழி



நடந்ததை நினைத்து வருந்தாமல்- இனி
நடப்பதில் கவனம் செலுத்தி விடு!
உடைந்த பாத்திரம் ஒட்டு முன்னம்- நல்ல
உயரிய பாத்திரம் படைப்பது மேல்!
இடரினைக் கண்டு அஞ்சாது- அதை
இதய பலத்துடன் எதிர்கொள்ளு!
இறைவனைத் துதித்து கண்ணியமாய்- தினம்
கடமையைச் செய்து உயர்வடைவாய்!

● கலைமகள் ஹிதாயா ரிஸ்வி.

## சந்தர்ப்ப சரிவுகள்

சிங்கத்தின் முதுகில் கூட.
சுண்டெலிகள் உன்னி
சவாரி செய்யலாம்....
அஃது-
அயர்ந்து உறங்கும் போது...
சில நாழிகை மட்டும்!
ஆனால்-
அந்த நிலையும், நினைப்பும்
அடுத்தடுத்து நீடிக்குமா என்று
ஆருடம் பார்க்கத்தேவையில்லை!

குழி முயலின்
குருட்டுத்தனமான
நம்பிக்கையும் தூக்கமுந்தானே
ஆமையின் நகர்வுக்கு
அசுரவேகத்தைக் கற்பித்து,
அதன் போக்குக்குப்
பச்சைக் கொடி காட்டியது!

காற்று வாக்கில் பறக்கும்
குப்பை கூழங்களும்
கடைப் பதர்களும்
கோபுர உச்சியைத் தொட்டு
கர்வங் கொள்ளலாம்!
ஆனால்,
வைர மணிகள் பறப்பதில்லை!

சந்தர்ப்ப சரிவுகளைச்
சாதகமாக்கி, சன்னத்தனாய் வாகை சூட
ஜெயப் பேரிகை முழங்கும்
வெற்றி வாய்ப்பு.
என்றும் சாசுவத மானதன்று.

கோழி கூவித்தான்..
கிழக்கு வெளுத்ததா... என்ன?

● ஏறாவூர் அனல் அக்தர்

## நேசம் அல்லது நெல்லி மரம்



என்னையே பார்க்கும் நெல்லிமரம்
என்னவடிவாய்த்தான் உள்ளது.
என் முகத்தை விட!
மழைக்காலங்களில் அடுப்பில்
வைத்துக் கறுத்த சட்டியின்
நிறம் போன்ற அதன் தண்டு அதிலிருந்து
சிளைகளாய்ப் பிரிந்து நிற்கும் அதன்
இளம் பச்சை இலைகள்
மழைத்துளி பட்டு நிற்கும் போது
என்னவோ செய்கிறது எனை.

மாலை நேரங்களில் நான்
மிகுந்த துக்கத்துடன் இருக்கும்
வேளைகளில் அதனுடன்தான் பேசியும்
அழுதும் தீர்ப்பேன்.
வஞ்சகமும் பொறாமையும்
நிறைந்த மனிர்களது முகத்தைவிட அந்த
நெல்லிமரத்தின் உடல் முழுக்க
அழகாகவே உள்ளது.
என் நேசத்திற்குரிய நெல்லிமரம்!

● பெண்ணியா

## காதல் நிலா



அர்த்தமற்ற இராத்திரியில்
அரவமற்ற தனித் தீவில்
உறக்கமின்றி
தவிக்கின்றேன்.
நிலவே
உன் நினைவுகளால்...

விழியோடு கதைபேசி
உயிரோடு உறவாடி
எனைக் கவர்ந்து சென்றாள்
காதல் நிலா..

● மா.சிவசோதி யாழ் பல்கலைக்கழகம்

## சுனாமி அலைகள்



மனிதா!
நீ என்வாசல் வந்து
உட்கார்ந்து
ஓடி விளையாடி,
மண் வீடு கட்டி,
கால்கள் நனைத்து
சுதந்திரமாய்
இருந்தது கண்டு
நான் உள்ளம்
பூரித்துப் போனேன்.
ஆனால் உனது
கடவுளை மறந்த குணம்
என்னை கொடியவனாக்கி
சுனாமி என்ற பெயர்கொண்டு
பொங்கியெழுந்து
உன்னைப் பதம் பார்க்கும்
நிலைமைக்குத்
தள்ளிவிட்டது!!

● வெலிகம, ரிம்ஸா முஹம்மத்

## சி ரி வ ரா து

பருப்பில்லாத
சாம்பார்
பதமில்லாத
மருந்து
பொறுப்பில்லாத
கொடுக்கல், வாங்கல்
புதுமை செய்யாத சாதனை
விருப்பமற்ற
உறவு
விதண்டாவாதப்
பேச்சு
குருவில்லாத
வித்தை
குடியைக் கெடுக்கும்
குடி
பொருத்தமற்ற
திருமணம்
பூசையில்லாத
கோயில்
உருக்குலைந்த கரு
உண்மையில்லாத
நட்பு
சரிவராது!

● மூதூர் சேனையூரான்

## உனக்காக

● நாவிதன்வெளி கவிப்பிரியன் [?]



உனக்காக
என்று
யோசிக்கும் போது
நான்
சிந்திக்கும்
சிந்தனை கூட
தேனாய்
தித்திக்கின்றது...




## தென்கிழக்கை விட்டகன்ற கவிதை தீவு! தென்றலுன்னை சுமந்துவரும் இன்னும் உலவு!

■ கவிஞர் கலைமகள் ஹிதாயா ரிஸ்வி ■

தென்றலே கவிபாடும் தென்கிழக்கு மண்ணில் கிராமம் ஒன்றின் தெருக்கோடியில் நின்று கொண்டு கூழான் கல்லொன்றை கூலிக்கெடுத்தாவது விழிகளை மூடிக்கொண்டு வீசினால் விர்ரென்று விரைந்தேகும் அக்கல் விழும் இடம் ஒரு கவிஞனின் வீடாக இருக்கும் இல்லாவிட்டால் ஒரு எழுத்தாளனின் தலையாக இருக்கும்.

கன்னித் தமிழின் கழுத்துக்கு கனகமணி மாலையிட்டு விண்ணுலகம் விரைந்திட்ட முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார், அவர் அன்புச் சீடன் ஆசுகவி புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீன் போன்ற ஆன்றோர்களும்; வாடிநிற்கும் பயிராய், வாழ்வொடிந்த உயிராய், வரண்டு போன நதியாய் கிடந்த ஈழத்து இலக்கியத்தை வளப்படுத்தி வாகை சூடிய சான்றோர்களும் பிறந்து சரித்திரம் படைத்த மண் தென் கிழக்கு மண்.

அம்மண்ணில் நீலாவணன், யுவன், பாண்டியூரான், எம்.ஏ.நுஃமான், மருதூர் கொத்தன், அ.ஸ.அப்துல் ஸமது, அன்பு முகைதீன், எம்.எச்.எம்.அஷ்ரப், மருதூர்க்கனி, ஜின்னா ஷரிபுத்தீன், ஆஷாத் மௌலானா, சோலைக்கிளி, பொத்துவில் ஏ.மஜீத், ஏ.இக்பால், பாவலர் பஸீல் காரியப்பர், கவிவாணன், கலையன்பன் அஸீஸ், முத்து மீரான், மருதூர் ஏ.மஜீத், ஏ.ஆர்.எம்.சலீம், மருதூர்வாணர், ஈழமேகம், ஈழக் குயில் இத்ரீஸ், அக்கரையூர் அப்துல் குத்தூஸ், எஸ்.ரபீக், அக்கரை மாணிக்கம், அன்புடீன், பாலமுனை பாரூக், ஒலுவில் அமுதன்....... என்று உலக அதிசயமான சீனச்சுவர் போன்று இற்றைவரை நீண்டு செல்லும் படைப்பாளிகளின் வரிசையில் செங்கல்லோடு செங்கல்லாய் இல்லாமல் வைரக்கற்களோடு வைரக்கல்லாக தன்னையும் பதிப்பித்துக் கொண்ட பெண் படைப்பாளிதான் கலைமகள் ஹிதாயா ரிஸ்வி.

இணையத்தில் ஒரு கவிதை இடம் பெற்றால் 'நோபல்' பரிசு 'லெவலுக்கு' கூத்தாடும் சில படைப்பாளிகள் தம் கவிதை மக்கள் இதயங்களில் இடம் பிடித்திருக்கின்றதா என்று ஒருபோதும் எண்ணிப் பார்ப்பதில்லை! எழுதப்படுவதால் மட்டும் எந்தப் படைப்பும் வாழாது. எண்ணற்றவர்களால் படிக்கப்படுவதாலும் எண்ணங்களில் பதிக்கப்படுவதாலுமே அப்படைப்பு என்றென்றும் ஜெயம் பெற்று ஜீவிக்கும். அதனால், அப்படைப்பாளியின் பெயரும் முழுநிலவாய் பிரகாசிக்கும். கவிதைக்கு அனுபவம் வானத்திலிருந்து 'வஹி'யாக இறங்குவதில்லை. வாழ்க்கையில் இருந்துதான் அது கிடைக்கிறது என்ற கருத்துக்களோடு கைகுலுக்கிக் கொள்ளும் இவர், ஈழத்துப் பெண் படைப்பாளிகள் வரிசையில் தன்னையும் ஒருவராக நிலைநிறுத்திக் கொண்டவர்.

ஈழத்து இலக்கியத்தை கொத்திச் செதுக்கி அழகு படுத்தியதில் முஸ்லிம் படைப்பாளிகளின் பங்கும் அளப்பரியது. ஆனால் பெண் படைப்பாளிகளின் பங்கோ அரிதானது. ஆங்காங்கே தொட்டம் தொட்டமாக எழுந்த சில பெண் படைப்பாளிகள் தோல்விகளையெல்லாம் தோற்கடித்து எழுவான் கதிர்களாய் எழுந்து வந்திருப்பது சாதனைக்குரியதே.

1964-04-01ஆம் திகதி அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதில் பிறந்த நம் கவிஞர் ஹிதாயா ஏ. மஜீத் என்ற இயற்பெயர் கொண்டவர். 1982இலிருந்து கலைமகள் ஹிதாயா, நிஷா, நஹிதா எனும் புனை பெயர்களில் எழுதி வருகின்றார். மரபுக் கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, விமர்சனங்கள், கட்டுரைகள், மெல்லிசைப் பாடல்கள், வானொலி நாடகங்கள் என்று எத்துறையிலும் முத்திரை பதித்து வருகின்றார். இவரது படைப்புக்கள் ஈழத்தில் வெளிவரும் அனைத்து சஞ்சிகைகள், பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளதோடு இந்தியாவிலிருந்து வெளிவரும் சமரசம், கதவு, பாலம் மேற்கு ஜேர்மனில் இருந்து வெளிவரும் தூண்டில் போன்ற சஞ்சிகைகளிலும் இடம் பெற்றிருக்கின்றன. 1986இல் 'நாளையும் வரும்' புதுக் கவிதைத் தொகுதியை தந்த கவிஞர், 2000இல் சிந்தனை வட்ட வெளியீடாக 'தேன் மலர்கள்' என்ற மரபுக் கவிதைத் தொகுதியையும் தந்துள்ளார். இலங்கையில் முஸ்லிம் பெண் கவிஞர் ஒருவரினால் எழுதி வெளியிடப்பட்ட முதல் மரபுக் கவிதைத் தொகுதி இதுவாகும். அத்தோடு 'இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை' எனும் கவிதை நூலை கவிஞர் மஸீதா புன்னியாமீனுடன் இணைந்து 2000ஆண்டில் வெளியிட்டுள்ளார்.



இலங்கையில் வெளியான 'புதிய மொட்டுக்கள்', 'பாலங்கள்', 'எழுவான் கதிர்கள்', 'மணிமலர்கள்', 'புதிய பூக்கள்' போன்ற கவிதைத் தொகுதிகளிலும் இவரது கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. இவரின் தரமான பல கவிதைகள் 'பஸீர் அஹமட் அல் அன்சாரி – அல்– காதிரி' அவர்களால் அரபுமொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதோடு பேராதனைப்பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் க.அருணாசலம் அவர்களது 'மலையக இலக்கியம்' ஆய்விலும் உள்வாங் கப்பட்டுள்ளன. இலங்கை அரசின் இலவச பாடப் புத்தகமான தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 9 நூலில் இவரது 'வாழும் வழி' எனும் கவிதையும் இடம் பெற்றுள்ளது ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு பெண் கவிஞருக்கு கிடைத்த மகத்தான பரிசாகும்.

'தடாகம்' எனும் கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து இலைமறை காய்களாக இருக்கும் பல இளம் தலைமுறையினர் மேல் இலக்கிய வெளிச்சத்தை பாய்ச்சி வெளியுலகுக்கு அறிமுகப்படுத்திய இவர் 'தடாகம்' எனும் இலக்கிய வட்டத்தின் சார்பில் பல கலை உள்ளங்களை 'கலைத்தீபம்' விருது வழங்கி கௌரவப் படுத்தியுள்ளார். அதில் அல்ஹாஜ், எஸ்.எச்.எம்.ஜெமீல், மல்லிகை டொமினிக் ஜீவா, கலாபூசணம் புன்னியாமீன், பேராசிரியர் சோ.சந்திரசேகரன், டாக்டர் ஜின்னா சரிபுத்தீன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர் கலை இலக்கிய உலகில் சிறகு கட்டிப் பறப்பதற்கு இவருக்கு கிடைத்த பரிசுகள், விருதுகள் ஊக்கம் கொடுத்துள்ளன. 1988இல் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாமிடம் பெற்றமைக்காக ஜனாதிபதியின் விருதும் சான்றிதழும் பெற்றிருக்கின்றார். 1999ஆம் ஆண்டில் 'ரத்ன தீப' சிறப்பு விருது பெற்றுக் கொண்ட முதலாவது முஸ்லிம் பெண் கவிஞர் இவர். 2002ஆம் ஆண்டில் இலங்கை முஸ்லிம் கலாசார அமைச்சின் அனுசரணையோடு நடத்தப்பட்ட உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் இளம் படைப்பாளிகளுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டவர்களில் இவரும் ஒருவர். 2007ஆம் ஆண்டில் உயன்வத்தையில் நடைபெற்ற இலக்கிய விழாவில் கூட இவருக்கு 'கலையரசு'ப் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளனர். இவரது இரண்டு கவிதை நூல்கள் இந்தியாவில் பேராசிரியர் அக்னி புத்திரன் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு பல்கலைக் கழக மட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. மலேசியாவில் அமைந்துள்ள உலகத் தமிழ் கவிஞர் பேரவையின் அங்கத்தவர்களில் ஒருவராக, இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் 'மாதர் மஜ்லிஸ்' பிரதி அமைப்பாளர்களில் ஒருவராக இருக்கும் இவர் வானொலி, தொலைக்காட்சி கவியரங்கங்களிலும் பங்கு கொண்டுள்ளார். ஆரம்பக் கல்வியை ஆங்கிலத்தில் ஆரம்பித்து கல்– எலிய முஸ்லிம் பெண்கள் அரபுக் கலாசாலையில் முடித்துக் கொண்ட இவர் இன்று குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவெலயில் வசித்து வருகின்றார். மிக விரைவில் 'விடியும் வானம்' எனும் சிறுகதை நூலை வெளியிட உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உணர்வுகள் தொடரும்...)

# ஆபிரிக்க இலக்கியம் குறித்த ஒரு கதையாடல்



ஆபிரிக்க இலக்கியம் பற்றி இளைஞர் மீநிலங்கோ தெய்வேந்திரன் தமிழ்ச் சங்கத்தில் உரைநிகழ்த்தினார். தெய்வேந்திரன் என்பது தமிழ்ப்பெயராக இருந்தபோதும் 'மீநிலங்கோ' என்பது ஓர் ஆபிரிக்க ஓசையுடன் மனதில் எதிர்வலைகளை எழுப்பியதால் உரையில் அவதானம் உறைந்துபோய்விட்டது.

'வேட்ப மொழிக' (பேசவேண்டியதைப் பேசுக) என்ற தலைப்பில் உரை ஒலித்தது. நிகழ்வு படித்ததும் பிடித்ததும் ஙுகி வா தியாங்கோ (NGUGI WA THIONGO) கொலனியாதிக்க சிந்தனையிலிருந்து மனதை விடுவித்தல். ஆபிரிக்க இலக்கியத்தில் மொழியின் அரசியல். அம்மாக்களும் நிழல்களும் (MOTHERS AND SHADOWS) முகமது அப்சல் குரு (MOHAMMED AFAL GURU) லியோனார்ட் பெல்ட்டியர் (LENNARD PELTIER), மூமியா அபுஜமால் (MUMMIA ADU-JAMAL) ஆகியோர் பற்றியும் அவர்களின் ஆக்கங்கள், செயற்பாடுகள் குறித்தும் உரை அமைந்திருந்தது.

கென்யா படைப்பாளியான தியாங்கோவின் படைப்புகள் முதலில் ஆங்கில மொழியில் வெளிவந்தன. பின்னர் பிரதேச மொழியான கிக்கியு (GIKYU) வில் எழுதினார். அரசைக் கடுமையாக விமர்சித்த எழுத்துகளின் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டார். சிறைவாசத்தின்போது 'சிலுவையில் தொங்கும் சாத்தான்கள் (DEVIL ON THE CROSS) எனும் நாவலை எழுதினார். கிக்கியு மொழியில் எழுதப்பட்ட இந்நாவல் மலசலம் துடைக்கும் கடதாசியில் எழுதப்பட்டதாகும்.

ஆங்கிலம், பிரதேச மொழி இவற்றில் எதில் எழுதுவது என்ற கேள்விக்கு தியாங்கோவின் பதில் பிரதேச மொழியாகும். துன்புறும் அல்லது விடுதலைக்காகப் போராடும் மக்களை அது எளிதாக சென்றடைகின்றது என்று அவர் வாதிடுகிறார். கிக்கியு மொழியில் எழுத ஆரம்பித்ததன் பின்னரே அரசின் கடுமையான தாக்குதலுக்குள்ளானதே இந்த வாதத்திற்கான ஆதாரசுருதியாகும்.


மார்த்தா த்றாடாவினா இலத்தீன் அமெரிக்காவின் அதிசிறந்த ஓவியர்களில் ஒருவர். 'அம்மாக்களும் நிழல்களும்' இவரின் படைப்பாகும். இராணுவ ஆட்சியின்போது காணாமல் போனவர்கள், அன்றைய படுபயங்கர சூழல் என்பன நாவலின் அடிநாதமாகின்றது.

லியோனார்ட் பெல்ட்டியர் வட அமெரிக்க பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். அம்மக்களுக்கு எதிராக அமெரிக்க அரசு மேற்கொண்ட அடக்குமுறைகளை எதிர்த்துப்போராடியவர். அவர்மீது பொய்யாக வழக்குச் சோடிக்கப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

மூமியா அபு ஜமால், ஓர் ஊடகவியலாளர். பன்முகப் போராட்டங்களை முன்னெடுத்த இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. அவர் செய்த 'குற்றம்' ஆபிரிக்க மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்துப் பேசியதும் எழுதியதும்தான்.

இவர்களெல்லாம் ஆபிரிக்க மக்களுக்காக குரல் கொடுத்தவர்கள், எழுதியவர்கள்; இவர்களைத் தவிர 2001 டிசம்பர் 13 இல் இந்திய நாடாளுமன்றத்தின் தாக்குதலுக்குத் துணைபுரிந்தார் என்று குற்றம்சாட்டப்பட்டு இந்திய உயர்நீதிமன்றத்தால் மரணதண்டனை அளிக்கப்பட்டவர் முகமது அபீசல் குரு. இவர் மீதும் பொய்யான சாட்சிகள் சோடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது என்பது உரையாளரின் தர்க்கம்.

ஒரு யுகத்தின் துன்பியலுக்கெதிரான குரல் பிறிதொரு யுகத்தின் குரலாக எதிரொலிப்பது ஆச்சரியத்திற்குரிய தொன்றல்ல. உலகம் ஒன்று, நாடுகள் பல, பிரதேசங்கள் பல, இனங்கள் மொழிகள் பல என்று விரிந்து கிடப்பது யதார்த்தமானபோதும் சுரண்டலும் அடக்குமுறையும் கொடூரங்களும் தொடர்கதையாகவும் ஒரே தன்மை வாய்ந்தனவாகவுமே உள்ளன. அடக்குமுறையாளர்கள் அடக்கப்படுபவர்கள் என இருகூறுகளாக மக்கள் அணியாகி நிற்கின்றபோது, அடக்குமுறையாளர்களின் மீறல்கள் அரசியல் போராட்டங்களாகவும் இலக்கிய எரிமலைகளாகவும் வெடித்துக் கிளம்புகின்றன. ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளினது மட்டுமல்ல ஐரோப்பிய மத்திய கிழக்கு, தென்கிழக்காசிய, இந்தியா, இலங்கை நாடுகளினதும் இலக்கியங்களினதும் எழுத்துக்களிலும் இவற்றை நாம் காணமுடியும். ஆனால், உரையாளரின் கொடுமைகளுக் கெதிரான நேர்த்தியான சொற்பொழிவில் ஆபிரிக்க இலக்கியங்கள் மட்டுமே சுட்டப்பட்டன. இலங்கை இந்திய யதார்த்தப் படைப்புகளின் மீதான ஆழமான கண்ணோட்டமின்றி மேற்போக்கான ஜனரஞ்சக படைப்புக்களை மட்டுமே



அவதானத்திற்கு எடுத்துக் கொண்டு கிண்டல் செய்வது எமது மரபாகி வருகிறது. உரையாளர் அந்த அளவுக்கு கிண்டக்குப் போகாமல் ஆபிரிக்க இலக்கியத்தினதும் அந்த படைப்பாளிகளினது அந்தரகத்தியான போராட்ட உணர்விலும் தன்னை இழந்து உரையாற்றினார். நமது மக்களினது மொழி உணர்வின் அஸ்தமனம் குறித்துச் சொன்னார். பிரதேச மக்களின் மொழியில் எழுதவேண்டியதன் அவசியத்தை ஆபிரிக்க படைப்பாளி வலியுறுத்துவதை குறிப்பிட்டார். நமது குழந்தைகளுக்கு இங்கிலிஸ் தெரியும் என்பதை வெளிப்படுத்தவே பெற்றோர் அந்தரப்படுவதாகத் தெரிவித்தார்.

சுற்றத்தார் வீடு வந்ததும் குழந்தைக்கு 'பா...பா..பிளக்சிப்...' பாடம் சொல்லிக் காட்டுவார்கள். இது ஒருவித இங்கிலிஸ் போதை. இந்தப் போதை நம் மக்களை ஆட்டிவைக்கத் தொடங்கியிருக்கிறது. என் பிள்ளைக்கு இங்கிலிஸ் தெரியும் என்பது பெருமைக்குரியதுதானே. தெய்வேந்திரன் இதனை நையாண்டியாகவே சுட்டிக்காட்டினார்.

ஆனால், நமது சில எழுத்தாளர்களும் விமர்சகர்களும் கூட ஒருவித போதையில் இருக்கிறார்கள். எமது படைப்புகளை விட எமக்கு வெளிநாட்டு படைப்புகளைத் தான் தெரியும் அவற்றைத்தான் நாம் வாசிக்கின்றோம்' என்ற போதைதான் அது. இது பொல்லாதது. உரையாளருக்கும் அந்தப் போதை உண்டா என்ன? நமது படைப்புகளில் நாவல், சிறுகதை, கவிதை, அட்லீஸ்ட் ஒரு குட்டிக்கதையையாவது அவர் சபையோர் முன்னே கொட்டியிருக்கலாம். நெல்லுக்குள் அரிசி இல்லாமலா போகும். 'எங்கப்பன் குதிருக்குள் என்ன கிடக்கு' என்று கேட்கலாமா?

பிரதேச மொழியில் எழுதப் படும் படைப்புக்கள் சம்பந்தப் பட்ட மக்களை முழுமையாகச் சென்றடையும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? நம்மில் எத்தனைபேர் நம்மக்களின் போராட்ட படைப்புகளை வாசித்திருக்கிறோம்? மக்கள் முன் கொண்டு சென்றிருக்கிறோம்? அவை குறித்து எழுதுவதும் பேசுவதும் தவிர்க்க முடியாத கடமைகள். அவற்றைச் சர்வதேசத்திற்கு ஆங்கிலமே எடுத்துச் செல்லும் என்பதை, மறுக்கமுடியுமா? உரையாளர்கூட சிலுவையில் தொங்கும் சாத்தான்களை ஆங்கிலத்தில் தானே உள்வாங்கினார். இந்த உலகமயமாக்கல் உலகில் ஆங்கிலம் தவிர்க்க முடியாத இணைப்பு மொழியாகிவிட்டது. ஆங்கிலத்தை விட்டால் எமது இலக்கியம் சர்வதேசத்தைச் சென்றடைய முடியாது.

இளைஞர் தெய்வேந்திரன் ஆபிரிக்க இலக்கியம் குறித்து பேசி பல பிரச்சினைகளை நம்முன் கிளர்த்திவிட்டார். இவற்றை மேலும் மேலும் முன்னெடுத்தல் நமது விமர்சகர்கள், ஆக்க இலக்கிய படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் முன்னே விரிவாகும் பணியாகும்.

சபை அவரின் உரையைப் பெரிதும் வரவேற்றது. கவிஞர்களான சடகோபன் திருக்குமரன் உட்பட தேவதாஸ், சுதாகரன், எழுத்தாளர் பாலவயிரவ நாதன் இந்துக்கல்லூரியின் அதிபர் இராஜரட்ணம் தலைமை வகித்த இரகுபதி பாலஸ்ரீதரன் எனப் பலரும் பாராட்டினர். ஒரு கடினமான விவகாரத்தை எவ்வாறு தகவல் தேடுதலுடன் ஆற்றவேண்டும் என்பதை வெளிக்கொணர்ந்த விதத்தில் தெய்வேந்திரனிடம் முதிர்ச்சி முளைவிட்டிருந்தது. முரண்பாடுகள் இருந்தாலும் ஓர் ஆழமான நல்ல உரையைக்கேட்ட மனநிறைவு ஏற்பட்டது.

**-கே.வி-**



# ஸ்ரீமான் சஞ்சாரி

## சலாம் பாபு! சலாம் பாபு! என்னைப் பாருங்க

"குட்டி யாழ்ப்பாணம்னு சொல்லதாங்களே அந்த வெள்ளவத்தையிலே நடந்தவொரு சமாச்சாரம் தெரியுமாலே"

"எதைச் சொல்லுதியே?"

"எல்லாம் நம்ம இலக்கிய உலக சமாச்சாரம் மாதுரிதான்"

"அடிசக்கை! சொல்லுங்கோ சொல்லுங்கோ"

"வெளிநாட்டுப் பணம் மாற்றுச் செய்யுர ஒரு ஆபிசுலே நாலு களவாணிப் பயலுவ நொழைஞ்சு 2 கோடி பணத்தை அள்ளின்னு பொய்ட்டானுவ"

"என்ட நாயனே!"

"இந்த களவாணிப் பயலுவ உள்ளே தில்லுமுள்ளு பண்ணின்னிருந்தப்போ வெளியால போயின்னிருந்த ஒருத்தர் சந்தேகப்பட்டு அங்கே ரோந்து சுத்தின்னிருந்த பொலிஸ்காரன் காதுல சமாச்சாரத்தைப் போட்டு வைச்சுட்டாரு. 'அடிச்சது சுவீப்'ன்னு துள்ளுன பொலிஸ்காரனும் உள்ளே நொழைஞ்சானு. ஆபிசுக்குள்ளே ஒரு பொலிஸ் அதிகாரியும் சிவில் உடையிலே கொஞ்சப்பேரும் ஏதோ சோதனையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாங்க. அவுங்களோட ஒரு பெரிய பொலிஸ் அதிகாரியும் இருந்தார். பயங்கரவாதிகளைப் புடிக்க செக்கப்பில்லே நடக்குதுன்னு ரோந்து பொலிஸ்காரர் வெலவெலத்துப் போனார். சடால்னு பாஞ்சு சலூட் அடிச்சுப்போட்டு வெளியிலே பாஞ்சார். தகவல் கொடுத்த ஆளைப்பார்த்து மொக்கன் மக்கன்னு சாடினார். அஞ்சு நிமிஷத்துலே 2 கோடியை அடிச்சுன்னு களவாணிப் பயலுவபறந்துட்டானுவ"

"அடப்பாவமே!"

"நம்ம இலக்கிய உலகத்திலேயும் இப்புடித்தான்வே போலிக நெறைஞ்சுட்டானுக. இதையெல்லாம் வெட்ட வெளிச்சமாக்கனுங்க. இதுக்காக சில உண்மைச் சமாச்சாரங்களை சொல்லி வைச்சா அது என்ன ஏதுன்னு ஆராயுரதை உட்டுப்புட்டு தகவல் குடுக்கிறவனையே மொக்கன் மக்கன்னு களவாணிப் பயலுவலுக்கு வக்காலத்து வாங்க கொஞ்சம் குட்டி பத்தி எழுத்தாளனுவே சலாம் பாபுவா மாறின்னு வாரானுவ"

"கிழிஞ்சுது போ!"

"அடுக்கு மொழி கொஞ்சம், அடைமொழி கொஞ்சம் கத்துக் கிட்டு அதுகளை எல்லாம் இந்தப் போலிகமீது கொட்டோகொட்டுன்னு கொட்டி அபிஷேகம் பண்ணு தாங்க. இது போதாதுன்னு என் தமிழுக்கு வென்டா நிகர்ன்னு மார்தட்டுராங்க..."

"அடேயங்கப்பா"

"சகிக்கல்ல. எழுத்து தெய்வம் எழுதுகோல் தெய்வமின்னு பாரதி பாடியிருக்கான்லே. இளைய தலைமுறை இதை நெஞ்சுலே பதிக்கனும். பிஞ்சுலே சலாம்போட்டு வெம்பிப்போகாமல் தீமைக்கும் பொய்மைக்கும் எதிராக வெந்தணலாக எழுதுகோலை பயன்படுத்தனும்"

"அசத்திட்டிய! அப்புடி போடுங்க ஆத்தா"

## கண்டறியாத எழுத்துத் தொழில்

"எழுத்தாளர் நீ.பி.அருளானந்தத்தின்ட 'அகதி' நூல் வெளியீட்டு விழா நடந்ததல்லோ! அதுலே ஒரு வானொலிக்காரர், ஒரு பத்திரிகையாளர், ஒரு டாக்டர் என்று மூன்று பேர் பேசி வெளுத்துக்கட்ட, ஒருத்தர் கவிதையாலே புகழாரம் சூடினவர்"

"அடிசக்கை"

"இதுல பகிடி என்னென்றால் நான் 'சூப்பி' வைத்திருந்த காலத்தில் 'நீபி' பேனா பிடித்தவர் என்று கவிஞர் பாடினார். ஹக் ஹக் ஹக்கா.."

"அம்மான்! ஏன் சிரிக்கிறியல்?"

"மோனே! சிரிக்காமல் இருக்கேலுமே. ராசா எதுகை மோனைக்காக அழகாக கவிதை பாடினவர் தாடி நரைச்ச தலை நரைச்ச கோலத்துலே நிக்க எங்கள்ன்ட எழுத்தாளர் கருகருவென்ற தலைமயிரோட ஜம்மென்று பொடியனாட்டம் அல்லோ இருந்தவர்"

"கிழிஞ்சுது போ"

"நீபியின்ட எழுத்துவன்மை பற்றி முருகானந்தம் பேசினவர். ஒரு கதையில் வரும் உடும்புப் பிடியல் பற்றிச் சொன்னவர். உடும்பைப் பிடிப்பதும் அதைச் சுருட்டி எடுப்பதும் அதைப் பொதியாக்குவதையும் ரொம்ப ரொம்ப ரசிச்சிப் பேசினவர்"

"என்ட தம்புரானே" மேனகா சாந்தி கேட்டிருந்தாரென்றால்..."

"ஏன்? என்னவாம்?"

"இது மிருகவதையல்லோ! அந்த அம்மா இதுக்கு எதிரான போராட்டகாரரல்லோ! அதைப்போய் ரசிக்கலாமோ"

"அடப்பாவி என்ன கதைக்கிறனீ. பேசினவர் டாக்டர் முருகானந்தமாக்கும். மனுசன் எத்தனை மிருகங்களை வெட்டிக்குதறி, பதம் பார்த்து பரிசோதனை செய்திருப்பார். ஒரு உடும்பின்ட வேதனை அவருக்கு ஒரு பொருட்டே"

"கிழிஞ்சுது போ!"

"கூட்டத்தின்ட முடிவிலே நீ.பி.அ. ஏற்புரை சொன்னவர். டாக்டரின்ட பேச்சை புகழோ புகழென்று புகழ்ந்தவர். எழுதியதன் பலன் என்ன என்று சலாப்பு பேசியவர் டாக்டர் முருகானந்தம் நல்ல எழுத்தாளர் என்றார். அவர் மட்டும் டாக்டராகாமல் விட்டிருந்தால் ஒரு நல்ல எழுத்தாளன் நாட்டிற்கு கிடைத்திருப்பார். எழுதி எழுதி குவித்திருப்பார் என்று புகழ்ந்தார்."

"என்ட தம்புரானே! டாக்டருக்கு வயிற்றிலே புளியை அல்லோ கரைத்திருக்கும்."

"ஏன்டா மோனே!"

"பின்ன என்னவாம் இந்த கண்டறியாத எழுத்துத்துறையில் ஈடுபடுகிறதிலே என்ன புண்ணியம் இந்த பிச்சல் பிடுங்கல் நிறைந்த காலத்துல டாக்டர் தொழில் என்றால் அரை வயிற்றுக்கேனும் கஞ்சி ஊத்துமே"

"அடப்பாவி"



# உயிரோடு சவ மேடையில் கர்ப்பிணிப்பெண்

**தமிழ் நாட்டில் சமீபத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய ஒரு சம்பவம் இது!**

"அந்த ஆவியால் எங்கள் ஊரே நிம்மதி இல்லாமல் இருக்கு. இராத்திரியில் எவரும் வெளியில் போக முடிவதில்லை. திடீர் என்று வந்து வழி மறிக்கும். சட்டென்று மாயமாக மறையும். உயிர்க்காவு வாங்காமல் அந்த ஆவி போகாது போலிருக்கு"

தமிழ் நாடு புதுக்கோட்டை மாவட்டம், அரிமழம் அருகில் உள்ள தாஞ்சூர் பகுதி மக்கள் இப்படி கூறுகிறார்கள்.

இந்த நூற்றாண்டில் இப்படி ஒரு தகவலா? என உள்ளுக்குள் நினைத்தபடியே தாஞ்சூர் நோக்கிப் பயணமானார்கள் பத்திரிகையாளர்கள்.

ஆவிக்கதையின் பின்னணியில் ஒரு பகீர் கொலை விவகாரம் ஒளிந்திருப்பது அப்பொழுது தெரியவந்தது.

"தாஞ்சூர் கிராமத்தை சேர்ந்த முத்தையா- அம்மணி தம்பதிகளுக்கு புவனேஸ்வரி, இராமகண்ணு, ஜெயந்தி என்று மூன்று பெண்பிள்ளைகள். வளர்ந்து ஆளான புவனேஸ்வரியை குணசேகரன் என்பவருக்கும், இராமகண்ணுவை வீரசேகர் என்பவருக்கும் கட்டி வைத்தனர். திருமணமாகாத கடைக்குட்டிப் பெண்ணான ஜெயந்தி தன் அக்காளின் வீட்டுக்கு அடிக்கடி போய் வருவதை வழக்கமாய்க் கொண்டிருந்தாள்.

இதில்தான் அவளுக்கு ஆரம்பித்திருந்தது மன்மதச் சனி.

ஜெயந்தி வாயும் வயிறுமா ஆக.... 'கல்யாணமாகாத பெண்ணுக்கு எப்படி இது ஆச்சு!.' என்று அவளின் சொந்தபந்தமெல்லாம் பதறிப் போனார்கள். யாரடி இதற்கு காரணம் என்று அவளின் அப்பா, அம்மா அடிச்சுக் கேட்க சின்னத்தான் வீரசேகர்தான் காரணம் என்ற உண்மையைப் போட்டு உடைச்சிட்டாள் ஜெயந்தி. இனி என்ன செய்வது? எல்லாரும் சேர்ந்து பேசி கர்ப்பத்துக்கு காரணமான வீரசேகருடனேயே ஜெயந்தியையும் சேர்த்து விட்டனர்.

ஜெயந்திக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. கொஞ்ச நாளில் அவர்களுக்குள் என்ன பிரச்சினையோ வீரசேகர் ஜெயந்தியை வெளியே விரட்டிவிட்டான். நடுத்தெருவில் நின்ற ஜெயந்திக்கு மூத்த அக்கா புவனேஸ்வரிதான் தஞ்சம் கொடுத்தாள். அங்கேயே காலம்தள்ளின ஜெயந்திக்கு மறுபடியும் சோதனை கர்ப்ப வடிவில் வந்தது. இந்த கர்ப்பத்துக்கு காரணம் யார்என்று அவளின் சொந்தக்காரர்கள் எல்லாம் மறுபடி அடிச்சுகேட்டும் ஜெயந்தி வாயைத் திறக்கவே இல்லை. அந்தக் கோபத்தில்தான் இப்படி ஒரு பயங்கரம் அரங்கேறியது.

குண சேகரன், வீரசேகர், புவனேஸ்வரி எல்லாருமாகச் சேர்ந்து... 'உன்னால குடும்பத்துக்கே அசிங்கம்' என்று சொல்லி ஜெயந்தியின் வாயில் பலவந்தமாக விஷத்தை ஊற்றினார்கள். பின்பு ஊர்க்காரார்கள் எல்லோரும் கூடிப்பேசி அந்த படுபாதக முடிவை எடுத்தார்கள்.

ஜெயந்தியை இராத்திரி 1மணிக்கு டிராக்டரில் ஏற்றி அவளை எரிக்க விறகுக் கட்டைகளையும் ஏற்றினார்கள். அந்த டிராக்டர் நேராக சுடுகாட்டுக்குப் போனது.

அங்கு.. அந்த 7 மாத கர்ப்பிணிப் பெண் ஜெயந்தியை விறகுக்கடைகளுக்கு மேலே படுக்கவைத்து தீயை மூட்டினர். அரை மயக்கத்தில் இருந்த ஜெயந்தி, நெருப்புச் சூடு பட்டதும், ஐயோ என்னைக் கொல்லாதீங்க,..... நான் எங்கேயாவது போய் பிழைச்சுக்கொள்கின்றேன். என்று கதறியபடி எழப் பார்க்க.. ஓர் பெரிய வாகை மரத்துண்டை அவள் மேல் போட்டு, அவள் எழுந்திருக்க முடியாதபடி ஒரு பெரிய கம்பால் அழுத்திப் பிடித்தனர். என்ன ஒரு கொடூரம் ... ஜெயந்தியின் கர்ப்ப வயிறு வெந்து வெடித்தது. இந்தக் கொடூரத்தை நேரில் பார்த்தவர்கள் தான் இப்போது மனரீதியாக பயந்து போய் இருட்டில் எதைப் பார்த்தாலும் அது ஜெயந்தியின் ஆவி என்று அலறிக் கொண்டு இருக்கிறாங்கள். சம்பவம் நடந்து ஒரு மாதம் ஆகியும் எங்களால் அதை மறக்கமுடியவில்லை" இப்படி ஊர்க்காரர்கள் தெரிவித்தனர்.

"பலபேர் அப்படி ஒரு முடிவை எடுக்கும்போது என் ஒருவனால் அதை தடுக்க முடியவில்லை. ஜெயந்தியை அவளின் குடும்பம் அடித்து உதைத்து திட்டினதும் ஜெயந்திதான் விஷம் குடிச்சா. பிறகு அவளே என்னை எப்படியாவது காப்பாத்துங்க என்று அழுதா. ஆனால் அவளை உயிரோட டிராக்டரில் ஏற்றி விறகு கட்டைகளுடன் போய் எரிச்சிட்டோம். நினைத்தால் வருத்தமாத்தான் இருக்கு . அதே சமயம் ஜெயந்தியால் இந்த ஊருக்கு மேலும் மேலும் அவமானம் வரக்கூடாது என்று தான் அப்போது எல்லோரும் நினைத்தோம்" என்றார் ஊர் பெரியார் ஒருவர்.

ஜெயந்தியை எரித்ததாக சொல்லபடும் குணசேகரன், வீரசேகர் மற்றும் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் சுப்பையா, ரெங்கர், முருகன், மணி போன்றவர்களிடம் இது குறித்துக் கேட்ட போது, "அந்த ஜெயந்தி தீராத வயிற்று வழியால் தற்கொலை செய்துகொண்டா. எங்கள் வழக்கப்படி எரிச்சிட்டோம். ஒரு மாசத்துக்கு முன்பு நடந்த இந்த விஷயத்தை.. கூட்டுறவு சங்கத் தேர்தலில் எங்களுக்கு எதிராக நின்று தோல்வி கண்டவர்கள் திசை மாற்றி கிளப்பிவிடுறாங்க" என்றார்கள் ஒரே குரலில்.

தற்கொலைதான் செய்துகொண்டார் ஜெயந்தி என்றால் இதுகுறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்காதது ஏன் என்ற பத்திரிக்கையாளர்களின் கேள்விக்கு இவர்களிடமிருந்து பதில் இல்லை .

## சொற்சிலம்பம் போட்டி இல. 275

சொற்சிலம்பம் 275 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஒகஸ்ட் 19 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒகஸ்ட் 19 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.273 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 273

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 தி | ர் | 3 கா | 4 ம | ம் | ■ | 5 ப |
| 6 த | ரு | ■ | 7 க | ரை | ■ | 8 பொ | தி |
| 9 க | டி | 10 த | ம் | ■ | 11 க | ன் | னை |
| ளி | ■ | ர் | ■ | 12 நா | ரி | ■ | ந் |
| ■ | 13 ம | க் | 14 க | ள் | ■ | 15 பு | து |
| 16 ந | ர | க | ல் | ■ | 17 ப | ல | ■ |
| 18 ம | த | ம் | ■ | 19 சி | ல | ம் | 20 பு |
| 21 து | ன் | ■ | 22 வ | ல | ம் | பு | ரி |

## சொற்சிலம்பம் போட்டி இல. 275

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | | 13 | | ■ |
| ■ | 14 | | | ■ | | ■ | 15 |
| 16 | | ■ | 17 | | | 18 | |
| 19 | | 20 | | ■ | 21 | | ■ |
| 22 | | | ■ | 23 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.275

**இடமிருந்து வலம்**

1. அன்னம்/ தேவரின் உணவு/ சாவைத் தவிர்க்கும் ஆகாரமாம் இது.
4. ஒருவரின் வேலைத் தரம்/ அலுவலக நிலை.
7. தானியப் பயிர் முற்ற வருவது.
8. ஒரு திருமணச் சடங்கு. அரைத்த சந்தனத்தைப் பூசுவார்கள்.
9. இனம்/ குலம்/ கூட்டம்/ ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்குவது.
11. வேகம்.
12. கேட்டதெல்லாம் கொடுக்கும் மரம்(தரு).
14. இளைய சகோதரன்.
16. இணங்க.
17. மூத்த பிள்ளை.
19. (பாலியல்) உணர்வைத் தூண்டும் செயற்பாடு.
21. கூட்டற்குறி/ சேர்ந்த.
22. இலவசமாக/ வெறுமனே
23. வீடு.

**மேலிருந்து கீழ்**

1. ஆசிரியப்பா வகை.
2. முற்று/பராயமடை.
3. வாதம்.
4. சில என்பதிலும் அதிகம்.
5. பொன்.
6. பகுபத உறுப்பில் ஒன்று.
8. இப்படிநட; நம்பி நடவாதே!
10. அர்த்தப்படுத்தல்.
13. உலோகங்களைக் கையாளும் பட்டறைக்கு இந்தப் பெயர்.
14. மெல்லிய உலோகப் படலம்.
15. கேள்வி பிறந்தது இச்சொல்லினால் தான்.
16. ஆசனம்/தலைமை ஆசனம்.
18. அனைத்து/ எல்லா.
20. மேளம் போன்ற மேடைக் கச்சேரிகளுக்கு இந்தப் பெயர் உண்டு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 273

1. அ.பத்மலோசனா,
   51ஏ, மேபீல்ட் லேன்,
   கொழும்பு- 13.
2. எம்.எச்.எம்.இஸ்ஸதீன்,
   இல.18/N,நவகம்புர வீடமைப்புதிட்டம்,
   ஸ்டேஸ் ரோட், கொழும்பு- 14.
3. வே.மார்க்கண்டு,
   பார்த்தீபன் ஓவியக் கலையகம்,
   கனகபுரம் தெரு, கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

1. சித்தி ஸாலிஹா, கல்-எலிய.
2. கு.தரன், கொழும்பு-13.
3. எம்.எச்.எம்.ஜவுபர், வெலிகாமம்.
4. திருமதி.எஸ்.ஐ.எந்தனி, கலஹா.
5. அ.ஜாமிலா, கல்லாறு.
6. எம்.எஸ்.எம்.பாரூக், மதுரங்குளிய.
7. கோ.மிதுஷா, கல்முனை.
8. திருமதி.எஸ்.என்.மணி, நுவரெலியா.
9. எம்.அஹ்மது ஸஊது, வெலிகாமம்.
10. எம்.தீபன், வவுனியா.
11. திருமதி.ரஞ்சனி சிவஞானம், மட்டக்களப்பு.
12. செல்வி.அ.அங்கயக்கண்ணி, திருகோணமலை.
13. நா.லுபோஜிதா, கல்முனை.
14. எம்.பொன்மலர், பத்தரமுல்ல.
15. எஸ்.கிருஷ்ணவேணி, வவுனியா.

# இ.தொ.காவினர்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி தமிழ் எம்.பி. ஒருவரிடம் ஜனாதிபதி சவால்விட்டதைத் தொடர்ந்து அடுத்த நாள் என்ன நடந்தது?

இ.தொ.கா. நிதிச் செயலாளரும் ஏனையோரும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றைக்கூட்டி "இ.தொ.கா. அரசில்தான் இருக்கும். பின்வரிசை ஆசனத்தில் அமர்ந்தபடி ஆதரவு தருவோம்!" - என்று அறிவித்தனர்.

ஜனாதிபதியின் சவாலையும் திடீரெனப் பொங்கிய இ.தொ.காவினர் அந்த வேகத்திலேயே அடங்கியமையையும் கூட்டிக்கழித்துப் பார்ப்பவர்களுக்கு அரசுத்தலைமையின் கைகளில் சிக்குண்டிருக்கும் இ.தொ.காவின் குடுமி என்னவென்பதை ஊகிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமல்ல.

இ.தொ.கா. தொடர்ந்தும் அரசுப்பக்கம் நீடிப்பதற்கான அடுத்த காரணமும் கவனிக்கத்தக்கது.

லாபம் இல்லாவிட்டாலும் முதலுக்காவது மோசம் வராமல் இருக்கட்டும் என்று கருதியே அந்த நடவடிக்கையை - தீர்மானத்தை - இ.தொ.கா. தலைமை எடுத்திருக்கின்றது.

இப்போது எஞ்சியிருக்கும் ஆறு எம்.பிக்களோடு இ.தொ.கா. பிய்த்துக்கொண்டு போய் எதிரணியில் அமர்ந்தால் தனது கட்சியையே அரசுத்தலைமை உடைத்துவிடும் என்பது ஆறுமுகனாருக்கு நன்கு தெரியும். வடிவேல் சுரேஷை அரவணைத்தமை போல எம்.எஸ்.செல்லச்சாமி, ஜெகதீஸ்வரன், வி.புத்திரசிகாமணி எல்லோரையும் அமைச்சர்களாக்கி, இ.தொ.கா. தலைமைக்கு எதிராக அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, கொம்பு சீவிவிடும் வேலையை மஹிந்த தலைமை செய்துவிடும் என்பதும் ஆறுமுகன் தலைமைக்கு நன்குதெரியும்.

"எங்கள் கட்சியை மேலும் பிளந்து, எங்களைக் குட்டிச்சுவராக்காமல் இருந்தால் நாங்கள் ஆறுபேரும் அரசுத்தரப்பில் - பின்வரிசையில் - அமர்ந்திருந்து அரசுக்கு ஆதரவு தருவோம். மாறாக, யாரையாவது தனித்துப் பிரித்து அமைச்சர் பதவி கொடுக்க முற்பட்டீர்களானால், குறைந்த பட்சம் நாங்கள் மூன்றுபேராவது எதிரணிக்குப்போய் விடுவோம்" - என்ற பேரத்தை அரசுத் தலைமைக்கு உணர்த்தி அதனடிப்படையிலேயே - அமைச்சர் பதவியைத் துறந்தபின்னரும் - அரசுப்பக்கத்தில் அடங்கிப் போய் இருக்கின்றது இ.தொ.கா. தலைமை.

இதை 'லாபம் வேண்டாம்; முதலாவது மிஞ்சட்டும்' என்ற தந்திரமாகக் கருதலாமா...?

# கோதுமைமா, மண்ணெண்ணை விலை...

(6ஆம் பக்கத் தொடச்சி)

ஓய்வுபெற்றோருக்கும் வழங்கப்படும். வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவை அரசு கடந்தவாரம் அதிகரித்துள்ளது. அரச ஊழியர்கள் குறித்தும் சமுர்த்திக்கொடுப்பனவு பெறும் குடும்பங்கள் குறித்தும் கவலை கொள்ளும் இந்த அரசு பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ள தோட்டத்தொழிலாளர்கள் குறித்துக் கவலை கொள்ளாதது ஏன்?

இலங்கையிலேயே மிகச் சொற்ப கூலிக்கு உழைப்பவர்கள் தோட்டத்தொழிலாளர்கள் மாத்திரமே. நகரில் அதுவும் நடைபாதை வியாபாரிகளிடம் உதவியாளர்களாகவுள்ள இளைஞர்களுக்கு நாளாந்தம் மூன்றுவேளையும் உணவளித்து 350ரூபாவுக்கு குறையாமல் வேதனம் வழங்கப்படுகிறது. ஒரு கொத்தனாரிடம் உதவியாளராக வேலைசெய்யும் ஒருவருக்கு 400ரூபா வரை நாளாந்தம் வழங்கப்படுகின்றது. இருந்தும் தோட்டத்தொழிலாளர்கள் நாளாந்தம் 200 ரூபாவுக்கு குறைந்த வேதனத்தையே பெறுகின்றனர். ஆனால், இதுகுறித்து எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

தோட்டத்தொழிலாளருக்கு மானியவிலையில் கோதுமை, மண்ணெண்ணெய் வழங்கும்படி அரசுக்கு மலையக அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்கவேண்டும். மலையக சமூகம் உயர்ச்சி பெறுவதற்கு கல்வி முக்கியம். மண்ணெண்ணெய், கோதுமை மா போன்றவற்றின் விலை உயர்வுஅவர்களினது கல்வியை பாதித்துவிடக்கூடாது. அரசுடன் ஒட்டி உறவாடிக்கொண்டிருக்கும் மலையக அரசியல்வாதிகள் இதுகுறித்து கவனம் செலுத்தவேண்டும்.

# பழிவாங்கும் உணர்வு...

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குற்றங்களை ஒப்புக் கொண்டான். பொம்ரோஸ் மனோரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தான் என்பது நன்றாகத் தெரிந்தது.

அவன் கூறிய தகவல்கள் திடுக்கிட வைத்தன. தன் தந்தையைப் பற்றிய கதைகளை அவன் கூறினான். ஆஜானுபாகுவான தனது தந்தை ஒரு மிருகம் என்றும், அவன் மனிதனே அல்லவென்றும் சொன்னான். தன் தாயை கொடூரமாக சித்திரவதை செய்வான் என்றும், தங்கள் முன்னே அம்மாவை பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவானென்றும், தனது சகோதரிகளையும் அவ்வாறே கேவலமாக நடத்தினான் என்றும் இந்த கொடூரங்களை சகிக்க முடியாமல் அவனை பழிவாங்க துடித்தேன் என்றும் சொன்னான். மனம் வேறு திசைக்கு சென்றுவிட்டது; என் தந்தையை அடித்து நொறுக்குவதாக நினைத்துக் கொண்டே இந்த கொலைகளை செய்தேன் என்றும் அவன் கதறினான்.

அவன் ஒரு மனநோயாளி என்று கண்டறியப்பட்டது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மருத்துவ சிகிச்சையும் வழங்கப்பட்டது.

எனினும், அவன் நீண்ட காலம் சிறை வாழ்க்கையில் காலம் கழிக்கவில்லை.

சிறைச்சாலை சமையலறையில் ஒரு காஸ் சிலிண்டர் வெடித்து, அதில் கருகி கரிக்கட்டியாகி இறந்து போனான்.

அப்போது அச்சிறைச்சாலையின் அதிகாரியாக ஸ்டூவர்ட் என்பவர் பணியாற்றி வந்தார். இவர் ஒரு மனவியல் நிபுணரும் கூட.

அவர் தனது டைரியில் பொம்ரோஸின் மரணம் குறித்தும், சிறுவர்களின் மன இயல்பு குறித்தும் எழுதியிருக்கின்றார்.

'மனித மூளை மூன்று பகுதிகளைக் கொண்டது. பலகோடி வருடங்களாக மனித வாழ்வின் பரிணாமத்துடன் மூளையும் பரிணாமம் அடைந்து வருகிறது. சிறுபிராயம் வித்தியாசமானது. பாதிக்கப்படுகின்ற போது அழுவதும், தாக்கப்படுகின்றபோது தாக்குவதும் சிறுவர்களின் இயல்பு. மூளையின் பகுதி மூன்று இதற்கு ஒத்துழைப்புச் செய்கிறது. கொடூரம் உறைந்து விட்டிருக்கும் அப்பகுதி அவனை கொலைகாரனாகவும் மாற்றி விடுகின்றது. பொம்ரோஸ் அப்படித்தான் மாறிப்போய் மாபெரும் கொலைகாரனாக உருவாகி பரிதாபத்துக்குரிய ஜீவனாகி விட்டான்'.

# கொழும்புக்குச் செல்வதற்கு அலைச்சல்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்புகள் வழங்குவதில் தடையாக இருக்கவில்லை என்பதையே என்று மக்கள் கூறுகின்றார்கள்.

தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் அத்தியாவசியத் தேவைக்கு உரியவர்களே. அதனை இரண்டாம் நபர் அவருக்கு தொலைபேசி சேவை, தேவை இல்லையெனத் தீர்மானிக்க முனைவது அடிப்படை மனித உரிமைமீறல் ஆகும்.

அரச திணைக்களங்கள் பலவற்றுக்கு ஏற்கனவே தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. உயர் அதிகாரிகளின் அலுவலகம், வீடு என்பவற்றுக்கும் தொலைபேசி இணைப்புகள் பொருத்தப்பட்டுள்ளன. அரச திணைக்களங்களில் உள்ள ஒவ்வோர் உயர் அதிகாரிக்கும் மேசைக்கு ஒன்று இரண்டு, வீட்டுக்கு ஒன்று இரண்டு வழங்குவதைத் தவிர்த்து சாதாரண மக்களுக்கும் தொலைபேசி கிடைப்பதற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டியது முக்கியமானது.

தற்போதும்கூட கடந்த காலத்தில் தொலை பேசி இணைப்புகளைப் பெற்று பல ஆயிரங்கள் முதல் லட்சங்கள் வரை விற்பனை செய்தவர்களுக்கும் ஏற்கனவே தொலைபேசிஇணைப்புகளைக் கொண்டுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இவ்வாறு யாழ். குடாநாட்டு மக்கள் எந்தவொரு விடயத்திற்கும் அரச உயர் அதிகாரிகளின் செயற்பாடுகளினால் அலைந்து திரியும் நிலையே அதிகம் காணப்படுகின்றது. இத்தகைய துர்ப்பாக்கிய நிலையில் இருந்து இந்த மக்களை மீட்டெடுக்க வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. அதனால்தான் இந்தக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.

இந்தவேளையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பிரஜைகள் பட்டயத்தை சுட்டிக் காட்டுவது சாலப் பொருத்தமானதாகும். ★

# சுயநிர்ணய உரிமையும் ...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்லக்கூடாது என்பதுதான் எமது கேள்வி!

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை, ஐக்கிய நாடுகள் சபையின் சுயநிர்ணயக் கோட்பாட்டை, உலக நீதி மன்றத்தின் சுயநிர்ணய உரிமைக்கான வரைவிலக்கணத்தை,Inter- American commission on Human rights of the Organisation of the American States இன் சுய நிர்ணய உரிமை குறித்த கருத்து நிலையை இன்று சிறிலங்கா அரசு மறுத்து, எதிர்த்து நிற்கின்றது.

இங்கே முரண்நிலை என்னவென்றால்,'சுயநிர்ணய உரிமைக்குரிய தமிழ் மக்கள் நீதியான தீர்வுக்கு உரித்தானவர்கள்' என்பதை மேற்குலகம் ஏற்றுக் கொண்டாலும் சிங்கள அரசுக்கு ஆதரவான 'செயற்பாட்டு' நிலையைத்தான் அது (மேற்குலகம்) கடைப்பிடித்து வருகின்றது.

இதற்கு மேற்குலகம் கூறுகின்ற காரணம், சிறிலங்கா அரசின் பௌத்த- சிங்களப் பேரினவாதக் கருத்தை ஆதரிப்பதாகவே அமைகின்றது. இலங்கையிலே நாட்டைப்பிளவு படுத்தக்கூடாது, எல்லோரும் சமமாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா 'சாத்தான் வேதம்' ஓதுவதை மேற்குலகம் அனுசரித்துப்பேசி வருகின்றது.

ஆனால், இலங்கைத்தீவில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சமமாகவும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் இருப்பதற்கான முயற்சிகளை சிறிலங்கா அரசு மேற்கொண்டதா? அல்லது மேற்கொண்டு வர முயற்சிக்கின்றதா?

இல்லை என்பதே, இதற்குரிய உண்மையான பதிலாகும்!

சரியாகச் சொல்லப்போனால் ஸ்ரீலங்கா அரசு நாட்டில் சமாதானத்தைக் குலைத்து தமிழர்களை மூன்றாம் தரப் பிரஜைகளாக்கி அவர்களை அவலவாழ்க்கையில் தள்ளி அழித்து வருகின்றது. இன்று ஸ்ரீலங்கா அரசு இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்து இலட்சக்கணக்கான தமிழ்மக்களை அகதிகளாக்கி அவர்களைச் சொந்த இடங்களில் இருந்து கலைத்து வருகின்றது. தமிழ்மக்களின் பாரம்பரிய மண்ணில் புத்தகோயில்களையும் புத்தசின்னங்களையும் நிர்மாணிக்கின்றது. தமிழ்ப்பெயருள்ள வீதிகளுக்கு சிங்களப் பெயர்களைச் சூட்டிவருகின்றது. உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறிக்கொண்டு தமிழர்களை இடம்பெயரச் செய்கின்றது. இவ்வாறு நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகளை சிங்கள அரசு செய்துவருகின்றது.

இதுமட்டுமல்லாது, ஸ்ரீலங்கா அரசு தன்னுடைய சட்டத்துறையின் ஊடாகவும் நீதித்துறையின் ஊடாகவும் தமிழ்மக்களுக்குப் பெரிய அநீதிகளையும் இழைத்துவருகின்றது. அன்று யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தபோதும் இன்று குடும்பிமலையை ஆக்கிரமித்தபோதும் சிங்கள அரசுகள் நடத்திய வெற்றிவிழாக்கள் தமிழர்களை விரோதிகள் என்றும் வேறு தேசத்தவர்கள் என்றும் சிங்கள அரசுகள் கருதுவதைத்தான் நிரூபித்துள்ளன.

ஸ்ரீலங்கா அரசுகளின் இந்தச் செய்கைகள் யாவும் தமிழர்கள் ஒற்றுமையாக இணைந்து வாழும்பொருட்டுச் செய்யப்பட்டவையா? ஒற்றுமையாகச் சமமாக இணைந்து வாழவேண்டும் என்றால் இப்படியெல்லாம் சிறிலங்கா அரசுகள் செய்யவேண்டியதில்லை. இன்று தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை வலுப்படுத்துவது சிங்களத்தின் இந்தச் செய்கைதான்.

ஸ்ரீலங்காவின் சட்டத்துறையும் நீதித்துறையும் தமிழர்களை ஒடுக்குவதற்காகவே செயல்படுகின்றன என்று முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இங்கே சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விழைகின்றோம். ஸ்ரீலங்கா அரசினால் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட மூதூர் கிழக்குப் பகுதியில் மீண்டும் மீளச்சென்று குடியேறுவதற்குப் பொதுமக்களால் தாக்கல்செய்யப்பட்ட மனுக்களை ஸ்ரீலங்காவின் உயர்நீதிமன்றம் கடந்தவாரம் நிராகரித்துவிட்டது. நிராகரித்ததுமட்டுமல்லாது இனிமேல் இது சம்பந்தமான மனுக்களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் ஸ்ரீலங்காவின் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இவ்வாறு இந்த மனுவை நிராகரித்ததற்கு 'அழகான' காரணம் ஒன்றையும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. மீளக்குடியேற்றம்என்பது ஓர் உணர்வுபூர்வமான பிரச்சினை. உணர்வுபூர்வமான பிரச்சினைகளை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரக்கூடாது. இப்படியான உணர்வுபூர்வமான பிரச்சினைகளை இன்று எடுத்தால், எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான பிரச்சினைகள் கிளம்பும்.ஆகையால், இவைகளை நீதிமன்றம் எடுக்கக்கூடாது என்று ஸ்ரீலங்காவின் உயர்நீதிமன்றம் தமிழர்களுக்கு நீதிவழங்கியிருக்கின்றது.

இங்கே இன்னுமொரு முரண் நிலையையும் நாம் குறிப்பிட விரும்புகின்றோம். பொதுக்கட்டமைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றம் முன்னர் தீர்ப்பளித்தது. இந்த வழக்கு உயர்நீதிமன்றத்துக்கு வந்தபோது இது ஓர் உணர்வுபூர்வமான பிரச்சினை என்று நீதிமன்றம் கூறவில்லை. மாறாக வழக்கை எடுத்துக்கொண்டு தமிழர்களுக்கு எதிராகத் தீர்ப்பளித்தது. அதேபோல் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள வடக்குகிழக்கு இணைப்புப் பற்றிய விடயம் நீதிமன்றத்துக்கு வந்தபோது உயர்நீதிமன்றம் இது ஓர் உணர்வுபூர்வமான பிரச்சினை என்றுகூறி வழக்கைத் தள்ளுபடி செய்யவில்லை - மாறாக ஒப்பந்தத்தையே தள்ளபடி செய்தது. இவ்வாறு ஸ்ரீலங்காவின் சகல செயற்பாடுகளும் தமிழர்களுக்கு எதிராகவே இருக்கின்றன.

ஸ்ரீ லங்காவில் சட்டத்துறையும் நீதித்துறையும் காவல்துறையும் அரசின் மற்றைய துறைகளும் ஜனநாயக விரோதப் போக்கினைக் கடைப்பிடித்துக்கொண்டு சீர்கெட்டுக்கிடக்கின்றன. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் காவல், சட்டம் ஒழுங்குநீதி போன்றவை மிகத் திறமையாக நிர்வகிக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் ஓர் அரசுக்குரிய கட்டுமானங்களை அவர்கள் ஏற்படுத்தி நேர்த்தியாக நிர்வகித்துவருகின்றார்கள்.

1987 ஆம் ஆண்டின் கடைசிப்பகுதியில் இருந்து ஏறத்தாழ இருபது ஆண்டுகளாகத் தமிழர்களின் பல பகுதிகளில் அவர்களுக்கு என்று ஓர் ஆட்சி அமைப்பு இயங்கிவருகின்றது. ஸ்ரீலங்கா அரசின் குடியரசுக்கு மாறுபட்டு, அதற்கு அப்பாற்பட்டு, தமிழர்களின் நிர்வாகம் நடைபெறுகின்றது என்பதுதான் இன்றைய களநிலை யதார்த்தமாகும்.

பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை நிறுவுவதென்று தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டுள்ள இந்த வேளையில், இந்த முடிவைச் சட்டபூர்வமாகவும், நீதி பூர்வமாகவும் கோட்பாடு ரீதியாகவும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு ஏற்றுக் கொண்டிருப்பதை நாம் சுட்டிக்காட்டித் தாக்கித்திருந்தோம். இதனைச் சர்வதேசம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், ஒருங்கிணைந்த இலங்கைக்குள் சம உரிமையுடனான சமாதானத் தீர்வில் அக்கறை செலுத்துவதையும் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் ஒருங்கிணைந்த இலங்கைக்குள் நீதியான, நியாயமான தீர்வு ஒன்றினைப் பெறுவதற்கு எதிராக சிறிலங்கா அரசு செயற்பட்டு வருவதையும், அது தொடர்ந்தும் தமிழினத்தை அழிப்பதிலேயே குறியாக இருந்து வருகின்றது என்பதையும் விளக்கியிருந்தோம்.

ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தீர்வு என்பது நடைமுறைச் சாத்தியம் இல்லை. தவிரவும் ஒருங்கிணைந்த இலங்கைக்குள் எந்த அரைக்குறைத்தீர்வு காணப்பட்டாலும், அது தமிழர்களின் தேசிய இன அடையாளத்தை எதிர்காலத்தில் அழிப்பதிலேயே போய் முடியும். ஒருங்கிணைந்த இலங்கைக்குள் வைக்கப்படுகின்ற சமாதானத்தீர்வுகள், தமிழர்களின் அடையாளத்தையும், இருப்பையும் அழிக்க வே உதவும். ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகள் ஊடாக,எமக்கு வரலாறு சொல்கின்ற செய்தியும் இதுதான்...

ஆகவே மேற்சொன்ன வரலாற்று அடிப்படையிலும், தமிழர்களுக்கு உரித்தான சுயநிர்ணயக் கோட்பாட்டு அடிப்படையிலும்,போரினூடாகவோ அல்லது போராட்டத்தினூடாகவோ, சுதந்திரத் தமிழீழ தனியரசு நிச்சயமாக நிறுவப்படும்....!

(நன்றி: தமிழ்நாதம்)




ஜெஸ்ரின் காண்டீபன்,
தெகிவளை.

கேள்வி:- பகுத்தறிவுக்கு எதிரான மூடநம்பிக்கைகளுடன் கூடிய ஜோதிடம் சம்பந்தமான விளம்பரங்களை வெளியிடுவது சரிதானா பித்தா?

பதில்:- பகுத்தறிவு, பொதுஅறிவு..என்று எல்லாவற்றிற்கும் கெடுதல் செய்யக்கூடிய பல அரசியல்வாதிகள் பேசுவதை வெளியிடுகிறபோது ஜோதிட விளம்பரம் வெளியிடுவதில் என்ன தவறு.

நிலாப்தீன்,
சாய்ந்தமருது.



கேள்வி:- நான் காதலித்தது ஒரு பெண்ணை. மணம் முடித்தது வேறொரு பெண்ணை. ஆனால், எனது வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறதே?

பதில்:- உங்களுடைய கதையைக் கேட்கும்போது என் கவிதை ஒன்று ஞாபகத்தில்

"அவள் மடிதனில் உறங்க நினைத்தேன்
மணத்தரைதனில் படுத்துக்கொண்டேன்
காதல் மொழிதனை பகர நினைத்தேன்
காதுகூச மொழி தந்தாள்
அவள் தரிசனம் காணத்துடித்தேன்
கிடைத்தது அவள் தோழி தரிசனம்"
(உங்களுக்கும் இதே மாதிரியா)

நிஷாந்தினி சண்முகம்,
லிங்கநகர்.

கேள்வி:- பரத்தின் புதிய படங்கள் ஏதும் வருகிறதா பித்தா?



பதில்:-காதல், வெயில் போன்ற ஹிட் படங்களைக் கொடுத்த பரத்துக்கு கூடல்நகர் கூடாநகர் ஆகிவிட்டது. அடுத்து 'நேபாளி' படத்தில் விதவிதமான கெட்டப்புகளில் தோன்றும் பரத் நேபாளி படம் முக்கியமான படமாக இருக்கும் என்கிறார். அதனால் டைட்டிலில் தன் பெயருக்கு முன்னால் 'சின்னத்தளபதி' என்று போட்டுள்ளாராம்.

எச்.எம்.றிஸ்வான்,
அனுராதபுரம்.



கேள்வி:- 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்று பாடிய பாரதி தாசன் இப்போ இருந்திருந்தால் எம்மவர் பேசும் தமிழை நினைத்து எவ்வாறு பாடி யிருப்பார் பித்தா?

பதில்:- 'தமிழுக்கு இங்கிலீசு என்று பேர்' இன்ப தமிழ் எங்கள் இங்கிலீசுக்கு நேர்' என்று பாடியிருப்பார். (நல்லவேளை சிக்கலில் மாட்டிக்கொள்ளாமல் வேளைக்கே தப்பிச்சென்றுவிட்டார்)

யூ.எல்.எம்.நவ்ஸின்,
பொத்துவில்.

புத்தளம்.கேள்வி:- பித்தா! சிவாஜி படம் பார்த்துவிட்டீர்களா?

பதில்:- சிவாஜி என்ன எம்.ஜி.ஆர்ரையே பார்த்துவிட்டேன்.

றிஷானா,
புத்தளம்.

கேள்வி:- 'பித்தா! உங்கள் கனவில் அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜ் போன்றோர் வந்து உரையாடுவதுண்டா?

பதில்:- வருவதில்லை. அவர்களுக்கு ஒரு கவலை இருக்கக்கூடும். என் கனவில் வரநினைத்து கொழும்பு வந்தால் ஸ்ரீலங்கா அரசு சிறையில் அடைத்து விடும் என்று பயப்படுகின்றார்களோ என்னவோ!

பிரியன்,
தெமட்டகொட.

கேள்வி:- பித்துக்குட்டி! என் கனவிலே திரிஷா, அசின்'என்று ஒரே தமிழ் நடிகை களாக வருகின்றார்கள். என்ன செய்வது நீங்கள் தான் ஒருவழிகாட்டணும்?

பதில்:- வெறும் தமிழ்ப்படங்களை மட்டும் பார்க்காதிங்கோ. ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்திப் படங்களும் பாருங்கோ. அப்பதான் வேறு நடிகைகளும் வருவாங்கோ.

என்.சண்முகலிங்கம்,
கைதடி.

கேள்வி:- அழகான நடிகர் யார் என்று சொல்லமுடியுமா?

பதில்: அழகான நடிகர் அஜித்குமார் தான் என்று திரிஷாவே சொல்லியிருக்கிறார்.



"அவருடன் ஜோடி சேர்ந்து 'ஜி' படத்தில் நடித்ததை மறக்க முடியாது. மீண்டும் 'கிரீடம்' படத்தில் சேர்ந்து நடிக்க வாய்ப்புக் கிடைத்தது" என்கிறார்



சு.சுதர்ஷனா,
கரவெட்டி.

கேள்வி:- நாடு சுடுகாடாக மாறிக் கொண்டிருக்கும் இந்த வேளையிலும் சினிமா நடிகர்களுக்கு காவடி எடுக்கின்ற இளந்தலைமுறையினர் திருந்துவார்களா?

பதில்:- எங்களுடைய நாடு ஏதோ கொஞ்சம் பரவாயில்லை. தென் இந்தியாவில் நடிகர், நடிகைகளுக்காக தீக்குளிக்கின்ற நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. ஏன் 'சிவாஜி' பட வெளியீட்டில் சிவாஜி போஸ்ரருக்கு பால் அபிஷேகம் கூட இடம்பெற்றுள்ளது. (நீங்கள் ஒருத்தராவது நாட்டின்மீது அக்கறை கொண்டிருப்பதை நினைக்கும் போது எனக்கு புல்லரிக்கிறது சுதர்ஷனா)

சி.கனகராஜ்,
டிக்கோயா.

கேள்வி:- ராஷ்டிரபதி பவனை மக்களின் பவனாக மாற்றி அப்துல் கலாம் தனிமுத்திரை பதித்து விடை பெற்றுள்ளாரே?



பதில்:- பொதுவாழ்வில் தூய்மை என்ற உயர்ந்த லட்சியம் கொண்டிருந்த அப்துல்கலாம் தனது நேர்மையான நடவடிக்கை களின் மூலம் நாட்டின் முதல் குடிமகனுக்குரிய கண்ணியத்தை உயர்த்தி தான் இந்தியாவின் மிகச் சிறந்த ஜனாதிபதி என்பதை நிரூபித்துள்ளார்.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | காலைநேரச் செய்திகள் | காலை நேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | காலைநேரச் செய்திகள் | 6.00 | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் | நிகழ்ச்சிகள் ஆரம்பம், பத்திரிகைச் செய்திகள் |
| 6.30 | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | பத்திரிகைச் செய்திகள் | 6.30 | சங்கீத மேடை | சங்கீத மேடை |
| 7.00 | அமுதமொழிகள் | அமுதமொழிகள் | அமுதமொழிகள் | அமுதமொழிகள் | அமுதமொழிகள் | 7.00 | ராசிபலன் | கார்ட்டுன் |
| 7.30 | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் சிறிலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.30 | சிறுவர் உலகம் | ஆங்கிலம் படிக்கலாம் வாங்க |
| 8.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொண்டாட்டம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | நம்மநேரம் | 8.00 | | அரட்டை அரங்கம் |
| 9.00 | உங்கள் சொய்ஸ் | புத்தம் புது பாடல் | நீங்கள் கேட்டபாடல் | சுப்பர் 10 | திரைவிமர்சனம் | 8.30 | | சின்னச் சின்ன ஆசைகள் |
| 9.30 | நேற்று இன்று நாளை | நினைவுகள் | நட்சத்திரம் | இயக்குநர் பார்வை | நடித்ததில் பிடித்தது | 9.00 | திரை விமர்சனம் | |
| 10.00 | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | நிம்மதி | 9.30 | ராஜ ராஜேஸ்வரி | அல்லி ராஜ்யம் |
| 10.30 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | 10.00 | அது மட்டும் ரகசியம் | வேப்பிலைக் காரி |
| 11.00 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | இளமை புதுமை | சண்டே சமையல் |
| 11.30 | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | கஸ்தூரி | 11.00 | பாட்டுக்குப் பாட்டு | சுப்பர் சீன்ஸ் |
| 12.00 | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | பெண்மணிக்காக | 11.30 | சினி சொய்ஸ் | இளைய காலம் |
| 12.30 | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கையர் சொய்ஸ் | மங்கை | 12.00 | அன்புடன் | அசத்தப்போவது யாரு? |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதியசெய்திகள் | 12.30 | | |
| 01.15 | சக்திமூவி | சக்திமூவி | சக்திமூவி | சக்திமூவி | சக்திமூவி | 1.00 | சக்திமூவி | சக்திமூவி |
| 04.00 | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | குட்டீஸ் சொய்ஸ் | 4.00 | ஜொலிவூட் எக்ஸ்பிரஸ் | திரைவானம் |
| 4.30 | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | 4.30 | குஷி ரைம் | ரிலாக்ஸ் ரைம் |
| 5.00 | கார்ட்டுன் | கார்ட்டுன் | கார்ட்டுன் | கார்ட்டுன் | கார்ட்டுன் | 5.00 | நலந்தானா | ரொப் 10 மூவீஸ் |
| 5.30 | அட்வென்சர் மான் | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | கிட்ஸ் டிராமா | 5.30 | ஊரும் உலகமும் | புதிய ராகங்கள் |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 6.00 | அறிவு | மின்னல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 6.30 | திமிதகதா | |
| 7.00 | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | முகூர்த்தம் | 7.00 | சக்தி சுப்பர் ஸ்டார் | |
| 7.30 | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | அஞ்சலி | 7.30 | | |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 8.00 | செய்திகள் | செய்திகள் |
| 8.30 | செல்வி | செல்வி | செல்வி | செல்வி | செல்வி | 8.30 | வா வாத்தியாரே வா | வா வாத்தியாரே வா |
| 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் | 9.00 | ஆங்கிலச் செய்திகள் | ஆங்கிலச் செய்திகள் |
| 9.30 | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | லக்ஷ்மி | மிக் நியூஸ் | 9.30 | நிஜத்தின் நிழல் | சிதம்பர ரகசியம் |
| 10.00 | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | மலர்கள் | லக்ஷ்மி | 10.00 | களம் | 24 சீரிஸ் |
| 10.30 | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | நெஞ்சம் மறப்பதில்லை | மலர்கள் | 10.30 | நைற் மூவி | இசைச் சாரல் |
| 11.00 | | | | | நைற் மூவி | | | திரை மசாலா |
| 11.30 | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | புத்தம் புதிசு | | 11.30 | | புத்தம் புதிசு |
| 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 12.00 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25

# பழிவாங்கும் உணர்வு



அமெரிக்காவின் சாளஸ்டன நகர பொலிஸ் நிலையம்.

கலை 11மணி இருக்கும். பொலிஸ் நிலைய அதிகாரி சக பொலிஸ் சேவகர்களைக் கூப்பிட்டு கடூரமான வார்த்தைகளில் ஏசிக் கொண்டிருந்தார். பத்து இருபது நிமிடங்களாக இடம் பெற்ற அந்த கடூரமொழிச் சவுக்கடியினால் பொலிஸ்காரர்களின் முகங்கள் ஜிவ்வென சிவந்து பின்னர் வெளிறிப் போயின.

இதுவரை பல கொலைகள் இடம் பெற்று விட்டன. அதுவும் சிறுவர் சிறுமியர் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, மிகவும் கொடூரமாக, உடலின் பிஞ்சுத் தசைகள் சிதறி சின்னாபின்னமாகும் வரை பொல்லுகளாலோ சவுக்கு களாலோ தாக்குப்பட்டு, நினைத்தாலே உடல் வெடவெடக்கும் விதமாக உடற் சதைகள் சிதைக்கப்பட்டு சாகடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

"ஓ! ஜீசஸ்! ஜீசஸ்!" என்று பார்ப்பவர்கள் கதறி விடுவார்கள். அவ்வளவு கோரமான தாக்குதல்கள்.

"அடப்பாவி! இதை செய்த நீ மாபெரும் சைத்தான் தான்!" என்று அவர்கள் வாய்விட்டு அலறினார்கள்.

பொலிஸ் கமிஷனர் கொதிப்படைந்து விட்டார். பொஸ்டன் நகர பொலிஸ் நிலைய அதிகாரியை 'கிழி கிழி' யென கிழித்து விட்டார்.

இந்த இரண்டு வார காலத்தில் நான்கைந்து கொலைகள் இடம்பெற்றுவிட்டன.

அப்படியிருக்க நேற்றும் நெஞ்சை நடுங்கச் செய்யும் ஒரு கொடூரம் நிகழ்ந்து விட்டது.

கமிஷனரின் கொதிப்பிற்கு அதுதான் காரணம். ஸ்டேசன் அதிகாரியை ஒரு பிடிபிடித்தார். அவர் நிலைய பொலிஸ்காரர்களை பிடித்தார். ஸ்டேசனே அமளி துமளி பட்டுவிட்டது.

நேற்று காலையில் அந்த கொடூரமான நிகழ்வு இடம் பெற்றது.

மாலை இருள் இன்னும் கவிழ்ந்து விடவில்லை. மாரிகாலமானதால் பனிமழை வருஷிக்க ஆரம்பித்திருந்தது.

இருபுறமும் மரங்கள் அடர்ந்த நெடிய பாதை. தொலைவிற்கு ஒன்றாக இருக்கும் வீடுகளுக்கு இடையில் மரங்கள் அடர்த்தியாகவுள்ளன.

அந்தப் பாதையில் பெரிய கனரக வாகனம் ஒன்று மின்னல் வேகத்தில் வந்து கொண்டிருக்கிறது.

வீதிக்கு கொஞ்சம் தள்ளி, ஒரு சரிவான பள்ளத்தில் மரமொன்றுடன் கட்டப்பட்ட நிலையில் ஏதோ ஒன்று கிடப்பதை டிரைவரின் கண்கள் கண்டு விட்டன.

அது என்ன?

அவனுக்கு தீட்சண்யமான கண்கள். அது ஒரு சிறுமியின் சடலம் என்பதை அவை கண்டு கொண்டன.

'சரே'லென பிரேக் அடித்தான்.

பக்கத்தில் அமர்ந்திருக்க கிளீனரைப் பார்த்து "யப்பா ஒரு பெண் தலைமட்டும்தான் தெரியுது. நெருங்கிப் பார்ப்போமா?"

கிளீனர் பற்களைக் காட்டினான். பெண் தன்னந்தனியாக நிற்கிறாள் என்று தப்புக் கணக்கு போட்டு விட்ட அவன், 'தட தட'வென கீழே குதித்து ஓடவும் தயாராகி விட்டான்.

"அடப்பாவி! அது சடலம் போல தெரியுதடா இறங்காதே" என்று டிரைவர் கீச்சுக்குரலில் கத்தவும் கிளீனர் அடித்து வைத்த சிலைபோல சீற்றிலேயே குந்திக் கொண்டான்.

டிரைவர் புத்திசாலி. இந்த பகுதியில் அடிக்கடி இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதை அறிந்திருந்தான். அதனால்தான் அந்த காட்சியைக் கண்டதும் சடலம் என்றான்.

ஆனால், அது உண்மையிலே சடலம்தான். மரம் ஒன்றுடன் கட்டப்பட்டுக் கிடக்கிறது.

மனிதாபிமான உணர்வுடன் இறங்கிப் பார்த்தால் ஏதேனும் ஆபத்தில் சிக்கிக் கொள்ள வேண்டி வரும் என்று அவன் புத்திசாலித்தனமாகவும் நினைத்தான். அதனால்,

தனது கைத்தொலைபேசியை எடுத்த அவன் பிரதேச பொலிஸ் நிலையத்தின் எண்களை அழுத்தினான்.

தகவல் பறந்தது.

வண்டியும் விரைந்தது.

***

அலறிக் கொண்டு வீதியில் பறந்த பொலிஸ் வாகனங்கள் ஸ்தலத்தை அடைந்தன.

பெய்ன். மெழுகு போன்ற ஓர் அழகான சிறுவன். அவனுக்கு 7 வயதுதான் ஆகிறது. மரம் ஒன்றுடன் சேர்த்து கட்டப்பட்டிருந்தான். உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை அவன் உடலின் சதை பிய்ந்து கிடக்கின்றது. கடுமையான ஏதோ பொருளினால், அது தடியாகவோ இரும்புக் கம்பியாகவே இருக்கலாம். அதனால் கடூரமாக தாக்கப்பட்டு உயிர் இழந்திருக்கின்றான்.

பகல் பொழுதில் பாடசாலை விட்டு வரவேண்டிய சிறுவன் மாலையாகியும் வீடு வந்து சேரவில்லை என்று அவனுடைய பெற்றோர் சொற்ப நேரத்திற்கு முன்னர் தான் முறையிட்டு சென்றார்கள். பெய்னின் கோரமான சடலத்தைக் கண்டு அவனுடைய பெற்றோர் மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அலறினார்கள், கதறினார்கள். கொலையாளி ஏன் இப்படி வெறித்தனமாக கொலை செய்திருக்கிறான்? பொலிஸ் திகிலடைந்தது.

இதுவரை இடம்பெற்ற பல கொலைகளும் இவ்வாறே கோரத்தனமாக செய்யப்பட்டிருந்தன.

ஒருவேளை கொலையாளி மனநோயாளியாக இருப்பானோ? ஒரு பொலிஸ்காரன் கேட்டான். தான் மிகவும் புத்திசாலிதனமாக கேட்பதாக அவனுக்கு நினைப்பு. அதிகாரி கோபத்தில் இருந்தான்.

"பூல்! பூல்! என்று கத்திய அதிகாரி சுயபுத்தியுள்ள எவண்டா கொலை செய்கின்றான்? அதிலும் இந்த சின்ன பிஞ்சுகளை" என்று எரிச்சலுடன் சத்தம் போட்டான். அவன் கடுகடுப்புடன் இருந்தான்.

இவன் சிறுவன் 3 நாள்களுக்கு முன்னர் கொலையுண்டவள். ஒரு சிறுமி அவளுக்கும் இதே வயதுதான். அவள் பெயர் டிரேசி. அந்த இளம் பிஞ்சும் கிடந்த கோலம் அனைவரையும் நடுங்கச் செய்தது. கொலையாளி இந்த அநியாயம் செய்திருக்கிறான் என்ற கேள்வி காண்பவர்களின் உள்ளங்களில் இரத்த பீய்ச்சியடிக்கும் வலியுடன் எழுந்தது.

டிரேசி அணிந்திருந்த கவுனும் உள்ளாடையும் பீஸ் பீஸாக கிழிக்கப்பட்டு நார் நாராக சிதறிக்கிடக்கின்றன. மலர்போன்ற பிஞ்சு உடல் கனமான கயிற்று சுருளினால் அடித்து பிய்த்தெறியப்பட்டிருந்தது. நாசி கடித்து குதறப்பட்டிருந்தது. உதடுகளுக்கும் அதே கதிதான். பற்கள் உடைந்து நொறுக்கப்பட்டிருந்தன.

அடிக்கடி புத்திசாலித்தனமான கேள்விகளை கேட்கும் ரிச்சர்ட் என்ற அந்த பொலிஸ்காரன் அப்போதும் ஓர் அறிவு பூர்வமான கேள்வியைக்கேட்டான்.

"புலி ஏதும் தாக்கி கொன்றிருக்குமோ?"

அதிகாரி அவனை எரிச்சலுடன் பார்த்தான்.

" இருக்கும் இருக்கும். முதலில் சிறுமியைப் பிடித்து மரத்தோடு கட்டிப்போட்டதன் பின்னர்தான் கடித்து குதறியிருக்கிறது." என்று கோபமாகச் சொன்னான்.

அடா! எவ்வளவு முட்டாள்தனமாக பேசிவிட்டோம் என்பதை ரிச்சர்ட் அப்போதுதான் உணர்ந்தான். டிரேசி மரத்துடன் பிணைந்து கட்டப்பட்டுத்தான் இவ்வளவு பெரும் சித்திரவதைக்குள்ளாகியிருக்கிறாள் என்பதை அவன் கண்டான்.

பொஸ்டன் நகரில் பவர்ஹில் பிரதேசத்திலே இக்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன. மக்கள் கிடுகிடுத்துப் போய்விட்டார்கள். திகிலால் விறைத்துப்போய்விட்ட அவர்கள் தமது பிள்ளைகளின் அருகிலிருந்து அங்குமிங்கும் அசையவே நடுங்கினார்கள்.

க்ரைம்

எழுதுவது கே. வி.

பவர்ஹில் பிரதேசமே இப்படி நடுங்கத் தொடங்கிவிட்ட நிலையில்தான் பொலிஸ் நிலையத்தில் அமளி துமளியான நிலை தோன்றியது. பொலிஸ்நிலைய அதிகாரி இரு கைகளாலும் தலையை தாங்கிக் கொண்டு எரிச்சலும் கடுகடுப்பும் பெரும் சோகமுமாக இருந்த வேளையில்தான் அந்த வயதான அம்மணி திருமதி றோஸ்மேரி பொலிஸ் நிலையத்தினுள் பிரவேசித்தாள்.

"மெடம் என்ன வேண்டும்?"

வாசலில் நின்று கொண்டிருந்த பொலிஸ்காரன் கேட்டான்.

மெடம் திகிலடைந்த பட்சிபோல் இருந்தாள்.கண்களை படபடவென அடித்துக் கொண்ட அவள், இன்ஸ்பெக்டருடன் பேசவேண்டும், பேசவேண்டும் என்று பதிலளித்தாள்.

தொலைஞ்சுதுடா இன்னொரு கேஸ் வந்துவிட்டது என்று பதறிப்போன பொலிஸ்காரன் தலையில் கைவைத்துக் கொண்டிருந்த அதிகாரியிடம் ஓடி தகவலைச் சொன்னான்.

"வரச்சொல்" மெடம் அதிகாரியின் அறைக்கு அழைத்து வரப்பட்டாள்.

மெடம் சொன்ன தகவல் அதிகாரியை துடித்தெழச் செய்தது. அவர் மிதிபட்ட சர்ப்பமென சுருண்டெழுந்து நிமிர்ந்து நின்றார்.

மரங்கள் அடர்ந்த ஓரிடம். அதனூடே ஒரு செம்மண் பாதை. மெடம் அவ்வழியாக நடந்து வருகிறாள்.

மரங்களிடையே சரசரவென சப்தம் கேட்கிறது. என்னது? என்று எட்டிப் பார்த்தபோது

ஒரு சிறு ஓடை மரங்களினூடே வளைந்து செல்கிறது. அதன் அருகில் குந்திக்கொண்டிருந்த ஒரு வாலிபன் கைகா[illegible] முகங்களை கழுவிக்கொண்டிருக்கின்றான். அரைக்காற்சட்டை அணிந்தருந்தான். நல்ல பருமனான சதைப்பிடிப்பான ஆசாமி.

" மகனே! இந்த வழியாக ரயில்வே ஸ்டேசனுக்குப் போகலாமா?" மெடம் கேட்டாள். அவன் சட்டென எழுந்து நின்றான். அவனுடைய பருப்பமான தொடைகளில் இரத்தம் வழிந்து கொண்டிருப்பதை மெடம் கண்டாள். அதையே அவன் கழுவிக்கொண்டிருந்தான். மெடம் திடுக்கிட்டாள். உடல் வெடவெடத்து ஜில்லென குளிரோடி நடுநடுங்கத் தொடங்கியது. அதற்குள் அவன் ஒரே ஓட்டமாகஓடி ஒரு மாய மனிதனைப்போல மறைந்து போனான். பொலிஸ் அதிகாரியிடம் மெடம் இந்த விவரங்களை சொன்னாள் . மெடத்தையும் ஏற்றிக்கொண்டு வாகனங்கள் பறந்தன. அவள் காட்டிய இடம் சுற்றி வளைக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான பொலிஸாரை பிற நிலையங்களில் இருந்து வரவழைத்து இந்த சுற்றி வளைப்பு இடம் பெற்றது.

ஓரிடத்தில்-

நான்கு வயதான ஹோரெஸ் முல்லன் எனும் சிறுவனின் சடலம் கிடைத்தது. மரத்துடன் கட்டப்பட்டிருந்த அந்த பிஞ்சு உடலில் 31 படுபயங்கரமான காயங்கள் இருந்தன.

ஆ! வென வாய் பிளந்த நிலையில், பொலிஸார் விறைத்து போயினர்.

மெடம் கண்ட அந்த பருப்பமான வாலிபன் நீரோடையின் ஒரு முனையின் பாறையொன்றின் அடியில் முடங்கி மறைந்து கொண்டிருந்தான். அவனை பிடித்ததுமே பொலிசார் நைநையென புடைத்து நொறுக்கிவிட்டார்கள். அவ்வளவு கோபத்தில் அவர்கள் கொதித்துப் போயிருந்தார்கள்.

***

கொலையாளியின் பெயர் பொம்ரோஸ்.

(24 ஆம் பக்கம் பார்க்க)



# நிம்மதி

அரசர் ஒருவர் நிம்மதியாக ஓய்வெடுக்க ஆசைப்பட்டார். அந்தப்புரத்தை விட்டுவிட்டு, ஆற்றங்கரையில் ஓர் அழகான மாளிகை கட்டி ஓய்வெடுத்துவந்தார்.

பகலில் வீசிய இதமான தென்றலும் கண்ணுக்கு எட்டிய பசுமை அழகும் அவரை மிகவும் ஈர்த்தன.

ஆனால், இரவில் அவருக்கு தூக்கம் வராமல் ஒரு இம்சை. ஆற்றில் உள்ள தவளைகளின் 'கொர்...' சத்தம்தான் காரணம்.

அரசர் படைவீரர்களை அழைத்தார். தவளைகளைக் கொல்ல உத்தரவிட்டார். படைவீரர்களும் கைமேல் காரியத்தை முடித்தனர்.

ஆனால், அப்புறமும் தவளைகளின் சத்தம் ஓயவில்லை. ஓய்வில்லாமல் பலமாகத் தொடர்ந்தது. எரிச்சல் அடைந்த மன்னர் படைத்தலைவனிடம் விளக்கம் கேட்டார்.

''மன்னா...காயம்பட்ட தவளைகள் வலியால் கத்துகின்றன'' என்றான் படைத்தலைவன்.

''அந்தத் தவளைகளையும் கொல்லுங்கள்'' என்று கட்டளையிட்டார் மன்னர்.

வீரர்களும் அப்படியே செய்தனர். ஆனாலும், தவளைச் சத்தம் குறையவில்லை. மன்னர் கொந்தளிப்பின் உச்சத்தில் இருந்தார்.

''மன்னா மன்னிக்கவேண்டும். இந்த ஆற்றில் இருந்த தவளைகளைக் கொன்று விட்டோம். நேற்று இரவு அணையிலிருந்து ஆற்றுக்கு வெள்ளம் வந்தது. அதில் நிறையத் தவளைகளும் வந்துவிட்டன'' என்று கைபிசைந்து நின்றனர் படைவீரர்கள்.

மன்னருக்கு கோபம் தலைக்கு ஏறியது. ''தவளைகளை ஒரேயடியாக ஒழிக்க என்ன வழி? நான் நிம்மதியாகத் தூங்கவே முடியாதா?'' என்று கேட்க படைத்தலைவன் பேசாமல் தயங்கியபடி நிற்க - அங்கு எடுபிடி வேலை செய்த முதியவர் ஒருவர் ''முடியும் மன்னா'' என்றார்.

மன்னர் வியப்பாகப் பார்த்தார்.

''மன்னிக்கணும்... அரசே'' என்ற பெரியவர், சிறிது பஞ்சை எடுத்து வந்தார். அரசரின் இரு காதுகளிலும் வைத்தார்.

''நம்மைச் சுற்றி நடக்கும் சில விசயங்களை நாம் பொறுத்துக்கொள்ளவேண்டும் அல்லது புதுவழிகளில் அவைகளைச் சமாளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் வீண்கஷ்டம் நமக்குத்தான்'' என்றார் பெரியவர்.

# ரோஜாப்பூ உதடுகள்

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நெயில் எனாமல்

லிப்ஸ்டிக்கின் நிறத்திற்குப் பொருத்தமான நெயில் எனாமல் தடவ மறக்கவேண்டாம். தற்போது ஷிமர்தான் பெரிதும் விரும்பப்படுவதால் கிளிட்டர் உள்ள, அடர்த்தியான நிறங்களைத் தேர்ந்தெடுங்கள்.

* பகல்வேளையில் நச்சுரல், இரவில் அடர்த்தியான நிறங்களில் நெயில் எனாமல் தடவுங்கள். 2 நிறங்களை மிக்ஸ் செய்து புதிய நிறங்களை உண்டாக்கலாம்.

* வெளிர் நீலம், பிங்க், பச்சை, சிவப்பு, ஆரஞ்சு போன்ற பேஸ்டல் மற்றும் மெட்டாலிக் நிறங்களைத் தேர்ந்தெடுங்கள்.

* வெண்ணிறமானவர்கள் பிங்க், பீச், கோதுமை நிறமுடையவர்கள் பிரவுண், பீச் மற்றும் கறுப்பு நிறமுடையவர்கள் சிவப்பு, மெரூன் போன்ற அடர்த்தியான நெயில் எனாமல் உபயோகிப்பது பொருத்தமாக இருக்கும்.

* நகங்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் எனாமல் பூச்சும் எடுப்பாக இருக்கும். எனவே, வாரம் ஒரு தடவை மேனிக்யூர்செய்துகொள்ளுங்கள். மேலும் மொய்சரைஸிங் ஹேண்ட்க்ரீம் மூலம் மசாஜ் செய்யுங்கள்.

* நகச்சாயம் மினுமினுப்பாகவும் நீண்ட நாட்கள் தாக்குப்பிடிக்கவும் மேற்பூச்சு பூசவும்.

* நகங்களில் அடிக்கடி நெயில் பாலிஷ் ரிமூவரை பயன்படுத்தக்கூடாது. இது ஸ்ட்ராங்கானது. அசிட்டோன் வகை நெயில் பாலிஷ் ரிமூவரை தவிர்த்து விடுங்கள்.

# அடுக்குமாடிக்...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை10.30 மணியளவில் திடீரென்று வீடு லேசாக குலுங்கியது.'என்ன நடந்துவிட்டதோ?' என்று பயந்தபடி வெளியே வந்தேன். அங்கு எந்த அதிர்வும் இல்லை. அப்புறம்தான் மேல் வீட்டில் இருப்பவர்களின் ஓட்டை வாஷிங் மெஷின்தான் அதிர்வுக்கு காரணம் என்பது புரிந்தது. அது மட்டுமா... மேல் வீட்டுக்காரம்மா அம்மியில் அரைக்கும் போது எழும் சத்தம் இருக்கிறதே, காதுகளில் பஞ்சைத் திணித்தாலும் சத்தம், பாடாய் படுத்தும். இவற்றையெல்லாம் சொல்லிப் பார்த்தோம். அவர்கள் எதையுமே லட்சியம் செய்யவில்லை. அவர்களுடன் சண்டை போட்டு காவல் நிலையம் வரை செல்ல எனக்குச் சம்மதமில்லை. வேறு வழியே இல்லை என்ற நிலையில் இதையெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

கார், மோட்டார் சைக்கிள் பார்க்கிங் விஷயத்திலும் அடிக்கடி பிரச்சினைகள். பார்க்கிங் பிரச்சினை ஜீவமரணப்போராட்டம் போலாகிவிட்டது. உங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வேறுயாராவது வாகனத்தை நிறுத்திவிட்டுப் போய்விடுவார்கள். உங்கள் காரை நிறுத்த முடியாமல் நீங்கள் வேறு இடம் தேடி திண்டாட வேண்டி இருக்கும்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள இன்னொரு பெரிய தொல்லை, அக்கம் பக்கத்து வீடுகளில் வசிப்போர் தங்களுக்குள் போட்டுக் கொள்ளும் குடும்பச் சண்டை. கணவன்-மனைவிக்கிடையே ஏற்படுகிற இந்த மாதிரி சண்டைகள், ஒரு கட்டத்தில் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு வன்முறைச் சம்பவமாக மாறிவிடுவது உண்டு.

எங்கள் பக்கத்து வீட்டிலிருக்கும் அந்த நபர் மிகப் பெரிய நிறுவனத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றுகிறார். நல்ல சம்பளம், கார், அளவான குடும்பம் என வரம் வாங்கி வந்த வாழ்க்கை அவருக்கு. ஆனால் இந்த வரத்திலும் ஒரு பெரிய சாபம் கலந்தேஇருந்தது. அதுதான் கணவன், மனைவிக்கிடையேஅடிக்கடி ஏற்படும் சண்டை. அவர்கள் இருவரும் சண்டை போட ஆரம்பித்தால் எங்கள் அடுக்கு மாடி குடியிருப்பு வளாகமே அமைதியாகிவிடும். ஒரு கட்டத்தில் பொலிஸார் வீட்டுக்குள் நுழைந்து சமரசப்படுத்தும் அளவுக்கு நிலைமை கை மீறிவிட்டதென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

மாநகரங்களைப் பொறுத்தவரை ஓர் அங்கமாகி விட்ட நிலையில், உங்கள், தினசரி வாழ்க்கையை இன்பம் நிறைந்த தாக்கிக் கொள்ள, கீழே குறிப்பிடப்பட்டுள்ள எளிய நடைமுறை உண்மைகளை அடுக்குமாடி பகுதியில் வசிப்பவர்கள் பின்பற்றுவது விரும்பத்தக்கது.

**கொஞ்சம் முயற்சி பண்ணிப்பாருங்களேன்**

* இசையை மிதமான சத்தத்தில் மட்டுமே ரசியுங்கள். அக்கம் பக்கத்தில் மாணவர்களும் நோயாளிகளும் இருப்பதை கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

* வீட்டில் உங்கள் பேச்சுக்குரல் நான்கு சுவர்களைத் தாண்டாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வீரப்பா பாணியில் சிரிப்பதைத் தவிர்த்து விடுதல் நலம்.

* உடன் வசிப்பவர்களுடன் நட்புடன் பழகுங்கள். அதே சமயத்தில், சற்று இடைவெளியைப் பராமரித்தல் நலம்.

* காரணமில்லாமல் அக்கம் பக்கத்தினர் வீட்டுக்குள் நுழைந்து கரைச்சல் கொடுக்க வேண்டாம்.

* நேரம் கிடைக்கும் போது உடன் வசிப்பவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள்.

* ஈர உடைகளை உலர்த்தும் போது உங்கள் எல்லையை மீறாமல் பார்த்துக்கொள்ளுங்கள். உள்ளாடைகளை எல்லோருக்கும் தெரியும்படி காயப்போடாதீர்கள்.

* வீட்டுக்குள் செல்லும் பைப்புகள் மீது கவனமாக இருங்கள். இவற்றில் ஒழுகல் ஏற்பட்டால் அது உங்கள் வீட்டுச்சுவரை மட்டுமின்றி கீழ் வீட்டையும் பாதிக்கும்.

* பால்கனி சுவர் மீது பூந்தொட்டிகளை வைக்காதீர்கள். கீழே விழுந்து யாருடைய மண்டையையாவது பதம் பார்த்துவிடும். அதற்கென விற்கும் ஸ்ராண்டுகளை பயன்படுத்துங்கள்.

* வாகனங்களை நிறுத்தும் சமயத்தில் அடுத்தவர்களின் நலனையும் கவனத்தில் கொள்ளுங்கள். உங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே வாகனத்தை நிறுத்தவும்.

* குடியிருப்போர் நலச் சங்கத்துக்குச் செலுத்த வேண்டிய மாதாந்த சந்தாவை செலுத்த தாமதிக்காதீர்கள்.

இந்தக் கருத்துக்களை எல்லாம் கவனமாகப் பின்பற்றினால் அடுக்குமாடி குடியிருப்பு வாழ்க்கை ஆனந்தமாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

# ராசி பலன்

**13-08-2007 முதல் 19-08-2007**

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்

அச்சுவினி, பரணி,கார்த்திகை 1

காரியதடைவிலகும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. வீட்டில் ஓரளவு அமைதி இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் அதிகம் காட்டார். பகைவரால் தொல்லையுண்டு. உடல்நலம் பாதிக்கலாம். திருமணவாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது.தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### ரிஷபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1, 2

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவிசெய்வர்.

### மிதுனம்

மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3

காரியத்தடை இருக்கும்.சிறு பிரயாணம் அமையலாம். பணம் இருக்காது. உறவினர்,அயலவர் உதவி செய்வர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பகை வரால் தொல்லையுண்டு.உடல் நலம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு.தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### கடகம்

புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. குறுந்தூரப் பிரயாணம் அமையும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வசிப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு . தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறைமுன்னேற்றம் உண்டு. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

### சிங்கம்

மகம், பூரம், உத்தராடம் 1

காரியதடை இருக்கும். வாரத்தின் பிற்பகுதியில் பிரயாணம் அமையலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவிசெய்வர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி நிலவாது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவ ரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவிசெய்யார். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகஎண்ணம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

### துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியசித்தியுண்டு.பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வசிப்பிடம் அமையலாம்.மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகஎண்ணம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள்நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

### விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். வார பிற்பகுதியில் பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதிஇருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியதடை விலகும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

### மகரம்

உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம்1,2

காரியத்தடைஇருக்கும். பணப் பற்றாக் குறைநிலவும். உறவினர் அயலவர் உதவி செய்வர். தாய் நலமில்லை தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக உணர்வுமேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களுக்கு நல்லபலன் இல்லை.

### கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத்தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விலகி இருப்பர்.பெற்றோர் நலமில்லை. வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### மீனம்

பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி

காரியசித்திஉண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகஎண்ணம் அதிகரிக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.




# கோமாரியும் பிரிட்டனும்

பிரிட்டனில் மாடுகளை தாக்கும் கோமாரி நோய் தீவிரமாக பரவி வருவதை அடுத்து இது குறித்து விசாரணை நடத்துமாறு பிரிட்டிஷ் அதிகாரிகள் முடுக்கி விடப்பட்டுள்ளனர்.

இந்த நோய் பரப்பும் கிருமிகளைப் பயன்படுத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு தனியார் நிறுவனங்கள் மற்றும் அதனோடு தொடர்புடையதாக கருதப்படும் அரசு உதவி பெறும் மற்றொரு ஆய்வகம் ஆகியவற்றில் பிரிட்டிஷ் கால்நடைத்துறை சோதனை நடத்தியுள்ளது.

இதையடுத்து இந்த மூன்று நிறுவனங்களையும் மூடுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நோய் பாதிப்புக்கு உள்ளான பகுதியில் இருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் இந்நிறுவனங்கள் அமைந்துள்ளன.

இதற்கிடையே மூடப்பட்ட அரசு உதவி பெறும் நிறுவனத்தின் தலைவர் கூறுகையில்,

''பாதுகாப்பு வலையத்தை மீறி இந்த நோய்க்கிருமி வெளியில் வருவதற்கு எந்தவித வாய்ப்பும் இல்லை'' என்கிறார்.

''கோமாரி நோய்க்கு காரணமான கிருமியை கடந்த பல வாரங்களாக இந்த நிறுவனங்களின் விஞ்ஞானிகள் ஆராய்ச்சிக்கு பயன்படுத்தவில்லை. இந்தநோய் குறித்த எங்களின் ஆராய்ச்சி முறைகளில் எவ்வித தவறும் இல்லை என்பது முதல் கட்ட விசாரணையின் போது தெரிய வந்துள்ளது'' என்றும் கூறினார்.

''கடந்த 39 மணி நேர விசாரணையில் அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து உள்ளோம்'' என நிறுவனத்தின் இயக்குநர் டேவிட் பிலாண்ட் தெரிவித்தார்.

''தற்போது இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளில் காணப்பட்ட கிருமிகள் புதியவை அல்ல. 40 ஆண்டுகளுக்கு முன்னரே பிரிட்டனின் உயிரியல் ஆராய்ச்சியாளர்களால் அவை கண்டு பிடிக்கப்பட்டிருந்தன'' என பிரிட்டனின் வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது. 6 ஆண்டுகளுக்கு முன்னர் இது போன்ற நோயினால் பிரிட்டனில் மாடுகள் இறந்தபோது கோடிக்கணக்கான வர்த்தகம் பாதிக்கப்பட்டது.

நிலைமை தீவிரமானதை அடுத்து பிரதமர் கார்டன் பிரௌவுண் தனது விடுமுறையை ரத்து செய்ததுடன், விசாரணை சம்பந்த மான மறு ஆய்வு மாநாட்டை கூட்டியுள்ளார். இதற்கிடையே, ஐரோப்பிய யூனியன் அமைப்பு பிரிட்டனில் இருந்து இறைச்சி இறக்குமதிக்கு தடை விதித்துள்ளது.

# இரட்டையர் திருவிழா



உலகில் மிகப் பெரிய இரட்டையர் திருவிழா அமெரிக்காவின் ருவின்ஸ் நகரில் நடத்தப்பட்டது. நகரின் பெயரிலேயே 'ருவின்ஸ்' இருப்பது எதேச்சையான ஆச்சரியம்! இந்தத் திருவிழாவில் ஏகப்பட்ட இரட்டையர்கள் (ருவின்ஸ்) குவிந்துவிட்டனர். அதில் இந்த ஆண்டின் சிறந்த இரட்டையர்கள் தான் படத்தில் புன்னகைக்கின்றார்கள்.

லிண்டா, ரா‌ரா என்பது இவர்கள் பெயர்கள். இவர்கள் தூக்கி வைத்திருக்கும் சிறுமிகளும் இரட்டையர்கள் தான். உலக அளவில் ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையில் இரட்டையர்கள் கூடியது இங்குதான் என்பது குறிப்பிடத்தக்கது.



உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.
No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo

GANESHA
Vidio Vision & communication
Colombo-06
Tel: 2366213 Fax: 2366213
Email: gajesh2003@yahoo.com

பழுதுபார்த்தல்
TV, VCD, DVD, Hifi sets, AMP Mobile Phone, Digital Video & Still Cameras, Washing Machine, Micro Wave, Micro & Electric Oven
இப்பொழுது வெள்ளவத்தையில்
MICROW TECK
55F, Manning Place, Wellawatte,
Colombo-06. Tel: 5754416, 5663309

Advance Car Audio
Car Security Systems
Roof mount TV with DVD
Speakers
Sunvisor TV / DVD
Rear View Camera
Headrest TV
Advance Car Audio
TV,DVD, VCD, CD,MP3, Radio
TV DVD, VCD, MP3 Radio & USB input
TV Conversions for ANY NAVIGATION SYSTEMS
12 MONTHS INTEREST FREE For Credit cards
ADVANCE Car Audio
No. 7, Waidya Road, Dehiwala.
0777 9 7777 - 0115623399

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2007, ஓகஸ்ட் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது